ஆனந்த போதினி

தொகுதி ௨ பகுதி-௰௨

மார்கழி

௨ 1928 1929 ~~௰௨~~ 12

JL
Y592 @ ma211,N 27 CH
N28 · 2 · 12
129808

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளி[யீடு]

[ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - ௨ | விபவ வருஷ - மார்கழி மீ |
|---|---|


முருகன் துணை.

பன்னிருகண் மலர்மலர்ந்த கடலேஞானப் பாஞ்சுடரே யாறுமுகம் படைத்தகே
என்னிருகண் மணியேயெந் தாயேயென்னை ஈன்றனே யென்னாசே யென்ற
மின்னிருவர் புடைவிளங்க மயின்மீதேறி விரும்புமடி யார்காண மேவுந்தேவே
சென்னியினின் னடிமலர்வைத் தென்னைமுன்னே சிறுகாலே யாட்கொண்ட தேவதேவே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### 'செங்குந்த மித்திரன்' இரண்டாவது ஆண்டு நிறைவு

இறைவன் அருளாலும் குலாபிமானிகளின் பேருதவியாலும் நமது மித்திரனுக்கு இம்மாதத்தோடு ஈராண்டுகள் நிறைவுறுகின்றன. இவ்வாண்டின் தொடக்கத்தில் 1200 சந்தா நேயர்களே இருந்தனரேனும், இப்பொழுது ஏறக்குறைய 3500 சந்தா நேயர்கள் இருப்பதைக் குறித்து யாம் மகிழ்கின்றோம். எனினும் ஆறு லக்ஷம் ஜனத்தொகையுள்ள நமது செங்குந்த சமூகத்தில் நமது குலப்பத்திரிகையை ஆதரிக்க 3500 பெயர்களே முன்வந்திருக்கின்றனர் என்பதை யோசிக்க அம்மகிழ்ச்சி எமக்குச் சிறிது குறைவுறுகின்றது. நமது சமூகத்தினிடையே மேலும்மேலும் கல்வியும் அறிவும் பெருகப் பெருக இக்குறை கூடிய சீக்கிரம் விலகுமென்றே நம்புகின்றோம். இது விஷயமாக நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினர் தமது பிரசார வாயிலாகவும் ஏனைய முயற்சிகளாலும் அரும்பாடுபட்டு வருகின்றனர். இம்முயற்சிகள் வீண்போகா வென்பதே எமது நம்பிக்கை.

இதோடு நமது மித்திரனின் ஒவ்வொரு சந்தாநேயரும் நமது குலத்துக்கு ஆற்றவேண்டிய கடமை ஒன்றிருக்கின்றது. அதாவது நமது மித்திரனை நம்மவரிடையே பெருவாரியாகப் பரவச் செய்வதேயாம். கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் மேம்பட்ட அநேக செங்குந்த குடும்பங்களுக்கு நமது மித்திரனின் பெயரே இன்னும் எட்டாமலிருக்கின்றது என்று நாம் சொல்வோமானால் அது அநேகருக்கு வியப்பை உண்டாக்கலாம். எனினும் இது உண்மையே. மேலும் நம்மவர் வசிக்கும் நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு நமது தலைச்சங்கத்தின் தொண்டுகளும், மித்திரனின் கட்டுரைகளும் இன்னும் பரவவில்லை என்பதும் உண்மையே. நமது தலைச் சங்கத்தினர் தீவிரமான பிரசாரம் செய்துகொண்டிருந்தும் இக்குறைகள் இருப்பதற்கு முக்கியகாரணம் யாதெனில், எல்லா இடங்களுக்கும் செல்வதற்கு அவகாசம் இன்மையும், உழைப்பதற்குப் போதிய தொண்டர்கள் இன்மையுமேயாம். இந்நிலையில் இப்பொழுது நமது மித்திரனை ஆதரிக்கும் சந்தாநேயர் ஒவ்வொருவரும் அடுத்த தை மாதம் தொடங்கும் மூன்றாவது ஆண்டிற்கும்

பாடும், குலமுன்னேற்றத்தில் அதிக ஊக்கமும் சிரத்தையுமுடையவர்களா யிருக்கிறார்கள்.

நமது இயக்கத்திற்குப் பிறப்பிடமாகிய தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த திருநாகேஸ்வரத்தில் முதலாவது மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்று நாட்டாண்மை திரு. பொன்னம்பல முதலியார் முதலிய பல தஞ்சை ஜில்லா வாசிகள் முயன்றார்களாயினும், நமது தலைச்சங்கத்தார், கொங்குநாட்டாரிஷ்டப்படி விட்டுக்கொடுக்கும்படித் தஞ்சை ஜில்லாப் பிரமுகர்களை இரண்டொரு காரணம்பற்றிக் கேட்டுக் கொண்டனர். அதாவது கீழ்ச் சமுத்திரக்கரையிலுள்ள செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலிய ஜில்லா வாசிகளுக்குப் பல காரணங்களால் ஒருவாறு பரஸ்பர உணர்ச்சியும் போக்குவருததும் இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் வாய்த்திருக்கின்றன. ஆனால் கொங்குநாட்டாருக்கும் மற்றைய நாட்டாருக்கும் பாரம்பரியங்களும ஒழுக்கம் முதலிய யாவும் ஒன்றாயிருப்பினும், அவ்வளவு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் இதுவரையில் வாய்க்காமலிருநதபடியால் அதை உண்டாக்க வேண்டு மென்பதேயாம். ஈரோட்டில் மகாநாட்டைக் கூட்டுவதற்கு மற்றொரு காரணமுமுண்டு. அதாவது ஈரோட்டிலும் அதன் சூழலிலும் பிரபலமான பாடல் பெற்ற சிவஸ்தலங்களிருப்பதால் மகாநாட்டிற்கு வரும் செங்குநதர்கள் அவற்றைத் தரிசிக்க வியலும் என்பதாம். அச்சிவஸ்தலங்களின் விபரங்களை இம்மாத மித்திரனில் வேறு இடத்தில் காணலாம்.

### செங்குந்தர்களின் கடமை.

நம்மவர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தவறாது திரளான பிரதிநிதிகளை (டெலிகேட்டுகளை) மகாநாட்டிற்கு அனுப்பி அது பூர்த்தியாகிறவரையில் இருநது அதைச் சிறப்புற நடத்திவைக்கச் செய்வது செங்குந்தர்களின் முதலாவது கடமையாகும். மகாநாட்டில் நம குல முன்னேற்றததின் பொருட்டு நாம் செய்யவேண்டிய தீர்மானங்களைக் கிளைச் சங்கங்களும், தனி நபர்களும் தங்களுக்குத் தோன்றிய அளவில் எழுதி முன்னதாகவே ஈரோட்டிலுள்ள தென்னிநதியசெங்குநதர் முதலாவது மகாநாட்டு வரவேற்புச் சபைக்கு அனுப்புவதையும மற்றொரு கடமையாகக் கொள்ள வேண்டும். தொண்டர் (வாலண்டியர்) படையில் வேலைசெய்ய விரும்புவோர்களும் வரவேற்புச் சபைக்கு முன்னதாகவே தெரிவித்துக்கொள்ள வேண்டும். ஷை வரவேற்புக் கமிட்டியார் மகாநாட்டிற்குவரும் பிரதிநிதிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தங்களால் கூடிய வரையில் செய்வார்கள். ஆயினும், இது முதல் முதல் கூடும் மகா நாடானபடியால் அனுபவமின்மையால் ஏதாவது குறைகள் நேருமாயின், அவற்றைப் பொறுத்து எவ்விதத்திலும் மகாநாட்டைச்சிறப்புறச் செய்வது நமது கடமைகளுள் ஒன்றாம்.

### டெலிகேட் கட்டணம்.

வரவேற்புக் கமிட்டியார்கள் மகாநாடுகளைச் சிறப்பாக நடத்தவேண்டுமென்று மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டு இராப்பகலாக ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் உழைத்து வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் நாலா பக்கங்களிலிருந்தும் வரவேற்புச்சபைக்கு வந்துகொண்டிருக்கும் கடிதங்களினால் மகாநாட்டிற்குப் பல ஆயிரக் கணக்கான பிரதிநிதிகள் வருவார்களெனத் தெரிகிறது. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் வரும் பிரதிநிதிகளின் பெயர், வரும வண்டி முதலிய விபரங்களை முன்னதாகவே வரவேறபுச் சபையாருக்குத் தெரிவிப்பது அனுகூலமானதாகும். உளளூரார் மாத்திரமே மகாநாட்டின் விசிடர்களாகக் கருதப் படுவார்கள். வெளியூர்களிலிருந்து வருவோருக்குச் சாப்பாடு இடவசதி முதலியவை செய்ய வேண்டியிருததலின வெளியூரா யாவருமே பிரதிநிதிகளாக எடுததுக்கொளளப்படுவார்கள். பிரதிநிதிகளின் கட்டணம ஒரு ரூபாயாகவும், வரவேற்புச் சபைக்கட்டணம மூன்று ரூபாயாகவும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இரண்டுநாள் சாப்பாட்டிறகும், மூன்று மகாநாடுகளை கண் காட்சிகள் முதலியவறறைப் பார்ப்பதற்கும், வசதியான இடம முதலிய எல்லாவறறிறகும் சேர்த்துப் பிரதிநிதிக் கட்டணம் ஒரு ரூபாயாக வைததிருப்பது மிகக குறைந்ததெனறே சொல்லவேண்டும். வெளியூர்களிலிருநது வருவோர் தங்கள் படுக்கையோடும் பாலையோடும் வருதல்வேண்டும். இதை அவரவர்கள் சொந்த சௌகரியததிற்கே எச்சரிக்கலானோம்.

### மாபெருங் கூட்டம்.

நமது மகாநாடுகளுக்கு நாலாபக்கங்களிலுமிருந்தும் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் வருவார்களெனத் தெரிகிறது. திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, செங்கறபட்டு, தென்னாற்காடு, வடவாற்காடு முதலிய ஜில்லாக்களில்



நமது குலப்பெருந் தொண்டர்கள் மகாநாட்டுச் சம்பந்தமாய் மிகுந்த ஊக்கத்தோடு செய்துவரும் பிரசாரத்தையும், வரவேற்புக்கமிட்டிக்கும் தலைச் சங்கத்திற்கும் ஒவ்வொரு நாளும் வந்து கொண்டிருக்கும் கடிதங்களையும நோககுங்கால் மகாநாடுகள் கூடும் சமயத்தில் இதுவரையில் எதிர்பாராத ஒருமாபெருஞ் செங்குந்தர் கூட்டம் குழுமுமென நம்புகிறோம். நம்மவர்களின் இத்தகைய பெருங்கூட்டம் எக்காலத்திலும் இதுவரையில் கூடியிரா தென்றே எண்ணுகிறோம். நம்மவர்கள் மகாநாட்டு விஷயத்தில் காட்டும் பேரூக்கமே நம் குலம் வெகுசீக்கிரம் முன்னேற்றமடையு மென்பதற்கு ஒருஅறிகுறியாகவிருக்கிறது. மகாநாட்டை முன்னிட்டு அநேக ஊர்களிலிருந்த கொடிய கக்ஷி வித்தியாசங்கள் அடியோடு ஒழிந்து போயின. இக் கூட்டம் ஒவ்வொருவரும் கண் காட்சியாக வேணும் கண்டானநதிக்கத் தக்கதேயாகும்.

### ஊர்வலம்.

'செங்குந்த நகர்' மகாநாட்டிற்கு எதிர்பார்க்கப்பெறும் பல்லாயிரக்கணக்கான செங்குநதகுலமக்கள் ஒருங்கு திரண்டு வந்து அமர்நது மகாநாடு நிகழ்ச்சிகளை நடத்தி ஆலோசனைகள் செய்து சீரிய தீர்மானங்களை முடிப்பதற்கு ஒரு பிரமாண்டமான சபா மணடபம் அமைக்கபெறுகினறது. அதைச் சுற்றிப் பரந்த வீதிகள் அமைககப்பெறறு அவற்றில் மகாநாட்டிற்கெனறு தண்ணீர்க் குழாய்களும், விளக்குகளும் விளங்கக கலைகாட்சிகளும, கடைகளும் நிரம்பி வெகு அழகாகச் 'செங்குநத நகர்' புதிதாக எழுமபிக் கொண்டிருக்கினறது.

வரவேற்புச்சபையாரின் முயற்சியை நோக்க மகாநாட்டின முதல் நாளாகிய தைமீ 7உகாலை சுமார் 6-மணிக்கு ஈரோடு ரயிலவே ஸ்டேஷனிலிருந்து மகாநாட்டுக் கொட்டகைக்கு மகாநாட்டுத் தலைவர்களையும், ஏனைய பெரியோர்களையும் அழைத்துச்செலலும் ஊர்வலம் வெகு விமரிசையாக நடத்தப் பெறுமெனறு தெரிகிறது.

### கொடி யேற்றம்.

ஊர்வலமாக அழைத்துவரப்பெறும் தலைவர்களும் பிரதிநிதிகளும கொட்டகை சேர்ந்ததும், காஞ்சீபுரம் மாஜி முனிசிபல சேர்மனும், மாஜி தேவஸ்தான கமிட்டி தலைவரும், மாஜி செங்கற்பட்டு ஜில்லா போர்டு மெமபரும் முனிசிபல் கௌன்சிலரும், பிரசித்திபெறற நங்குலத்தலைவருள் ஒருவருமாகிய உயர் சைவத்திருவாளர் மா. த. சாமிநாதமுதலியார் அவர்கள் நம் குலத்திற்குரிய கொடியேற்றல் விழாவைச்செய்வார்கள். இப்பெரியாரின் சரித்திரச் சுருக்கம் மித்திரனில் மற்றோரிடத்தில் வரையப் பெற்றுளது. நடுவே வரையப் பெற்றுள்ள ஈட்டியின் (குந்தத்தின்) ஒரு புறத்தில் கோழியும் மற்றொரு புறத்தில் வேங்கையும் அமையப் பெற்றதே நமது குலத்திற்குரிய கொடியாகும். அதன் வரலாற்றையும் பெருமையையும் திரு. முதலியாரவர்கள் எடுத்துக் காட்டுவார்கள்.

### மகாநாட்டின் நிகழ்ச்சி முறை.

மகாநாடு திறந்து வைக்கப் பெற்ற பிறகு, பிரசித்திபெற்ற வியாபாரியும் நம் குலத்தலைவருள் ஒருவருமான மகாநாட்டு வரவேற்புக்கமிட்டி தலைவர் உயர் சைவத்திருவாளர் V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் தமது வரவேற்புப் பத்திரத்தை வாசிப்பார்கள். பின்னர் மகாநாட்டுத் தலைவரவர்கள் தமது தலைமையுரை நிகழ்த்துவார்கள். இவை நிகழ்ந்தவுடன் கிளைச்சங்கங்களிலிருந்தும், தனி நபர்களிடமிருந்தும் மகாநாட்டு யோசனைக்கு அனுப்பப்பெற்றுள்ள தீர்மானங்களைப் பரிசீலனை செய்யும்பொருட்டு விஷயாலோசனைக்கமிட்டி ஏற்படுத்தப்படும். அவ்வாறு பரிசீலனை செய்யப் பெற்ற தீர்மானங்கள் மறுநாள் பகிரங்க மகாநாட்டிற்குக் கொண்டு வந்து நிறைவேறறப் பெறும். அத்தீர்மானங்கள் சம்பந்தமாக அநேக அறிஞர்கள அரிய உபந்யாசங்கள் செய்வார்கள். இபபெரிய மகாநாட்டு நிகழ்ச்சியின் இடையிடையே இதே முறையில் வியாபாரிகள் மகாநாடும் வாலிப மகாநாடும் நடைபெறும்.

### விசாரணை ஆபீஸ்.

வெளியிலிருந்து வரும் பிரதிநிதிகள் ஈரோட்டில் தேவையான விவரங்களை மகாநாட்டு கொட்டகையில் அமைக்கப்பெறும் 'விசாரணை ஆபீ'சிலும் தொண்டர்கள் மூலமாகவும் சுலபமாய்த் தெரிநது கொள்ளலாம். பிரதிநிதிகளுக்குவரும் தபால் முதலியவற்றைச் சிரமமின்றி விசாரணை ஆ[illegible]சின் மூலமாகப்பெற்றுக் கொள்ளும்படி ஏற்[illegible]கள் செய்யப்படும். மகாநாட்டுச் சம்பர[illegible] முன்னதாகத் தெரிந்து கொள்ளவே[illegible]தா எல்லா விஷயங்களையும் ஈரோ[illegible]மைக்கப்பெற்றுள்ள (முதலாவது)[illegible]ய செங்குந்தர் மகாநாடடுச் சிறபபுக்காரியதரிசிக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். இம்மகாநாட்டிற்கு ஒவ்வொரு

ஊரிலிருந்தும் கிளைச் சங்கமிருப்பினும் இல்லாவிடினும் பல உண்மைச் செங்குந்தர்கள் பிரதிநிதிகளாக வரலாம். ஒரு ரூபாய் பிரதிநிதிக் கட்டணமாகச் செலுத்திப் பெறும் டிக்கட்டை வைத்துக்கொண்டு மேற்கண்ட மூன்று மகாநாடுகள், கண்காட்சி முதலிய எல்லாவற்றிற்கும் போகலாம்.

### பெண் பிரதிநிதிகள்.

மகாநாடுகளுக்குப் பெண்மணிகளும் பிரதிநிதிகளாகவேனும் விசிடர்களாகவேனும் வரலாம். அவர்களுக்குக் கொட்டகையில் பிரத்தியேகமாக இடம் விடப்படும்; பிரதிநிதிக் கட்டணம் முதலியவையும் விதிக்கப்படமாட்டா.

### கண்காட்சி.

மகாநாட்டுக் கொட்டகைக்கு அடுத்தாற்போல விவசாயம், பட்டெடுத்தல், நூல் நூற்றல், நெசவு, சாயம் போடுதல் முதலியவற்றின் சம்பந்தமான சாமான்களும், பலவிதமான துணிகளும், பல சமூகத்தார் பிரசுரித்துவரும் வாரப்பத்திரிகை மாதப்பத்திரிகை முதலியவைகளும் இன்னும் பல சாமான்களும் கண்காட்சிச் சாலையில் வைத்திருப்பதன்றிச் சுகாதாரம், ஐக்கிய நாணயசங்கம், நெசவு, சாயம் தோய்த்தல் முதலிய விஷயங்களைப் பற்றிய உபந்யாசங்களும் அவ்வத் துறைகளில் தேர்ந்தவர்களைக் கொண்டு நடத்தப்பெறும்.

கொங்கு நாட்டில் முதல் முதல் நமது தலைச் சங்கத்தின் பிரதிநிதிகள் பிரசாரம் செய்ய ஆரம்பித்தபோது அவர்களுக்குப் பெருந்துணையாயிருந்து ஆதரித்ததன்றி இம்மகாநாட்டைக் கூட்டிவைப்பதற்குக் காரண பூதராயிருந்த நம் குலப் பிரமுகர்களுள் முக்கியஸ்தராகிய ஈரோடு முனிசிபல் கௌன்சிலர் உயர் திரு. V. M. மொட்டையப்பமுதலியார் அவர்களுக்குச் செங்குந்த உலகம் என்றும் மறவாது நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

## மகாநாடுகளின் தலைவர்கள் சரித்திரச் சுருக்கம்

### கொடியுயர்த்தும் தலைவர்.

**திரு. ம. த. சாமிநாத முதலியார், காஞ்சிபுரம்.**

சாலச்சிறப்புடைத்தெனப் பெரியோர்களால் பாராட்டப் பெறுவதும், நமது தமிழகத்திற்கு முகம்போல் விளங்குவதுமாகிய தொண்டைநாட்டினை, பொதுவாக வேதங்களால் சப்த க்ஷேத்திரங்களுள் ஒன்றாகவும் சிறப்பாகச் சைவர்களால் பஞ்ச க்ஷேத்திரங்களுள் ஒன்றாகவும் கொண்டாடப் பெறுவதாகிய காஞ்சிமாநகரில் சுமார் 200 வருஷங்களாக நீடித்துள்ளதும் செல்வாக்குள்ளதுமான ஒரு செங்குந்த குடும்பத்தில் தோன்றிய உயர் சைவத் திருவாளர் ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் நமது மகாநாடு கூடும் சமயத்தில் நமது செங்குந்த குலத்திற்குரிய கொடியுயர்த்தும் விழாவை நடத்திவைப்பார்கள். திரு. முதலியார் அவர்கள் முத்திமுடிவு, விட்டு நெறியுணர்மை, ஒருபாவொருபஃது, உபதேசம் முதலிய வேதாந்த சாஸ்திரங்கள் செய்தவரும், திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்துச் சிட்டரும் ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள் ஸ்ரீ சிதம்பரசுவாமிகள் மாணவருமான ஸ்ரீமத் சரவண தேசிகர் பரம்பரையிலுதித்தவர். தற்போது இவருக்கு வயது ஏறக்குறைய 50 ஆகிறது. தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய ஞானமுடையவர். ஆழ்ந்த அறிவும் மிகுந்த ஆராய்ச்சியும் பொருந்திய உயர் திரு. ம.த. சாமிநாத முதலியார் அவர்கள் தமது 19-வது வயதிலிருந்தே பொது நன்மைக்காகச் சென்னை ராஜதானியிலுள்ள பல நாடுகளுக்கும் சென்று நம்மவரிடையே உண்டான கக்ஷி வித்தியாசங்களைத் தீர்த்து ஒற்றுமைப்படுத்தி வந்ததன்றி, சென்ற 20 வருஷங்களாகத் தொடர்ச்சியாய்க் காஞ்சிபுரம் முனிசிபல் கௌன்சிலராகவும் இருந்து வருகிறார். 15 வருஷம் பழைய காஞ்சிபுரம் தாலுகா தேவஸ்தானக் கமிட்டித் தலைவராகவும், இருமுறை காஞ்சிபுரம் முனிசிபல் சேர்மனாகவும், பல வருஷங்களாகத் தாலுக்கா ஜில்லா போர்ட் மெம்பராகவும் இருந்தவர். இவர் காஞ்சிபுரம் முனிசிபல் சேர்மனாக இருந்தகாலத்தில் இவரது நடுநிலைமை, உண்மைக்குக் கட்டுப்படுதல், பொது நன்மைக்குழைத்தல் முதலிய பல அரிய குணங்கள் நன்கு விளங்கின. அன்றியும் காஞ்சிபுரத்தில் கட்டாயப் படிப்பைப் பெருமுயற்சி செய்து ஆதாரத்திற்குக் கொண்டுவந்தவர் இவரென்றே சொல்லலாம். எதிரிகளிடத்தும் பிரியம் காட்டுகிற மற்றொரு உயரிய குணமும்



இவரிடமுண்டு. நம் ஜாதிமுன்னேற்றத்திற்காக இன்றும் அரும்பாடு பட்டுக்கொண்டு வருபவர். இப்பெரியாரது விடாமுயற்சியினாலேதான் காஞ்சிபுரத்திலுள்ள நமது ஸ்ரீ கச்சபேசுரர் ஆலயம் தற்போது பிரபல ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகிறது. காஞ்சிபுரத்தில் பெருந்தொகையினராக வசிக்கும் நம்மவர்களைத் திறமையுடன் கட்டி ஆளும் ஆற்றல் வாய்ந்தவர் இவரே யாவர். சுருங்கக்கூறின் தமது வாழ்நாள் முழுதும் நம் ஜாதிமுன்னேற்றத்திற்காகவும், மற்றப் பொதுக் காரியங்களுக்காகவும் உழைத்து வருபவர்.

### தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டுத் தலைவர்.

**திரு. ஆ. வே. முத்தையா முதலியார் பி.ஏ., புதுச்சேரி அமைச்சர்.**

நமது முதலாவது மகாநாட்டிற்குப் புதுச்சேரி பிரஞ்சு அரசாங்கத்தில் செக்ரிடேரியெட் ஜெனரல் (Secretariat General) என்னும் பதவிக்குச் சமமான மிக்க உயர்தர உத்தியோகத்திலுள்ள உயர் சைவத்திருவாளர் ஆ. வே. முத்தையா முதலியார் பி. ஏ., அவர்கள் தலைமை வகிப்பார்கள். இப்பெரியார் புதுச்சேரியில் பரம்பரையாய் மிகப் பிரசித்திபெற்ற ஒரு செங்குந்த குடும்பத்தில் தோன்றியவர். மிகச் சாதுவாகிய இவர் தந்தையார் வேலாயுத முதலியார் பிரஞ்சு அரசாங்க சிவில் உத்தியோகத்திலிருந்தவர். வேலாயுத முதலியார் தந்தையாகிய ஆநந்த முதலியார் என்பவர் புதுவை முத்தியாலுப்பேட்டையில் முத்தைய முதலியாருக்கு ஸ்ரீ சித்தாந்த சுவாமிகள் என்னும் மகான் திருவருட்பேற்றினால் புத்திரராகத் தோன்றியவர். ஷை ஆனந்த முதலியார் மிக்க புகழ்வாய்ந்த பெரிய வியாபாரியாகவிருந்து பல புண்ணியங்கள் செய்து செங்குந்த குலத்தை நிரம்ப விளக்கியவர். இவர் புதுவை முத்தியாலுப்பேட்டை, ஆலப்பாக்கம், சிதம்பரம், மயிலம் முதலிய இடங்களில் சத்திரங்கள் கட்டி வைத்ததன்றி ஸ்ரீ நடராஜப்பெருமான், வைத்தியநாத சுவாமி முதலிய மூர்த்திகளுக்குக் கட்டணம் ஏற்படுத்தி யுள்ளார். வில்வநல்லூரிலுள்ள சிவாலயத்திற்குத் தர்மகர்த்தராயிருந்து அம்மையாருக்கு ரதம் செய்துவைத்த ஆநந்த முதலியார் அச்சிறுப்பாக்கம் கோயிலிலும் சில திருப்பணிகள் செய்திருக்கின்றனர். இவர்களால் வைக்கப்பெற்ற தர்மங்கள் மேன்மேலும் விருத்தியாய்க்கொண்டே வருகின்றன.

1879௵ அக்டோபர்௴ 7௳ பிறந்த நமது முதல் மகாநாட்டுத் தலைவராகிய உயர் சைவத் திருவாளர் ஆ. வே முத்தையா முதலியார் அவர்கள் பிரஞ்சு, இங்கிலீஷ், தமிழ் ஆகிய மூன்று பாஷைகளிலும் மிகவும் தேர்ச்சியுள்ளவர். ஹிந்தி, தெலுங்கு முதலிய பாஷைகளிலும் போதிய ஞானமுள்ளவர். சைவாசாரமும், அடியார் பக்கலில் பேரன்பும் உடையவராகையால் அடியார்கட்குத் தவறாது தினந்தோறும் அன்னமளிப்பவர்; பொதுநலநோக்கமும், நடுநிலைமையும், தூய பரோபகார சிந்தையும் உடையவராய் நன்னெறிக்கண் வழாது நிற்பவர்; அரசாங்கத்தாராலும், ஜனங்களாலும் நன்கு மதிக்கப்பெற்று வருபவர். பிரஞ்சு அரசாங்கத்தில் தற்போது தமிழர்களுக்குள்ளே பெரியஉத்தியோகத்திலிருப்பவர் இவரே. அடிக்கடி கக்ஷிமாறுகிற புதுச்சேரியில், எக்காரணத்தாலும் இவரைக் கெட்டவரென்று சொல்லுவார் ஒருவருமில்லை யென்றே சொல்லவேண்டும். மிகுந்த குலப்பற்றும் சமயப்பற்றும் உடைய நமது தலைவரவர்கள் ஞானநூல் ஆராய்ச்சியிலும் தேர்ந்தவர்; பிரம்ம ஞானசங்கத்தில் ஒரு உயர்ந்த பதவியையும் வகித்து வருகிறார்கள்.

### வர்த்தகர் மகாநாட்டுத் தலைவர்.

**திரு. தெ. ப. கு. ஆறுமுக முதலியார், தென்காசி.**

நமது வர்த்தகர் முதலாவது மகாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள உயர் சைவத் திருவாளர் T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் 1881௵ ஒரு செங்குந்த குடும்பத்திற் பிறந்தவர். இவர் திரு. குற்றாலலிங்க முதலியார் என்னும் பெரியாரது புதல்வர். திரு. ஆறுமுக முதலியார் அவர்கள் மெட்ரிகுலேஷன் வகுப்புவரையில் வாசித்தவர்; இவர் இளமையிலேயே தமது தந்தையாரோடு சொற்ப வியாபாரம் செய்ய ஆரம்பிக்க, அது இவரது ஊக்கத்தாலும், விடாமுயற்சியாலும், நுண்ணறிவினாலும் நாளுக்குநாள் விருத்தியடைந்து கொண்டே வந்தது. சில வருஷங்களுக்குப் பின்னர் முதலியாரவர்கள் நூல் நூற்கும் சில பஞ்சாலைகளின் (Mills) ஏஜெண்டானார். பின்னும் சில காலத்தில் இவரது வியாபாரம் ஓங்கிவளர, ஐரோப்பாவிலும் இந்தியாவிலுமுள்ள சில

பெரிய கம்பெனிகளுக்கு ஏஜெண்டாகித் தற்போது திருநெல்வேலி ஜில்லாவில் பிரசித்திபெற்ற நூல் வியாபாரியாக விளங்கி வருகிறார்.

தென்காசி யூனியன் போர்டிற்கு மூன்று முறைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதன்றித் திருநெல்வேலி ஜில்லாவில் பிரபல புராதன கோயில்களுள் ஒன்றாகிய சங்கர நாயினார் கோயிலுக்குச் சிலகாலம் தர்மகர்த்தராகவும் நியமிக்கப் பெற்றிருந்தார். செங்குந்தர் நன்மைக்கென செங்குந்தர்களே பங்குக்காரர்களாயுள்ள 'தென்காசிச் செங்குந்தர் பாங்கி' என்னும் ஒரு பாங்கையும் ஏற்படுத்தியுள்ளார். இவரே அப்பாங்கிக்கு ஆயுள் காரியதரிசியாகவும் நியமிக்கப்பெற்று அதை நடத்தி வருகிறார் இவர் பெயரை அறியாத வியாபாரிகள் அந்த ஜில்லாவிலும் இதர ஜில்லாவிலும் இல்லை யென்றே சொல்லலாம்.

தேவஸ்தானம், தலஸ்தானம் முதலிய எல்லாவற்றிலும் பிற இனத்தவரைப் புகவிடாது தங்கள் மயமாக வைத்திருக்கிற வேளாளர்கள் நிறைந்த திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி யூனியன் போர்டின் தலைவராக மும்முறை, தேர்ந்தெடுக்கப் பெற்றதனாலும், சங்கர நாயினார் கோயில் தர்மகர்த்தராக நியமிக்கப்பெற்றதனாலும், இவருக்கு மகம்மதியர்கள் உட்பட்ட பிற இனத்தவரிடத்தும் எவ்வளவு செல்வாக்கும், நன்மதிப்பும் இருக்கிறதென்றும், செங்குந்தர் பாங்கிற்கு ஆயுள் காரியதரிசியாக நியமிக்கப்பெற்றிருத்தலின் இவருக்கு நம்மவரிடத்தும் எவ்வளவு நம்பிக்கையும் நன்மதிப்பும் இருக்கிறதென்றும் தெரிகிறது.

இவர் மிகுந்த குலாபிமானமுடையவரென்பது நம்மரபினர் நன்மைக்கெனவே பாங்கி ஏற்படுத்தி இருப்பதனாலும், சங்கர நயினார் கோயில் தர்மகர்த்தரா யிருந்தபோதும், யூனியன் போர்டு சேர்மனாயிருந்தபோதும் நம்மவர்களுக்கு அனுகூலமாய் நியாயமான வழியில் செய்துள்ள பல ஏற்பாடுகளாலும் நன்கு விளங்குகிறது. பொது நன்மைக்கும் பலன் கருதாது உழைக்கும் பெருந்தகைமையும், தர்மசிந்தையுமுள்ளவர். திருநெல்வேலி ஜில்லாவில் நமது தலைச்சங்கப் பிரதிநிதிகள் சென்ற வேனிற்காலத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது இவர் பேருதவி புரிந்துள்ளார். அந்த ஜில்லாவில்நடந்த பிரசாரம் பெரும்பாலும் இவரது உதவியினால் நடந்ததென்றே சொல்ல வேண்டும். இராமேஸ்வரத்திலுள்ள நமது மடம் பிறரால் கைப்பற்றப்படும் தருவாயிலிருந்தபோது வெகுபிரயாசைப்பட்டு அதைப் பழையபடி நம்மவர் வசமாக்கினார். திருக்குற்றால நீர் வீழ்ச்சிக் கருகிலுள்ள நம்மவர் மடத்தையும் நந்தவனத்தையும் அரும்பொருள் செலவிட்டுப் புதுப்பித்து வெகு ஒழுங்காக அமைத்து வைத்திருக்கின்றனர். இவற்றாலும் இப்பெரியார் சிறந்த குலாபிமானி என்பது சொல்லாமலே விளங்கும்.

## வாலிபர் மகாநாட்டுத் தலைவர்

### திரு. மா. வெ. பீமராஜ முதலியார், குடியேற்றம்.

நமது வாலிபர் மகாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளவர் குடியேற்றம் உயர்சைவத் திருவாளர் மா. ஆ. சி. வெ. பீமராஜ முதலியார் அவர்கள் ஆவர். அவருக்குத் தற்போது வயது 38 ஆகிறது. மா. ஆ. வெங்கடாசல முதலியாரது நான்கு புதல்வருள் இவர் மூத்தவர். நிறைந்த செல்வந்தர். தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய ஞானமுள்ளவர். குடியேற்றத்தில் பரம்பரையாய் மிகுந்த செல்வாக்கும் அந்தஸ்துமுள்ள ஒரு பெரிய குடும்பத்தில் தோன்றியவர். இவர் 34வது வயதில் குடியேற்றம் முனிசிபல் கௌன்சிலரானார். ஓராண்டு பின்னர் ஷை முனிசிபல் கௌன்சில் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று அப்பதவியை 1928ளு அக்டோபர் மாதம் 3(?)உ வரையில் திறமையோடு வகித்துவந்தார். சென்ற நான்கு வருஷங்களாக தாலுக்காபோர்டு அங்கத்தினராகவும், 3 வருஷ காலமாக ஜில்லாபோர்டு அங்கத்தினராகவும் இருந்துவருகிறார். செங்குந்தர்கள் பெருந்தொகையினராக வசிக்கும் குடியேற்றத்திலுள்ள உயர்தரப் பாடசாலை ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்கொடுத்துவரும் பொதுஸ்தாபனத்திற்குத் தலைவராயிருந்து மிக்க ஊக்கத்துடன் ஷை தர்மத்தை நடத்திவருகிறார். சுயநலங் கருதாது பொது நன்மைக்கு உழைத்து வருபவர். சென்ற சென்னை சட்டசபைத்தேர்தலில் தைரியமாக நின்ற செங்குந்தர் இவர் ஒருவரே. அச்சமயத்தில் நம்மவர்களுக்குள் இருந்த கக்ஷி வித்தியாசத்தினால் இவர் தோல்வியடைய நேர்ந்தது. கக்ஷி வித்தியாசமில்லாதிருக்குமாயின் நிச்சயமாய் ஜயம் பெற்றிருப்பார் என்பதிற் சந்தேகமில்லை. எடுத்த காரியங்களை ஊக்கத்தோடு செய்து முடிக்கும் ஆற்றலுள்ளவர்.



# ஆராய்ச்சிப் பகுதி

## ஈட்டியெழுபது.

### ஒட்டக்கூத்தர் பிறப்பிடம் சீர்காழி.

(மித்திரன் தொகுதி உ, ௩௩௪ பக்கத் தொடர்ச்சி)

யாம் இப்போது எடுத்துக்கொண்ட விஷயம், இதுவரை கூறிய விஷயத்தோடு சற்றுப் பொருத்தமில்லாததாகக் காணப்படினும், மற்றொன்று விரித்தல்போலத் தோன்றினும், பொறுதியொடு ஊன்றிப் பார்ப்பவர்களுக்குச் சால ஏற்றமுடையதாகவே காணப்படும். உலகம் உய்தற் பொருட்டாக ஒருவர் திருவவதாரஞ் செய்யினும் அவ்வாறு திருவவதாரஞ் செய்தற்குரிய பெரும்பதியும் பெரிதும் விசேஷ முடையதாகவே இருத்தல்வேண்டும். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரைக் கூன்பாண்டியன் 'கெழுவுறு பதியாதென்று விருப்புடன் கேட்டபோது'; 'பொன்னிவளர்திருநாட்டுப் புனற்பழனப் புறம்பணைசூழ், கன்னிமதிற்கழுமல நாங் கருதுமூரெனச் சிறந்த, பன்னிரண்டு பெயர் பெற்றுப் பரவிய சொற்றிருப்பதிகந், தென்னவன் முன்பருள் செய்தார் திருஞானசம்பந்தர்'.

கழுமலத்திருப்பதிக்குக் கூறிய பன்னிரண்டு திருநாமங்களையும் பரமாசாரியர் தாமே தமது பல் பெயர்த் திருப்பதிகங்களிற் கூறி, வழிமொழித்திருவிராகத்தில் அத்திருநாமங்கள் வந்த காரணத்தையும் வகுத்துக் காட்டுகின்றார். அத்திருப் பதிகங்களுள் தாருகனைச் செற்ற காளிதேவி பூசித்த வரலாற்றை விதந்துரைத்துத் திருபிரமபுரம் பண் தக்கேசி, "எரியார்" என்ற தொடங்கும் பல் பெயர்ப்பத்துள் சீகாழியானது படைப்புக்காலம் தொட்டே சிவ ராஜதானியாக அமர்ந்து பல தேவ மன்னர்களாலும் புரக்கப்பட்டு வந்தமை வெளிப்படுத்தியுளர். ஆகவே காழியம்பதி தொன்று தொட்டு ஐதிகங்களாலும் தல விசேஷத்தாலும் வித்தியாபீடத்தாலும் சிறந்து விளங்கிற்று என்பது போதரும்.

அதிபூர்வகாலத்தே பெருநற்கிள்ளி, கரிகாற்பெருவளத்தான், கோச்செங்கண்ணன் முதலிய பேரரசர்கள் விருத்தாந்தங் கூறப்படும் சங்கச் செய்யுள்களிலும், கலிங்கத்துப்பரணி மூவருலா தக்கயாகப் பரணி முதலிய நூல்களிலும் காவிரிப் பூம்பட்டினத்தைப் பற்றியும் பேசப்படுவதன்றி...

பெருஞ்சிங்க தேவருடையது 4, விஜயநகரத்து முதல் வங்கிசத்து வீரவிருப்பண்ண வுடையாரது 2, ஷையார் ஆண்டுமட்டும் குறித்தவை 3, இரண்டாம் வங்கிசத்து வீரப்பிரதாப கிருஷ்ண தேவ மகாராயரது 1, மூன்றும் வங்கிசத்து வேங்கடதேவ மகாராயரது 1, பேர் குறித்தவை 8 ஆகும், இவற்றால் சீகாழி நாட்டின் பெருவளமும் கைத்தொழின் மாட்சியும் நாட்டினமைதியும் இந்நீண்ட காலத்தும் புலப்படும்.

அன்றியும் இக்காழிப்பதியில் ஒன்றிற் பிறந்தாராகவோ மற்றொன்றில் வதிந்தோராகவோ வேறொன்றில் பாடினாராகவோ மற்றொன்றில் வதிந்தோராகவோ வேறொன்றில் பாடினாராகவோ பிரிதொன்றில் திருப்பணி முதலியவை புரிந்தோராகவோ காணப்படும் பெரியோர் திருநாமங்களாவன :—

1. பழைய காப்பியக் குடியின்கண் அவதரித்த திரணபிந்து தூமாக்கினி, 2. கரிகாலர், 4. செங்கணார், 4. பொய்கையார், 5. அப்பா, 6. கணநாதர், 7. மங்கையர்க்கரசியார், 8. சம்பந்தர், 9. மங்கைமன்னர், 10. சுந்தரர், 11. மாணிக்கவாசகர், 12. விஜயநந்திச் சோழர் 13. பட்டினத்தடிகள், 13. ராஜராஜதேவர், 15. நம்பியாண்டார் நம்பி, 16. உத்தமச் சோழர், 27. அனபாய குலோத்துங்கர், 18. சேக்கிழார், 19. ஒட்டக்கூத்தர், 20. பேராசிரியர், 21. நேமிநாதர், 22. அருணநமச்சிவாயர், 23. கங்கைமெய்கண்டார், 24. சிற்றம்பல நாடிகள், 25. தத்துவப் பிரகாசருள்ளிட்ட பல பெரியார், 26. நன்னூற்சீயகங்கனது மாமனார் பொத்தப்பிச்சோழர், 27. கொங்குமண்டலத்து வரிசை பெற்ற காழிப்புலவர், 28. ஆதிமூர்த்தித் தாண்டவராயர், 29. கண்ணுடைவள்ளல், 30. சிவஞானவள்ளல், 31. கச்சியப்ப சிவாசாரியார், 32. கீர்த்தனம்பாடிய முத்துத் தாண்டவர், 33. வடுகநாத தேசிகர், 34. ஞானதேசிகர், 35. சட்டைநாதவள்ளல், 36, அருணாசல கவிராயர் 37. சிதம்பரநாத முனிவர், 38. அம்பலவாண கவிராயர், 39 மீனாட்சிசுந்தரம் பிள்ளை இன்னோரவர். இவருள் ஒட்டக்கூத்தரைப்பற்றி இனி விசாரிப்போம்.

(தொடரும்.)

ஆ. பூ. இராஜு முதலியார்,

காலஞ்சென்ற நாட்டாண்மை

பரண முதலியார் சுவீகார புத்திரர், சீகாழி.

## தொடர்மொழி விளக்கம்.

(மித்திரன் தொகுதி 2, 2?9-ம் பக்கத்தொடர்ச்சி.)

பகீரதப்பிரயத்தனம் :—இதுவும் நம் தெய்வத் தமிழ்நாட்டில் வழங்குமோர் தொடர்மொழியாமென்க இது எடுத்துக் காட்டுவமையணியின் பாற்பட்டு பகீரத சக்கரவர்த்தியின் விடாமுயற்சியை யுலகினர்க்குணர்த்தி "முயற்சி திருவினையாக்கும்" என்னு முதுமொழிப் பயனை யடையத் தூண்டுவதோ ரருமருந்தன்ன ஆன்றோர்மொழி. இதனை நம்மிந்திய 'சகோதரர்கள் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்வாரம்பித்து, பலவிடுக்கண் நேரவும் விடாமுயற்சியினால் மனமுனையாது, இன்னவெய்தி, துக்கஞ் சகித்து, ஈற்றி லெண்ணியாங் கெய்தப் பெற்று, காரிய சித்திபெறுவனேல், அவனை நோக்கி. அப்பா நீ! "பகீரதப் பிரயத்தினம்" செய்தனை! அதனாலுனக்கு கடவுளனுக்கிரகம் புரிந்தனர்" என அவன் வெற்றி யடைந்தமையைக் குறித்து வியந்து மேன்மையாய்ப் பேசுகின்றனர். ஆனாலித்தகைய தொடர்மொழியெக்காலத்து யாது காரணம் பற்றி யாரால் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டது' அதன்பொருளென்ன? அது சம்மந்தமான சரித்திரம் யாது? என்பன வாதிகளை ஊன்றிப் பார்த்து உய்த்துணர்வார் வெகு சிலரேயாவர். ஆதலினதனைத் தேர்வாம். பூர்வகாலத்தில் புண்ணிய பூமியாகிய விப் பரதகண்டத்தில், முத்தி நகரேழனு ளொன்றாய சகரமகாராஜன் அசுவமேத யாகஞ்செய்ய விடுத்த குதிரையைத் தேவேந்திரன் அவ்வியாக முற்றுப்பெறின் தனது பதவிக்கீறு நேருமெனக் கருதி, வஞ்சகமாய்க் கொண்டுபோய்ப் பாதாளத்தில் கபிலமகாமுனிவர் தவஞ் செய்யுமிடத்தில் ஒளித்துவைத்தனன். அதனை யவ்வரசர் பெருமானின் புத்திரர்களாகிய சகராள் அறுபதினாயிரம்பேறும் உலகெங்குந் தேடியுங் காணாமல் பூமியைத் தோண்டி பாதாளத்திற் சென்று அங்குத் தவஞ் செய்து கொண்டிருந்த கபில முனிவருக்குச் சமீபத்தில் குதிரையைக் கண்டு முனிவரின் மகிமையோராது அவரதனைக் களவு செய்ததாக வெண்ணி, விதிவழி மதிசெல்ல அப்பெரியாரைப் பெரிதும் இகழ்ந்து வைதார்கள். அப்பொழுது முனிவர் கோபத்தினால் விழித்துப் பார்க்க அவ்வறு பதினாயிரம் பெயரும் சாம்பராயினர். அதனை யுணர்ந்த அஞ்சுமானென்



பவன் அவருக்கு இதங்கூறிக் குதிரையைக் கொணர்ந்து தனது பிதா மகன் செய்யும் வேள்வியை முடித்தான். நெடுங்காலஞ் சென்றபின்னர், அவன் சந்ததியில் வந்த பகீரதனென்பவன்

"எழுபிறப்புந் தீயவைதீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட்பெறின்"

என்ற நாயனார் முதுமொழிக் கேற்பத் தனது மூதாதையர்களான சகராள் கபில மகாமுனிவரின் கோபத்தினால் சாம்பராயெரிந்து நரகம் புக்காரென்பதைப் பெரியோர் வாயிலாயறிந்து எரிவாய்ப்பட்ட இழுதெனவுருகி மனநைந்து அவர்களைச் சுவர்க்கம் புகுவிப்பான் கருதி, பிரமனை நோக்கி நெடுநாள் தவங்கிடந்தனன். அரசன் செய்தவத்துக் கிரங்கி நளினத்துறைபும் நான் முகப்புத்தேள் பிரசன்னமாய் 'ஆகாய கங்கையானது அவர்களஸ்தியின் சாம்பரிற் படியில் சுவர்க்கம் சேர்வார்கள்! அக்கங்கையோ பூமியில்வரின் அதனாற்றலைச்சிவபெருமானொருவரன்றித் தடுப்பவரெவருமிலர். ஆகையால் அப்பெருமானைக் குறித்துத் தவங்கிடந்து, கங்கையைப்பெற்று நின்னெண்ணம் பூர்த்திபெறுவதாக' என்றாசிர்வதித் தகன்றனர். அவ்வாறே பகீரதன் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளை நோக்கிப் பன்னாள் தவமுயன்றனன். காவலன் தவத்துக் கிரங்கி, கண்ணுதற்பெருமானுங் காக்ஷி தந்து 'வேண்டியதியாது அறைதி'யெனப் பகீரதனும் கபில முனிவரின் சாபத்தால் நரகத்திடர்ப்பட்டுழலும் தனது மூதாதையர்களாம் சகராளறுபதினாயிரவரையும் சுவர்க்கம் சேர்ப்பிக்க, ஆகாய கங்கை யளித்தல் வேண்டுமென்றிரந்தான். அன்பர்க் கெளிவருபெருமான் அவ்வாறே ஆகாய கங்கையைப் புவியில் வருமாறேவினர். கங்கையாகிய நங்கையும் தேவலோகத்திலிருந்து புவியில் வர நேர்ந்தமைக்கிரங்கிக் கோபத்தோடு சுவர்க்க மத்திய பாதலமென்னும் மூன்றுலகமும் நடுங்கும்படியாக விரைந்து வர, அதனைப் பெருமானுணர்ந்து "எழுத்தறிவ ராயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில் வீயுஞ் சுரநீர் மிகை" என்றபடி தமது சடையின் ஒரு நுனியிற்றரித்தனர். சிவன் சடையிற் செறிந்து கங்கைவராமையால் பகீரதன் மீண்டுங் கங்கைசடைக்கரந்த பிரானை நோக்கி, அரிய நோன்பாற்றி, அக் கங்கையின் ஒரு சிறுதுளியைப் பெற்றுக்கொண்டு பூமியில் வரும்பொழுது, அத்தெய்வக் கங்கை வழியில் தவஞ்செய்து கொண்டிருந்த சன்னுமுனிவருடைய யாகசாலையை யழிக்க, கோபங்கொண்டமுனிவர், அதனை உள்ளங்கையி லேற்று, பானஞ் செய்தருளினர். அப்பால் பகீரதன் தன் பின்னே கங்கைவராததுகண்டு, இஃது முனிவராலேற்பட்டதென்று அறிந்து, அவரை வணங்கிப் பல்கால் வேண்ட, மனவிரக்கங்கொண்ட அம்முனிவருங் கங்கையினொருசிறிதைத் தனது காதின் வழியாகப் புவியிற் பரவுமாறுய்த்தனர். பின்னர், பகீரதன் அக்கங்கையைப் பாதலத்திற் கொண்டுபோய்ச் சாம்பாராய்க்கிடந்த சகராள் எலும்பிற் படிவித்து நரகத்தினின்றுமீட்டு அவர்களைச் சுவர்க்கம் புகுவித்தனென்பது சரித்திரம். பகீரதனாற் புவிக்குக் கொண்டுவரப்பட்டமையின் "பாகீரதி" என்றும், சன்னுமுனிவரின் காதின் வழியாக வெளிப்போந்தமையின் "சானவி" என்றும் கங்கை நதிக்குப் பேர் வழங்குவதாயிற்று. பகீரதன் தனது விடாமுயற்சியினாற் செய்த பிரயத்தனத்தாலன்றோ சகராள் சுவர்க்கமெய்தினர்? உலகமும் "பகீரதப்பிரயத்தனம்" என்று அவன் முயற்சியைக் கொண்டாடுவதாயிற்று. இத்தகைய பெரும் புகழ்வாய்ந்த பகீரதச்சக்கரவர்த்தி காலந்தொட்டே,இத்தொடர்மொழியும், நந்தமிழ் நாட்டில் வழங்கி வரலாயிற்றென்ப.

ஊரோட வுடனோட [(அல்லது) நாடோட நடுவோட:]—

இத்தொடர் நந்தமிழ் மக்கள் பல்லோராலும் (கற்றறிவுடைய முற்றறிவோ ராதியாய், கல்லாத புல்லறிவின் பேதைய ரீறாகவுள்ள சகலர்களாலும்) வழங்கப்பட்டு வருகின்றது. விதை விதைத்தல் முதலிய விவசாயத் தொழிலையோ, வியாபாரத் தொழிலையோ, அல்லது வேறெத்தகைய தொழிலையோ, உலகின் மக்கள் பலருந் தொடங்கிச் செய்யுங்கால் அத்தொழிலை ஒருவன் செய்யாமல் வாளாவறிதே காலங்கழிப்பனே லவனை நோக்கி, "ஊரோட வுடனோட நாடோட நடுவோட என்று நீயும் முயற்சித்துச் செய்யாமல் உம்மோடொத்தவர் பயிர்செய்யவும் பார்த்துக்கொண்டு நீ வாளா விருத்தலென்னே?" என இத்தொடர்மொழிப் பிரயோகத்தால், அவனுக்கு அத்தொழிலைச் செய்யும்படி நல்லறி வூட்டுகின்றனர். அல்லது ஒருவன் ஒரு தொழிலைச் செய்யலாமா வென்று தனக்கு மேம்பட்ட அறிவினரை வினவியகாலத்து, அவர்களவனை நோக்கி "ஊரோட வுடனோட நாடோட நடுவோட என்றபடி எல்லாருஞ் செய்வதுபோல்

"நீயும் செய்" என்கின்றார். இப்படிப் பல்லோராலும் வழங்கப்பட்டுவரு மித்தொடர் எக்காலத்தில் யாது காரணம்பற்றி உண்டாயது, இதன் பொருள் என்னவென்று ஆராய்ந்தறிந்தனர் ஒருசிலரே. எனவே யித்தொடர்மொழியின் கருத்தையும் இது சம்மந்தமான சரித்திரத்தையும் ஆராய்வாம். ஊரோட வுடனோட வென்பதற்கு ஒரு ஊரிலுள்ளவர் அல்லது ஒரு நாட்டிலுள்ளவர்கள் ஒரு காரியத்தை (தொழிலை)த் தொடங்கிச் செய்யுங் காலத்தொழில் நன்மைக் கேதுவாயினுமல்லது தீமைக் கேதுவாயினும் அதனை நாடாது நாமும் அவ்வண்ணமே செய்தல் வேண்டுமென்பதே திரண்டபொருள். இவ்விதம் நடந்தோர் யாவரெனிற் கூறுதும். எத்திசையும் புகழ் அத்தினபுரியை யாண்ட, திருதராட்டிரன் இளவலாம் பாண்டுமகாராஜனது புத்திரர்களாய தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் ஐவர்களும், தாயாராகிய குந்தியும் அரவநெடுங்கொடி யுயர்த்தோன் வஞ்சகத்தாலிழைத்த அரக்கு மாளிகையினின்றும் தப்பி உயிர்பிழைத்து நீங்கி, இடும்பாவனமடைந்து, ஆங்குறை யரக்கனும் இடும்பனைக்கொன்று அவன் தங்கையாகிய இடும்பியை வீமன் மணந்து கடோற்கஜனென்னும் புத்திரனைப் பெற, அங்ஙனமே அவர்களிருந்திப்பின்னர் அந்தணர் வேடம்பூண்டு வேத்திரகியமென்னும் நகரையடைந்து அவனொரு அந்தணன் வீட்டில் வதிந்து காலங்கழிப்பாராயினர். நிற்க, அந்நகரை யடுத்த வனத்தின்பாங்கர் பகாசூரனென்பான் அரக்கனொருவன் தன்னெதிர்ப்பட்ட ஜீவர்களை வதைத்துக் கொன்று தின்று அதனாற் பசியாறி காலங்கழிக்கும் வழக்கம் மேற்கொண்டிருந்தானாதலின், அவ்வேத்திர கியத்திலுள்ள முதியோர்கள் ஒன்றுகூடிப் பகாசூரனிடம் சென்று அவனுக்கு நிதமும் அவ்வூரிலுள்ள வீட்டு முறைப்படி ஒரு வண்டி சாதங் குழம்பு கறிகளுடனும் ஒரு நரபலியும் தவறுமல் கொடுத்துவருவதாக வாக்களித்து, அவனை ஜீவஇம்சை செய்யாதிருக்கும்படி வேண்டினர். அதற்கு அவனிசைந்தானாக, அந்நகரினரால், நரபலியும் ஒரு வண்டி சாதங் கறிகளும் உதவப்பெற்று உயிர் வாழ்ந்து வருநாளில் ஒரு தினம் பாண்டவரும் குந்தியுந் தங்கியிருந்த வீட்டில் பிராமணப் பிள்ளைக்கு முறைவர, அப்பிள்ளை ஏகபுத்திரனாதலின், ஈன்ற தாய் பெரிதுங்கவலுற, இரக்கம் வாய்ந்த குருகுலக் கோமாட்டியாங் குந்தியம்மையார் தன் மக்கள் ஐவரையும் விளித்து அருகிருத்தி மூத்தோனாகிய தருமபுத்திரனிடம், அவ்வந்தணமாதின் பரிதாப நிலையைக்கூறி வீமனுடைய பராக்கிரத் தன்மையை விளக்கி, அம்மறையோனுக்குப் பதிலாக வீமசேனனைப் பகாசூரனுக்கு வண்டி சாதங் குழம்பு வகையராக்களுடன் நரபலியா யனுப்புதல் வேண்டுமென்று முடிவுசெய்து, அவ்வாறே யவனை யேவினள். அடலேறனைய வீமனும், அவுணன் பசிவேளை தவறி சீற்றங் கொள்ளுமாறு வழியில் காலப்போக்கு செய்து அவனுக்கெனவனுப்பிய வண்டிநிறை யுண்டியும் கொண்டு வாய்மடுத்துத் தின்டிறலுடையனாய்ச் செம்மாந்து செல்ல, ஈதுணர்ந்த ஆற்றருஞ் சீற்றத்தரக்கரும், அடுதொழில் வினையைக் கடிதினிற்கொள இருவரும் அமருற்றனர். இங்ஙனம் நெடுசமர்புரிந்து ஈற்றில் பகன் இந்நிலவுலகவாழ்வை நீத்து உயிர் துறந்து முடிவடைந்தானாக, வீமனின்புற்று வண்டியுடன் நகர்மீண்டனன். கொண்டநல்வெற்றிக் குருகுலக்காளையைக்கண்ட மாநகரினர் பண்டுபோல் வந்தனனென்று சிந்தையிலுன்னிப் பீதிகொண்டவராய் பயந்து ஓடினர். நகரின் மாந்தரனைவரும் வருபவனின்னானென்றுணராது ஓடுதல்கண்டு, தருமனுக்கிளைய நால்வருந்தாயும் வியப்படைய, யுதிஷ்டிரன் அப்போது அவர்களை நோக்கி "ஊரோட வுடனோட (அல்லது) நாடோட நடுவோட" வென்று கூறியவர்களை யழைத்துக்கொண்டு (தெரிந்திருந்தும் பயங்கொண்டவர்களைப் போல) ஓடினர். அதுகண்ட வீமன் விரைந்து இவர்களையும், வேத்திரகியத்தோரையுமணுகி நிகழ்ந்ததோதினன் இச்செய்தியறியாத நகரமாந்தரனைவரும் களிகூர்ந்து ஐவர்களையுமணுகி தருமனை நோக்கித் தாங்கள் தம்பியென்று தெரிந்திருந்தும் எங்களைப்போலவே பயந்து எங்களுடன் ஓடிவந்ததென்னேவென்றனர். அதற்கு அறத்தின்மைந்தன் "நாடொப்பனசெய்" என்னும் ஆன்றோர் மொழியின் கருத்தை மிகச் செம்மையாய் அறிவித்து அதன்படி ஊரோடவுடனோட (or) நாடோடநடுவோட நானுமோடினேனென்றனர். இம்மகா புருஷனுடைய வாக்கியத்தையே பின் உலகமும் கைக்கொள்வதாயிற்று. எனவே இத்தொடர்மொழியானது பாண்டுமைந்தர்களின் காலமாய பாரதப்போர் தொடக்கத்திற்கு முன்னரே நம் நாட்டில் வழங்கி வரலாயிற்றென்பது வூகித்தறியக் கிடக்கின்றது. (தொடரும்.)

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
கண்டாச்சிபுரம்.



## குலதிலகர் பகுதி

### தக்கயாகப்பரணி பாடிய வரலாறு.

இது பராபவஞூ சித்திரைமீ மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவந்த செந்தமிழ் என்னும் பத்திரிகையில் பத்திராதிபரால் எழுதி வெளியிடப்பெற்றது.

[கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர், தக்கயாகப்பரணி யென்னும் அரியதொரு பிரபந்தம் பாடியிருத்தல் பலரும் அறிந்தது. அப்பரணி இன்னும் அச்சிடப்பெறவில்லை. அவ்வரியநூலை, கூத்தர் பாடி முடித்ததின் வரலாறு, இற்றைக்கு ௨௮0-வருஷங்கட்குமுன் செய்யப்பட்டதென்று தெரியவரும் "வீரசிங்காதன புராணம்" என்னும் நூலிலுள்ள 'அகவங்க சருக்கம்'' என்னும் பகுதியில் விரிவாகக் காணப்படுகின்றது. அப்புராணத்தை நன்கு பரிசோதித்தும், அப்புராணக் கதைகளை இனிய செந்தமிழ் நடைப்படுத்தும் சென்றவாண்டில், சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீ இராமலிங்கஸ்வாமிகள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்நூலில் ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணி பாடிய பகுதியைமட்டும், செந்தமிழபிமானிகளும் படித்து மகிழவேண்டி அப்புராணத்திற் கண்டவாறு கீழே தருகின்றேன் :—பத்திராசிரியர்].

நீர்வள நிலவளங்களாற் றனக்கிணையில்லாத சோழமண்டலத்தே, களத்தையொழித்த சற்குணங்களுடைமையால் "அகளங்கன்" எனக் கீர்த்திபெற்ற இராஜராஜன் என்னும் பெயருடைய சோழன் செங்கோல் செலுத்திவருங் காலத்தில், அவனது வாயிற்புலவராய், கலைகள் ஆளுரு வெடுத்தாற்போல ஒட்டக்கூத்தர் என்னும் கவி சிரேஷ்டர் ஒருவர் இருந்தார். அவர் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களை விதிவழாது பாடுதலினும், முன்னூரது இலக்கண இலக்கியங்களிலுள்ள பொருணுணுக்கங்களும் நவரசங்களும் புலப்படப் போதித்தலினும வல்லுநராய், நாற்கவிராசராய், முத்தமிழ்த்துறை போயவராய், சங்கச்செய்யுள், புராணம், தருக்க முதலியன வல்லராய், எல்லாப் புலவரும புகழவாழ்ந்திருந்தனர். அக்காலத்தில், குடந்தை வீரசிங்காதன மடத்தில் வாழ்ந்த தவசிகள் பலர். அவருளொருவர் முத்தமிழ் விரகராகிய ஆளுடைய பிள்ளையார் தேவாரத்தை யோதிப் பலியேற்பவர். இவர், திருவீழிமிழலையீசர் திருப்பதிகத்தை ஓதிக்கொண்டு பலியேற்கு மொருதினம், அத்திருப்பதிகத்திலுள்ளதாகிய * "கல்லானிழற்கீழா யிடர்காவாய்" என்னுந் தேவாரத்தைச் சொல்லிக்கொண்டே ஒட்டக்கூத்தரது மனைவாயிலினிற்க, அப்புலவர் பலவுமறிந்தவராயினும், அத்தேவாரப்பொருளைப் பலகாற் சிந்தித்தும் விளங்காமையின் மயங்கி, அச்சிவயோகியாரை "இத்தேவாரத்தின் பொருள்கூறுக" என்று கேட்டனர். அந்தயோகியார் சினந்து, 'இதன் பொருள் யானறிந்திலேன் : நீ யறிந்துரைப்பினும், அததேவாரத்தின் ஒரு மொழியேனும் பொருள் நிரம்புமோ, என்றனர். இது கேட்ட புலவர் விருப்பமிகும் இன்னிசையோடு பாடுதலால் நிச்சயித்தற் கரிதாயிற்று ; ஆதலின், அதன் பொருள் யாது என்று கேட்டவழி, அவர் அதன் பொருளை மொழியாது வசை மொழிந்தனர் என்று பெருங்கோபங்கொண்டு, அச் சிவயோகியாரைக் * கசையாலடிக்க, அவரும் மடிந்து வீழ்ந்தார். மாறுபட்ட மனத்துடன் பெருஞ்சினங்கொண்ட ஒட்டக்கூத்தர், அழிவற்ற சிவனடியார்க்கு இவ்வாறு அழிவியற்றித் தம் மனையடைய, அச்சிவயோகியார் வசிக்கும் மடத்திலுள்ள சங்கமர்கள் இச்செய்தி கேட்டலும் பொர்மொலித் தெழுந்து ஆசிரியரை யிறைஞ்சி யனுமதிபெற்று வில், வாள், அம்பு முதலிய ஆயுதமேந்தியவராய் அப்புலவர் மனையை அடைந்தனர்.

இவர்கள் வருவதை முன்னமே அறிந்த புலவர் அரசனை யடைந்து நடந்ததனைத்தும் அறிவிக்க, ஒரு பசுக்கன்றின்பொருட்டுத் தன் புதல்வனைத் தேர்க்காலிலிடறிய சோழன் குலத்துதித்த இராஜராஜன் கேட்டு, பெரிதும் மயங்

* 'கல்லானிழற்கீழா யிடர்காவாயென வானோர் எல்லாமொருந்தாராவயன் மறைபூட்டி நின்றுய்ப்ப வல்லாயெரி காற்றீர்கணை கோலவாசுகி நாண்கல் வில்லாவெயிலெரித்தானிடம் வீழிம்மிழலையே" திருவீழிமிழலை சடையார் புனல் எனனுந் தொடக்கமுடைய பதிகத்துள்ளது.

கிக் கலங்கி, இப்பெரும் பழிக்கென் செய்வதென்று நடுங்கி நிற்க, அத்தருணத்தே ஆங்குப் புலவரிருப்பதை யறிந்த சங்கமர்கள் அரசன் திருமுன்பெய்தி நடந்ததை முறையிட்டார்கள். அம்முறைப்பாடு கேட்ட மன்னன் "சிவபெருமானுக்குரிய வடிவம் குரு, இலிங்கம், சங்கமம் என மூன்றுகுமென்று வேதாகமங்கள் இயம்பாநின்றன. இவ்வொட்டக்கூத்தர் இவற்றையெல்லாம் அறிந்தும், தம் மனையிற்பலிக்கெய்தியதொரு குற்றமுமிலாதவராய் நின்ற சிவயோகியாரைக்கொன்று கம்பாலடைந்தனர். இதற்கு யாது புரிவம்' என்று வருந்தி அச்சங்கமரை நோக்கி "அடிகளே! இச்சங்கமக் கொலைக்குச் சிவாகமங்களில் விதித்த பரிகாரம் யானே புரிகின்றேன்" என்று கூறினன். சங்கமர், "அக்கூத்தனை நாங்களே ஒறுத்தற்குரியேம்; ஆதலால் அவனைக் கொண்டாலன்றிமீளேம்" என்றுறுதியாக நிற்க, அரசன் புலவரை வேறோரிடத்திற் சேமித்துவைத்து, தன் புதல்வனை மந்திரியாலழைப்பித்து, 'எனக்கு நேர்ந்த குறையை மாற்றுவாயாக, எனத் தன் மகனைவேண்ட, அவனும் "பிதா மாதாக்கள் இயம்பியது யாதாயினும் அது தவம் என்று கொள்வதே மைந்தர் கடமை; சூரிய குலததவருள தந்தை, ஆசிரியர் இவர் சொற்களைக்கடக்கும் கொடியோரை இப்பூமி தாங்காது; நரகமே தன்பாற்கொள்ளும். மனைவி, புத்திரர் செல்வ முதலியவை அருமையல்ல; கீர்த்தியொன்று அரியது. உடல் நிலையன்றென்பதை யறிந்தும் அதைப் பொருளாக எண்ணி, உமதுரையைக் கடப்பவனல்லேன். என்னை யுமதிஷ்டப்படியே செய்க" என்றான். இவற்றைக்கேட்ட மன்னவன் மகிழ்ந்து மகனை மூடுபல்லக்கில் ஏற்றித் திரையாடுவித்துக்கொண்டு அவையை யடைந்து, சங்மரை நோக்கி, "சங்கமக்கொலைபுரிந்த இவனை நீர் நோக்குவதுந் தகுதியன்றாதலால், ஒரு மறைவிடத்தில் வைத்துக்கொல்க" எனக் கூறி விடுத்தான்.

அரசன் சொல்லை மதித்து அச்சிவிகையுடன் ஓரிடத்தை யடைந்தபோது, அச்சங்கமருட் சிலர் 'இவன் ஒட்டக்கூத்தன் தானா? என்று முகத்தைப் பார்த்துத் தெரிந்து பின்கொல்ல வேண்டும்.' செய்யுங் கருமத்தைத் தெளிந்து கொள்ளாமலே செய்யின் அது மனத்துன்பத்துக்கு ஏதுவாகும்' என்ன, அதுகேட்ட அனைவரும் அவ்வாறே பார்க்க விசைந்து சிவிகைத் திரையை நீக்குதலும், அரசனுடைய குமாரன் அதிலிருத்தல்கண்டு கவலைகூர்ந்து, அவனை யணைத்துக்கொண்டு எல்லாரும் அழுதொலிக்க, அக்குமாரன் "நீவிர் எண்ணியதை செய்க" என்றனன். அப்பெரியரோ, "குழந்தாய்! பாதக மெவற்றினுங் கொடிய சங்கமக் கொலைபுரிந்தவன் ஒட்டக்கூத்தனாயிருக்க, அவனை விடுத்து இளவரசக்குரிய நின்னைக்கொல்லும்படி நின் பிதா வஞ்சகஞ் செய்தான்" என்னலும், புதல்வன் "யானும் என் தந்தையும் உடன்பட்டு இவ்விதச் செயல் புரிதலின் நீர் விரும்பி எங்களுடன்பாட்டின்படி புரிவது நீதியாம்" என்றனன். அதுகேட்டலும், அப்புதல்வனது அரும்பெருஞ் செய்கையை வியந்துகூறி அவனுடன் திரும்பி அரசனிடஞ் சென்று "அண்ணலே! உன் அரும்பெறற் புதல்வனைக்கொன்று கொலைஞனாகிய கூத்தனைக் காக்கவெண்ணியது நீதியா? நீதிப்படி புலவரை எம்பாற்றருக" என்று உறுதியாக நின்றனர்.

இம்மொழி கேட்டுக் கலங்கிய வேந்தனது செயலறவு நோக்கிய ஒட்டக்கூத்தர், வேறொரு சூழ்ச்சியை உள்ளத்திலுன்னி, 'அரசே என்னை, இவ்வடியார்பால் ஈக; அடைக்கலம் புக்க யானே இவர்க்கீக என வேண்டும்போது நீர் தருதலால் உமக்கு வருங்குறையாது' என்ற வளவில், 'இதனால் விததுவாபிமானம் இலனாயினேன்; இனி உங்கள் சித்தம்' என்று அரசன் கூறினன். உடனே புலவரைக் கொண்டு அச்சிவனடியார் சென்றனர்; சூரியன் மேற்றிசையடைந்தான்.

அக்காலத்தே, புலவரும் அக்கூட்டத்தவரை வணங்கி, "யான் முக்காலமும் சிவபூசை செய்யும் நியமமுடையேன்; இன்று அந்தியதி தவறிற்று; அது தவறாவண்ணம் விடை நல்க" என்று கேட்டுக்கொள்ள, அப்பெரியோர் அனைவரும் "அதுபுரிக" என்றனர். புலவர் அங்குள்ள அரிசொலா நதியையடைந்து மூழ்கி வெண்ணீறுங் கண்டிகையுமணிந்து ஐந்தெழுத்தைச் சிந்தித்துச் சிவபெருமானைப் பூசித்து 'என் மனக்கவலை யகல அருள்புரிக' எனப் பிரார்த்தித்து, பின்பு அருகிலிருந்த மூளைச்சாளம்மை எனனுங் காளிகோயிலை யடைந்து யாவரும் விலகியிருக்குந் தருணம் பார்த்து அக்கோயிற் கதவடைத்துத் தாளிட்டுக் கொண்டனர். இஃதறிந்த சிவனடியார்கள் பெருங்கோபங்

* கசை—குதிரைச் சம்மட்டி.



கொண்டு புலவரை யெவ்வாறாவது கொல்ல நினையுங்கால், அவருட்சிலர், புலவர் ஆலயத்துளிருப்பதால் விடிந்தபின் வெளிப்படுத்திக் கோறதே விழுமிதென்று சொல்ல, அதற்குடம்பட்டு அன்றிரவு அவரெல்லாங் காவல்பூண்டிருந்தனர்.

உள்ளே யிருந்த புலவர் 'இவ்வாபத்தை அகற்றி யருள்வாய்' என்று அக்காளிதேவியைப் பிரார்த்தித்தவழி தேவியார் முன்புதோன்றி, "அருந்தவர்க்கு அநாதித் தெய்வமாக விளங்கும் வீரபத்திரக் கடவுளே எங்குல தெய்வம் என்றெண்ணி, அப்பெருமான்பேரில் ஒரு பிரபந்த மியற்றுக" என்றனள். அதுகேட்ட புலவர், "தேவியே! யானியற்றும் பிரபந்தத்தை நீயே எழுதத் திருவுளம் வைக்கால் விரைவின் முடித்துவிடலாம்" என்னலும் தேவியும் சம்மதித்து, புலவர் சொல்லச் சொல்ல எழுதி வருவாளாயினள். இங்ஙனம் எழுதும்போது தேவியின் ஒரு கையிலேந்திய தீபம் சிறிது சலனமடைய, அத்தருணம், புலவர் வீரரசம் பாடும் நிலைமையிலிருந்ததினால் அக்குணமுடையராய், 'கைத்தீபம் அசைவதென்' என்று அத்தேவியின் கன்னத்திலே தங்கரத்தாலடித்து, பின் சாந்தரச மோதுங்கால் தாம் செய்த தவறு தெளிந்து உடனடுங்க, தேவியும் பரிவுடன் 'இச்செயல் நின்போதமின்றி நிகழ்ந்ததாகலின் அது பற்றி கவலற்க' என்றருளினள்.

இவ்வாறு, வீரபத்திரக் கடவுள் வெற்றியை நாற்சீரடிப் பாடல்களால், 'பரணி' என்னும் பிரபந்தமாகப் பாடிமுடித்தலும் சூரியனும் இருளகல உதயமாயினன். காத்திருந்த சிவசரணரும் புலவரை வெளியேறும்படி அழைத்தனர். அதற்குப் புலவர் 'யான் இரவில் வரைந்ததொரு புத்தகம் இஃது' என்று ஒரு துவாரத்தின் வழியே பரணியை நீட்ட, அதனை வாங்கி வாசித்து; இவ்வாறு நம் கடவுள் சரித்திரத்தை முடித்தது வியப்பு எனக்கூறி அதனைப் பாராட்டி, கோபந்தணிந்து குதூகலித்தவராய்த் தங்கைக் கத்தியைத் துவாரத்தின் வழியே நல்கி 'உமதிஷ்டப்படியே செய்வீராக' என்று கூறினர். அதைக்கேட்ட புலவர் 'யான் செய்த காரணமாக என்னைக் கொல்லத் துணிந்த நீர் இங்ஙனமிசைதல் ஏன்?' என வினவ, அச்சிவ சரணர், 'நம் கடவுள் தக்கன் யாகத்தை யழித்த சரிதத்தை நீர் இனிது பாடி முடித்தமையால் உம்மால் இன்னும் பல பிரபந்தங்கள் பாடிக்கொள்ளலாம் என்பதுட்கொண்டு இக்கைக் கத்தியை யீந்தோம்' என்னலும் புலவர் வெளிவந்து வணங்கினர். அவ்வருந்தவர், 'முத்திநாதனென்பவன் முன்கொணர்ந்ததொரு புஸ்தகம் மெய்ப்பொருளுயனாரது இறுதிக் கேதுவாயிற்று; நீர் வரைந்த இந்நூல்தானும் கொலைதவிர்தற்கு ஏதுவாயிற்று' என வியந்து புலவரைப் பலவாறு புகழ்ந்து, அப்புலவர் பிரார்த்தனைப்படி அவர் தீவினைக்குப் பரிகாரமும் இயற்றி யருள்புரிந்தார்கள்.

பின்னர், புலவர் கங்கை வீரேசர் சந்நிதியில் தக்க யாகப் பரணியை அரங்கேற்றி, அப்போது தாம் அடிமைப்பட்ட சங்கமக் குரவரால் பல வரிசைகள் அளிக்கப்பெற்றனராய்த் திரும்பி அரசனவையையடைந்தனர். அவனெதிர்கொண்டுவந்து 'புலவரே! கொலைப் போர் வழக்கு எவ்வாறாயிற்று?' என வினவினான். புலவர்! "ஆழாக்கு எண்ணையோடழிந்தது" என வியப்பிற்கூறி, பரணி பாடியது முதலிய செய்திகளை அறிவித்தலும், அரசவை வந்து அவையோர் மகிழ ஒட்டக்கூத்தரை வியந்து புகழ்ந்து வரிசை பல வளித்துவிடுக்க, புலவர் தம் மனையினெய்தி வறியர்க்குத் தான தருமமளித்து முன்போலச் சுற்றத்துடன் சுகமாகக் களித்து வாழ்ந்தனர்.

முற்றிற்று.

சிதம்பரம் ஸ்ரீ மௌனஸ்வாமி மடத்தினர்.

---

## குருவும் சீடனும்.

குரு:...அப்பா நீ ஒருபோதும் பொய் பேசாதே. ஒரு பொய்பேசினால் எமன் அக்கினி யாற்றின்மேல் ஒரு மயிரைப் பிடித்துத் தொங்கும்படிச் செய்வான். ஒரு மயிர் ஒரு மனிதனைத் தாங்குமா? அறுந்து அக்கினியாற்றில் விழுந்து துன்பப்படநேரும்.

சீடன் :—ஐயா! ஒரு பொய் சொன்னால்தானே ஒரு மயிரினால் பிடித்துத் தொங்கச் செய்வான். ஆயிரக்கணக்கான பொய் சொன்னால் பயமே யில்லை. நான் பல்லாயிரம் மயிர்களைப் பிடித்துக்கொண்டு வேடிக்கையாய் ஊஞ்சலாடிக் கொண்டிருப்பேன்.

# குலாபிமானப் பகுதி

## என் பணியையும் ஏற்க.

காலை சுமார் எட்டு மணியிருக்கும். பொழுது சற்று மந்தமாகவே யிருந்தது. கதிரவனது கிரணங்களைச் செடி கொடிகளின் மீதும் மற்ற பொருள்களின்மீதும் விழாவண்ணம் தடுக்க முயல்வது போன்று வானத்தில் கருத்த மேகங்கள் அடர்ந்து தவழ்ந்தன. ஆயினும், 'எனது வெப்பம்ஜீவராசிகளுக்குஅவசியம்; நீங்கள் தடுக்காதேயுங்கள்' என்பதுபோல கிரணங்கள் மேகங்களை மீறிச் சிறிது தலைகாட்டின. அப்பொழுது, தேகாரோக்கியந்தரும் காற்றையளிக்கும் மரங்களையும் பழமரங்களையும் சுற்றியுடையதும், கொடிகள் படர்ந்திருந்ததால் பசுமையாய்த் தோன்றிய பருத்த தூண்களை வெளியே உடையதும், பலவித செடிகள் புஷ்பித்திருந்ததால் நறுமணம் எங்கும் நிலவப்பெற்றதும், விசாலமானதும், 'என்னினும் இவ்வூரிற் பெரியவர் யார்' என்பாற்போன்று உயர்ந்தெழுந்து நிற்பதுமான ஒரு வீட்டின் அகன்ற கூடத்தில் நாகரீகத்திற்கேற்ப அமைத்து வைக்கப்பட்டிருந்த மேஜையைச் சுற்றி ஒழுங்காகப் போடப்பட்டிருந்த நாற்காலிகளி லொன்றில் ஆழ்ந்த சிந்தனை யுற்றிருந்தாற்போல ஒருவர் சாய்ந்திருந்தார். அவருக்குச் சுமார் 35 வயதிருக்கலாம். அவரது பரந்தமுகம் நற்குணத்திற் கறிகுறியாய் விளங்கியது. தேக அமைப்பு, ஒழுங்கானதும் நோயற்றதுமான வாழ்க்கையை வெளிப்படுத்தியது. அவருக்குமுன் மேஜையின்மீது ஒரு தினசரிப் பத்திரிகை பிரித்த வண்ணமிருந்தது. இங்ஙனம் தீரயோசனையில் ஆழ்ந்திருந்த அவரைச் சுமார் 8 வயதுள்ள ஒரு பெண் குழந்தை 'அப்பா, காபிகுடிக்க அம்மாள் கூப்பிடுகிறார்கள்' என்று இருமுறை யழைத்தது. பதிலொன்று மில்லாதிருக்கவே அது வீட்டினுள் சென்றது.

சற்று நேரத்திற்கெல்லாம் உள்ளிருந்து நற்குணமும், ஒழுங்கும், கல்வியும் துலங்கும் தோற்றமுடைய அவருடைய மனைவி அங்கு வந்தனள். அவள் 'என்னங்க, மணி எட்டே கால் ஆயிற்று. இன்னும் காபிசாப்பிட வரவில்லையே. கமலாவைக் கூப்பிட அனுப்பினேன். அது வந்து, தான் கூப்பிட்டதற்குப் பதிலொன்றுங் கூறாது தாங்கள் ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்ததாகக் கூறியது; எழுந்திரும்' என்றழைத்தாள். அதற்கவர் 'இரு சுசிலா, வருகிறேன். நான் ஒரு பெரிய விஷயத்தை யோசித்துக்கொண்டிருக்கிறேன்' என்றார். பின்பவர்களிருவருக்கும் சற்றுநேரம் ஒரு சம்பாஷணை நிகழ்ந்தது.

சுகுணராஜு முதலியார் எனப் பெயர்பெற்ற அவர் கல்விச் செல்வமும், நற்குணநிதியும், ஒப்பிடற்கரிய ஒழுக்கமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பெருந்தனவந்தர். 'பணம் பத்துவிதஞ் செய்யு'மன்றோ? பணத்தினோடு குணத்தையும் நிரம்பப் பெற்றிருந்த அவர், குமரபுரி என்னும் அவ்வூர் வாசிகளனைவரது அன்பிற்கும், மதிப்புக்கும், மரியாதைக்கும் பாத்திரராயிருந்ததோடு அங்குச் செல்வாக்கும் பெற்றிருந்தார். அவரது மனைவியாரும், கோதிலாக் கற்பும், மாசிலா மனமும், அகன்ற அறிவும் பெற்ற பாக்கியவதி அவ்விருவருடைய அன்பும் சேர்ந்ததான மரத்திற்பழுத்த கனிகளெனத் தோன்றிய மக்களிருவர். அவர்களது குணங்கள் தமது தாய் தந்தையாது குணங்களுக்கேற்பவும் பழக்கத்திற்கேற்பவும் சிறந்து விளங்கினவெனக் கூறுதல் வேண்டா. அவர்களுள் கமலாவை முன்பு தெரிந்துகொண்டோம். அவளுக்கு மூத்தவன் தேவநாதன் என்னும் வாலிபன். சுமார் 15 வயதுடைய அவன் அங்குப் பத்தாம் வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தான். அவனுக்குத் தாய் தந்தையரிடத் தன்பும், ஜீவராசிகளிடத்திரக்கமும், சீர்திருத்தத்தில் சிரத்தையும், பிறர்க்கு நன்மை புரிதலில் பிரியமும், கல்வியில் ஊக்கமும் அதிகம்.

சுகுணராஜு முதலியாருக்கும் சுசிலா அம்மாளுக்கும் நடந்த சம்பாஷணையைத் தொடங்குவோம் :

சுசீலா : என்ன விஷயம் நாதா, நான் அறியலாகாதா?

சுகு : பெரியாரொருவரை நேற்று நான் கண்டேன். அதற்கு முன் அவரை எனக்குத் தெரியாது. அவர் திறமை மிகுந்தவராகக் காணப்பட்டார். அவரது தோற்றம் அவர்தம் மேல் நோக்கங்களுக்கும், நற்குணத்திற்கும் இலக்காக இலங்கியது. நம் குலம் என்னவென்று உனக்குத் தெரியுமே?

சுசீ : என்ன, சொல்வதை விடுத்து வேறு ஏதோ கேள்வி கேட்கின்றீரே? சரி, என் குலத்தைத் தெரிந்து கொள்ளாமலா நானிருக்கின்றேன்? நாவலரும், தோள்வலரும் பலர் தோன்றியதும், பண்டைப்புகழ் பொதிந்ததும், முருகப்பெருமானையே சோதரராக உடையதென உரைக்கப்படுவதுமான செங்குந்த குலமன்றோ நான் தோன்றியது? இப்பொழுதுதான் அது தன் பழம்புகழுக்கு மூரணாக நிற்கின்றது. அதை ஏன் கேட்டீர்?

சுகு : நான்கண்ட பெரியார் நம் குலத்தவர். அவர் என்னோடு சில விஷயங்களைப்பற்றி வார்த்தையாடினார்.

சுசீ : நமது குலத்தைப்பற்றி ஏதாவது கூறினாரா?

சுகு : ஆமாம், அது ஒரு பெரிய விஷயம். அதனைக்கேட்டால் நீ அளவிலாச் சந்தோஷமடைவாய். நமது குலம் இப்பொழுதுதான் முன்னேற்றமென்னும் இடத்தை யடையப் புறப்பட்டிருக்கிறது; வழியிலிருக்கிறது. ஆயினும் அது வெகு விரைவாகவே நடக்கிறது. எனக்கு வெட்கமுண்டாகிறது.

சுசீ : என்ன வெட்கம்?

சுகு : சுசிலா, நமது குலத்தில் ஏற்பட்டிருக்கும் பெருங்கிளர்ச்சிக்கும் நாம் செவிடர்களாயிருக்கிறோமே! நமக்கொன்றுமே தெரியவில்லையே! நேற்றுவந்த பெரியார் என்னிடம் கூறிய பின்தானே நானதையறிவேன்.

சுசீ : என்னென்ன கிளர்ச்சிகள்? அவர் என்ன சொன்னார்?

சுகு : சென்னையில் நமது குலத்தின் சங்கமொன்று ஏற்பட்டிருக்கிறதாம். அது செய்யும் தீவிர சீர்திருத்தங்களையும் நன்மைகளையும் கூறுதல் சுலபத்தில் முடியாது. நம்குலத்திற்குச் 'செங்குந்தமித்திர'னென ஒரு பத்திரிகையும் நடக்கிறதாம். அதில் வரையப்பெறும் விஷயங்களை அறிந்துணர்வதால் பல சமூகங்களும், பல நகரங்களுமே சீர்திருத்த மடைகின்றனவாம். அப்பத்திரிகையும் சங்கமும் பிறந்து இரண்டு வருடங்களும் ஆகவில்லையாம். அதற்குள் இவ்வளவு நன்மைகள்! ஆஹா! நம்மூர்தானா நங்குல மித்திரனையும் அவனது நன்மையையும் பெறும் புண்ணியத்தைச் செய்திலது!

சுசீ : நமது குலத்திற்கு ஒரு ஒளி விளக்குத் தோன்றியுள்ளதா? அது நீடூழிவாழக் கடவுள் அருள் புரியட்டும்.

சுகு : இவற்றிற்கெல்லாம் முன்னின்றுழைக்கும் மூதறிவாளர்கள்தம் திறனே திறன்; குணமே குணம்; செய்கையே செய்கை. நாம் என்ன செல்வம் பெற்றிருந்தும் என்ன பயன்? நாம் கல்வி கற்றிருந்தும் பத்திரிகைகள் படித்துக்கொண்டிருந்தும் நமக்கு இக்கிளர்ச்சியொன்றும் தெரியவில்லையே. சுசிலா, இன்னொன்று: நமது குல மாணவர்கள் பலர் சங்கத்தின் ஆதரவினால் உயர்தரக் கல்வி பயிலுகின்றனராம்.

உன் சந்தோஷத்தைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும் மற்றொரு விஷயமுண்டு. நமது குலத்தின் முதலாவது மகாநாடு இவ்வருடம் ஈரோட்டில் நடக்கப்போகிறதாம். அதைப் பற்றிய பிரசுரங்களை நான் கண்ட பெரியார் கொண்டுவந்திருந்தார். அவர் அவற்றைப் பரவச் செய்துகொண்டிருந்தார். அதனாலேயே எனக்கு மவருக்கும் பழக்க முண்டாயிற்று. சுசிலா, இனி நம் குலப்புகழாகிய சூரியன் சுடரொடு பிரகாசிப்பான்.

சுசீ : சங்கத்தின் பெயரென்ன?

சுகு : தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம். நாம் விரைவில் நமது சங்கத்துக்குக் கடிதமொன்று எழுதி விபரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் யோசித்துக் கொண்டுதான் உட்கார்ந்திருந்தேன்.

சுசீ : விரைவில் கடித மெழுதுங்கள். ஆமாம், நீங்கள் சொன்னவைகளெல்லாம் அப்பெரியார் கூறியவைகளா? நீங்கள் வேறு ஏதாவது வழியில் இவ்விஷயத்தைப்பற்றி யறிந்தீரா?

சுகு : ஆமாம், அவர் கூறியதுடன் இதோ இந்தப் பத்திரிகையில் இன்றுதான் ஒரு விளம்பரங் கண்டேன். அதில் நமது 'மித்திர'னைப் பற்றியும் மகாநாட்டைப்பற்றியும் பிரசுரித்திருக்கிறது. 'மித்திரனு'க்கு வருடம் ஒன்றரை ரூபாய் சந்தாவாம்.

சுசீ : நமது 'மித்திரன்'தான் நம்மிடம் வந்து நடப்பவைகளைப்பற்றி முதலில் கூறலாகாதா? ஆமாம், நம்மைப்பற்றிச் சென்னையிலுள்ளவருக்கென்ன தெரியும்?... யாரோ கூப்பிடுகிறார்கள்.

சுகுணராஜு முதலியார் சென்று பார்த்தார். தபால்காரன் வந்திருந்தான். அவன் அவரிடம் ஒரு புத்தகக்கட்டையும், ஒரு கடிதத்தையும் கொடுத்துச் சென்றான் உடனே அவர் அதைப் பிரித்துப் பார்த்துக்கொண்டே சுசீலாவிடம் வந்தார். அக்கட்டில் மூன்று புத்தகங்க ளிருந்தன. அவைகளைக்கண்ட சுகுணராஜு முதலியாருக்கு ஆனந்தம் பொங்கி எழுந்தது. சுசீலாவும் அதனில் கொஞ்சம் பங்கிட்டுக் கொண்டாள். பின் கடிதத்தைப் பிரித்தார். அதில் பின்வருமாறு வரையப் பெற்றிருந்தது :

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

சென்னை, 24—12—28.

அன்புமிக்கீர்!

தங்களது ஆற்றலினையும், கொடையினையும், குலப்பற்றினையும் ஒருவர் வாயிலாக அறிந்து தங்களுக்கு நமது 'செங்குந்தமித்திரன்' முதல் மூன்று பகுதிகளை யனுப்பியுள்ளோம். தாங்கள் அதிலிருந்து விபரமறியலாம். தங்களது நன்றிக்கும் ஆதரவுக்கும் நமது சங்கமும் 'மித்திரனும்' பாத்திரமாகுமென நம்புகிறோம்.

பின்னும், நங்குலத்தின் முதலாவது மகாநாடு வருகிற ஜனவரி மாதம் 19, 20 தேதிகளில் ஈரோட்டில் கூடுகிறது. அப்பொழுது நமது குலப்பணிகள் பலர் அங்கு வருவர். தாங்களும் தங்கள் ஊரினரையும், நண்பர்களையும், ஏனையோரையும் அழைத்துக்கொண்டு வருவீரென எதிர்பார்க்கிறோம்.

அமைச்சர்.

பிறகு காதலனும் காதலியும் மிகுந்த சந்தோஷத்துடனும், ஆச்சரியத்துடனும், தங்கள் சம்பாஷணையோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி யுண்டானதைப் பற்றியும், தம் குல விசேஷங்களைப் பற்றியும் சிறிது நேரம் யோசித்தனர். அப்பொழுது அவர்களது மகன் தேவநாதன் தன் புத்தகங்களுடன் அங்கு வந்தான்.

சுசீ : மணி பத்தாகி விட்டதா !

தே : ஆமம்மா, நான் பள்ளிக்கூடம் போகிறேன்.

சுகு : நாம் சிரத்தையாகப் பேசிக்கொண்டிருந்ததில் நேரம்தெரிய வில்லை. வா, காபி சாப்பிடப்போவோம்.

தே : என்ன விஷயத்தையப்பா சிரத்தையாகப் பேசினீர் ?

சுகு : தேவா, நமது செங்குந்தகுல முன்னேற்றத்தைப்பற்றிப் பேசியிருந்தோம். நமது குல மகாநாடு முதலாவதாக ஈரோட்டில் கூடப் போகிறதாம்.

தே : ஓஹோ, அதைப்பற்றிய விளம்பரமொன்று நான் கண்டேன். அப்பா, நமது மகாநாட்டிற்கு நான் ஒரு தொண்டனாகச் (Volunteer) செல்லட்டுமா ?

சுகு : என் அறிவான மகனே, அப்படியே செய் நாம் அனைவரும் மகாநாட்டிற்குச் செல்லலாம். (வாலிபர் மகா நாடு ஒன்றும் அப்பொழுது கூடுகிறதாம். அதில் நீ பல அரிய விஷயங்களை யறிவதோடு நங்குல வாலிபர் பலரோடு அளவளாவவும் இடமுண்டு.

சிற்றுண்டியும் பானமும் ஆனபின், சுகுணராஜு முதலியாரும் அவர் மனைவியும் மித்திரனை வாசித்துக் கலந்து பேசித் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துக்குப் பின்வரும் கடிதமெழுதினர்.

"சுகுண நிலையம்"

குமாரபுரி, 25—12—28.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சரவர்களுக்கு.

ஐயா,

தாங்கள் அனுப்பிய 'மித்திரன்' பகுதிகளும் எழுதிய கடிதமும் வரப்பெற்றேம். என்னுடைய பிரயாசையே இன்றித் தாங்களே அவற்றை அனுப்பியதாகிய நன்றிக்கு நான் என்றும் கடமைப் பட்டுள்ளேன். நான் இதுவரை நம் குலத்தின் கிளர்ச்சியைப்பற்றிக் கேளாததை யுரைக்கவும் நம்குல த்தொண்டில் ஈடுபடாததை நினைக்கவும் கூசுகிறேன். ஆயினும், நம்குலக் கிளர்ச்சியை இப்பொழுதாகிலும் உணர நேர்ந்ததற்கு மகிழ்கின்றேன். நேற்று நான் அதைப்பற்றி ஒரு பெரியாரிடம் கேட்டுணர்ந்தேன். அவரையும் தற்செயலாகவே நான் கண்டேன். அவருக்கு நான் பெரிதுங் கடமைப்பட்டுள்ளேன். அவர் கூறியதை ஸ்திரப்படுத்த நமது 'மித்திர'னும் வந்தான். என்னைப்போல் எத்தனை பேர் இதனை அறியாதிருக்கின்றனரோ ? அறிந்த பின்னர் இனி நான் என்னாலியன்ற உதவியை நம் குலத்திற்குப் புரிந்து நம் குலவிளக்கிற்கு எண்ணெயூற்றி நம்குலப் புதல்வனும 'மித்திர'னுக்கு ஆதாரமளித்து அவனைப் பெரிதும் போற்றப் பின் வாங்கேன். தங்களது செய்கைகளையும் நமது சங்கத்தின் செய்கைகளையும் அறிந்த பின்னரும் நம் குலத்துதித்த தனவந்தர்களும் பெரியவர்களும் வாளாஇராரென எண்ணுகிறேன். அப்படி யிருப்பராயின் அவர்கள் பெரியாரெனச் சொல்லிக்கொள்ள அவர்களுக்குச் சுதந்தரமில்லை. அத்தகைய கிணற்றுத் தவளைகளுக்கும், செவிடு குருடு உடையவருக்கும் பேதம் யாது ? அவர்களது கல்வியும் செல்வமும் எதற்கு? அவர்கள் இத்தகைய நற்காரியங்களில் தலையிடாது வாளாவிருப்பதனால் அவர்களது கல்வி, செல்வம் முதலிய பயனற்றவையே யன்றோ ? கிளர்ச்சியைப்பற்றி யுணராதவர்களைத் தாங்கள் அறியின் அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

நிற்க, எனது சிறுபணியினையும் நமது சங்கத்திற்காக ஏற்றுக்கொள்ளத் தங்களை வேண்டுகின்றேன். நான் இவ்வூரிலுள்ள செங்குந்தர்களில் ஏறக்குறைய அனைவரையும் நமது மித்திரனுககுச் சந்தாதாரராககுகிறேன். எனனையும் ஒருவனாகச் சேர்த்துக்கொண்டு மாதாமாதம் பத்திரிகையனுப்பவும். பின்னும் இங்கு ஒரு செங்குந்தர் சங்கம் நிறுவி என்னாலான சீர்திருத்தங்களைச் செய்ய முயலுகிறேன். இதுவுமன்றி, எனக்குக்கொஞ்சம் செல்வமிருப்பதனாலும், நம்குல மாணவர் பலர் நம் சங்கவாதரவில் கல்வி பயிலுவதாகவும் அவர்களுக்குப் போஜன சம்பள உதவிகளைச் சங்கம் புரிவதாகவும் கேள்விப்பட்டு அவ்வழியில் சிறிது செலவிட விருப்பங்கொண்டதனாலும் நான் 2000 ரூபாய் தங்களுக்கு அனுப்புகிறேன். அதைத் தாங்கள் தங்களிஷ்டப்படி நம் குல மாணவர்களுக்கு வேண்டிய உதவியில் செலவிடவும்.

ஜனவரி௴ ஈரோட்டில் நடக்கப்போகும் நங்குல மகாநாட்டிற்கு நானும என் குடும்பத்தோடும், எனது நண்பர்கள் பலரோடும் கட்டாயம் வருகிறேன். என் மகன் தேவநாதனும் நமது மகாநாட்டில் ஒரு தொண்டனாக உழைக்க உற்சாகங் கொண்டுளான். அதனைத் தாங்கள் அனுமதிப்பீரென எண்ணுகிறேன். ஒரு மகாநாடு ஒரு சமூகத்திற் கிழைக்கும் நன்றி அளவற்றது. நமது மகாநாட்டினால் நமது குலததலைவர்கள் பலர் ஒன்றுகூடிப் பல அறிய விஷயங்களைத் தீர்மானிக்கப் பெரிதும் இயலும். அதனால் நமது குலமுற்றும் சீர்திருத்தமுற்று, மேன்மையடைந்து திகழக்குமாரப் பெருமான் அருள் புரிவாராக.

பின்னும், எனது உதவி எதற்காகிலும் வேண்டுமாயின் அதனை ஆற்ற யான் தயாராகவும் ஆவலாகவும் இருக்கிறேன். இதுவரை யான் ஊக்கமின்றி யிருந்ததனால் எனக்குண்டாகும் கூச்சத்தைத் தீர்க்க யான் இப்பொழுதாகிலும் பேரூக்கம் காட்டவேண்டிய தவசியமென வெண்ணுகிறேன். மகாநாட்டில் தங்களோடு கலந்துபேச அவாவுறுகிறேன்.

சீக்கிரமாக நமது சங்கத்தின் விபரங்களை எனக்குத் தயவு செய்து எழுதவும் பின்னும் எனக்குத் தாங்கள் அடிக்கடி கடிதமெழுதி முக்கிய விஷயங்களைத் தயையுடன் அறிவிப்பதோடு எனது சிறு பணியையும் ஏற்றுக்கொள்ளுமாறு மறுபடியும் வேண்டுகிறேன்.

இங்ஙனம்: தங்களன்பன்,

கு. சுகுணராஜு முதலியார்.

இப்பெரியாரது பணி யேற்றுக்கொள்ளப் பெற்றது என்பதைச் சொல்லுவது மிகையாகுமன்றோ ?

ஜே. தங்கவேல், இராஜதானிக் கல்லூரி.

## செங்குந்தர் மடங்கள்.

### ஒரு நிரூபம்.

அன்பார்ந்த ஐயா!

தாங்கள் பலவிடங்களிலுள்ள நமது மடங்களைப் பற்றித் தொடர்ச்சியாக நமது மித்திரனில் வெளியிட்டு வருவதைக்கண்டு மிகவும் மகிழ்ந்தேன். தங்களுக்கு இன்னும் அநேக மடங்களைப்பற்றிய விவரங்கள் தெரிந்திருக்குமென்றும், அவற்றைக் குறித்துத் தாங்கள் தொடர்ச்சியாய் எழுதி வருவீர்களென்றும் எனக்குத் தோன்றினாலும், திருத்தணிகையிலுள்ள ஒரு மடத்தின் பரிதாபகரமான ஸ்திதியைக் கண்டு சகிக்காமல் அவசரப்பட்டு நான் இதனுடன் எழுதியனுப்பியுள்ள விஷயத்தை தயவுசெய்துநமது மிதகிரனில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள விசேஷ க்ஷேத்திரங்களுள் திருத்தணியுமொன்றென்று யாவருமுணர்வர். இது காஞ்சீபுரத்திற்கு வடக்கே 26 மைல் தூரத்திலுள்ளது. பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கிருத்திகை தோறும்நம்மையாளுடையஇளம்பூரணனைத் தரிசிக்கும்பொருட்டும், பிராததனைகளைச் செலுத்தும்பொருட்டும் இங்கு வருவதுண்டு. அன்னவருள் சுமார் 100க்கு 25 பேர் நம்மவர்களென்றே சொல்லலாம். ஆகையால் இத்தலத்

தில் நம்மவர்களால் பரிபாலிக்கப் பெற்றுவரும் மடங்கள் பல விருக்கின்றன. அவை ஒவ்வொன்றைப்பற்றியும் பத்திரிகை இடந்தருமாயின் மற்றொரு சமயம் எடுத்துக்காட்டுகிறேன். அவற்றுள் சரவணப் பொய்கைக்குக் கிழக்கே சந்நிதிவீதியில் தெற்கு வாடையில் கேவலமான நிலைமையில் இருந்துவரும்.

### உக்கல் பெருநகர் மாணும்பதிமடம்.

எனவழங்கும் மடத்தைப் பற்றி மாத்திரம் ஈண்டு சொல்வேன். இம்மடத்துக் கட்டடம் நான்கு பக்கங்களிலும் கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ள ஒரு சுற்றுக்கட்டடம். இதன் மத்தியிலுள்ள முற்றத்தில் நான்கு பக்கங்களிலும் விசாலமான தாழ்வாரம் இறக்குவதற்குப் பல வருஷங்களுக்கு முன் வேண்டிய முயற்சி செய்தும் அது முற்றுப்பெறுமற் போனதாகத் தெரிகிறது. மடத்தின் கீழ்ப்புறத்தில் அதாவது மடத்து எல்லைக்குள் வெளியிடத்தில் வசதியான கிணறு ஒன்று இருக்கிறது. தங்கியிருப்போர் சமையல் செய்து கொள்ளப்போதிய இடமும் சௌகர்யங்களும் உண்டு. கட்டடத்தின் முன்புறத்தில் மூன்று அறைகளும் உட்புறத்தில் இரண்டு அறைகளும் இருக்கின்றன. விசாலமான இக்கட்டடத்தின் மற்றைய பாகங்கள், மூன்று அல்லது நான்கு வருஷங்களுக்கு முன்னருங்கூட அநேக வருஷங்களாக இதிற் குடியிருந்து வந்த பண்டாரத்தினால், மாட்டுத் தொழுவமாக உபயோகிக்கப்பட்டு வந்தது. அருமையாய்த் தளவரிசை செய்யப்பட்டிருந்த கீழ்ப்பரப்பு பல வருஷங்களாகத் தொழுவமாக இருந்திருக்குமாயின் என்ன நிலைமையில் இருக்குமென்று வாசகர்களே யூகித்துக்கொள்ளலாம். இதை யாரும் ஆக்ஷேபித்ததாகத் தோன்றவில்லை. முன்புறத்திலுள்ள அறைகளுள் இரண்டொன்றை குடும்பத்தோடு இருந்த மடத்துப் பண்டாரம் தனக்கே வைத்துக்கொண்டு மற்றவற்றைத் தன்னிஷ்டப்படி வாடகைக்கு விட்டிருந்தான். ஏராளமான ஜனங்கள் வந்து குழுமும் ஆடி தை மாதங்களிலும், மற்றவிசேஷ காலங்களிலும், பலகிராமங்களிலுமிருந்து இம்மடத்தை நம்பி வருவோருக்கு என்ன சௌகரியமிருக்குமென்பதைக் குறித்து நாம் சொல்லவேண்டியதில்லை. அங்கு தங்கவரும் மடத்துக்குரியோர் எத்தனை குடும்பத்தாராயினும் தங்கள் மூட்டைகளையும் சாமான்களையும் வைத்துக் கொள்வதற்கு ஆன இடம் உட்பக்கத்திலுள்ள இரண்டு அறைகளுள் கதவில்லாதது ஒன்றுபோக மிகுதியாயுள்ள குகை போன்ற ஒரு சிறு அறையைத் தவிர வேறு கிடையாது. வெகுதூரத்திலுள்ள பல கிராமங்களிலிருந்து இம்மடத்திற்கு வருவோருக்கு விசாலமான கட்டடமிருந்தும் படுப்பதற்குச் சரியான இடமும், சாமான்களை வைப்பதற்குச் சௌகரியமான அறைகளும் இல்லாமையால் உண்டாகும் அசௌகரியமும் இத்தகைத்தெனச் சொல்லி முடியாது. இம்மடம் தாழ்ந்திருப்பினும், கருங்கல்லினால் கட்டப்பட்டிருந்திருக்குமாயின் பலவாண்டுகளுக்கு முன்னமே இது இருந்த இடம் தெரியாமற் போயிருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

இம்மடத்தில் எழுந்தருளியிருந்த வீரபத்திர ஸ்வாமி உருவமும் ஏராளமான தீபாராதனைத் தட்டுமுட்டுச் சாமான்களும் போன இடம் யாதோ தெரியவில்லை.

வருஷா வருஷம் புதிது புதிதாய் அநேக மடங்களும் சத்திரங்களும் தோன்றிக்கொண்டே இருக்கும் இத்தலத்தில் இன்னும் கட்டிமுடிவு பெறாத சில மடங்கள் போக இதைப் போன்ற வலுத்த மடங்கள் இத்தகைய அதி கேவலமான நிலையில் கவனிப்பாறின்றிக் கிடைக்கக் காண்பதரிது. அவசியமான ரிப்பேர் மாத்திரம் செய்து கொண்டு முன்னமேயுள்ள கட்டடத்தில் ஐந்தாறு அறைகள் தடுத்து, முற்றத்தின் நாற்புறத்திலும் தாழ்வாரமிறக்கி, மடத்துப் பண்டாரத்தின் ஜீவனத்திற்குப் போதுமான வருவாய்க்குவேண்டிய ஏற்பாடு செய்து, தகுதியானவர்கள் அப்போதைக்கப்போது மேல் பார்வையிட்டு வருவாராயின் அதுவே போதுமானது. புதிதாகக் கட்டடம் கட்டவேண்டிய அவசியமின்மையால் இதற்காகப் பெரும் பொருள் செலவிட வேண்டிய அவசியமுமில்லை. அவ்வாறு செய்ய அவசியமிருப்பினும் அப்பொருளைச் சேகரிப்பதும் அசாத்தியமான காரியமல்ல. இவ்விஷயமாக மேற்கண்ட உக்கல், பெருநகர், மாணும்பதி ஆகிய மூன்றூரையும் தலைமையாகக் கருதிவரும் திருப்புலிவனம், கொடுங்காலூர், உத்திரமேரூர், வரூர், தண்டலை, மேத்துலை, சோபாக்கம், அமலம்பட்டு, பொன்னூர், பொரூர், வழூர் முதலிய அநேக கிராமத்து முதலியார்கள் பொருளுதவி செய்யத் தயாராயிருப்பதாகப் பல தடவைகளில் தெரிவித்தும், பல குலாபிமானிகள் முயன்றும் தலைமை ஸ்தானத்திலிருப்பதாகக் கருதப்படும் உக்கல், பெருநகர், மாணும்பதி



முதலிமார்களுக்கு இப்பொதுக் காரியத்தில், சிரத்தையின்மையாலும், ஊக்கமின்மையாலும் ஒற்றுமை யின்மையாலும் இதுகாறும் ஒன்றும் நடைபெறவில்லை. வீணான வழக்குகளுக்கும் வியாச்சியங்களுக்கும் ஏராளமான பொருள் செலவிடப்படுகிறதென்பதை நாம் இங்கு எடுத்துக் காட்டவேண்டியதேயில்லை. ஆகையால் தற்போது இல்லாதிருப்பது பொருளல்ல; போதிய ஊக்கமும் ஒற்றுமையும், பொது நல நோக்கமுந்தானென நன்கு விளங்குகிறது.

கற்றறிவுடையவர்களாய் வாய்மை, பொறை, நடு நிலைமை, அன்பு, சுயநலமின்மை, முதலிய நற்குணங்களமையப்பெற்று எவர்க்கும் தீங்கு நினையாது யாவரும் தம்மைப் பார்த்து ஒழுக்கம் இன்னதெனத் தெரிந்துகொள்ளுமாறு தாம் ஒழுக்கத்தின் கண்ணின்று நடந்து காட்டுவோர் அல்லது மேற்கண்ட நற்குணங்களும் ஒழுக்கமும் பூண்ட பெரியோர் பரம்பரையிற் றோன்றியோர் ஆகிய இவ்விரு திறத்தினரே பெரும்பாலும் பிறரால் தலைவர்கள் அல்லது பெரியோர்கள் எனக் கருதப்படுகிறார்கள்.

அவ்வாறு தலைமை ஸ்தானத்திற்கு வந்தவர்கள் ஒரு சிறிதும் ஒழுக்கத்தினின்று தவறாது நின்று தங்களை பின்பற்றத்தயாராக இருக்கும் பிறர்க்கும் ஒழுக்கத்தைக் கற்பித்தலே அவரது முதன்மையான கடமையாகும். அன்னோர் காலப்போக்கையும், பொதுஜன நோக்கத்தையும், அநுசரித்து நடத்தலும் அவசியமாகும். இவ்விடத்தில் நம் சமூகத்தைப் பொருத்தவரையில்மிகுந்தகுறைபாடுகள் உண்டென்பது சொல்லாமலே அமையும். தலைமையாயுள்ளவர்கள் நிலை தவறுவாராயின் அவர்களைப் பின்பற்றுவோரும் தவறுவது இயற்கையன்றோ? ஒரு சமூகமோ அல்லது தேசமோ சீர்கேடுற்றதெனில், அச்சமூகத்தின் அல்லது தேசத்தின் தலைவர்களே முன்னர் சீர்கேடுற்றோரென்பது இதனாலன்றோ நாம் அறியக் கிடக்கும் உண்மையன்றோ? உதாரணமாகக் குழந்தைகள் சிறப்பாகத் தங்கள் பெற்றோரையும், பொதுவாக உற்றோரையும் வழிகாட்டிகளாகப் பின்பற்றுகின்றன. 'நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும் மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு' எனபதற்கிணங்க, பெற்றோரும் உற்றோரும் பேசும் பாஷையையும், ஒழுக்கத்தையும் கவனித்து அன்னாரது மொழி பேதத்தையும் ஒழுக்க பேதத்தையும் கற்று வளர்கின்றன, இழிந்த மொழிகள் பேசியும், கூடாவொழுக்கம் மேற்கொண்டும் உளவோராது குழந்தைகள் அவர்களைப்போலவே பேசியும் ஒழுகியும் வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

ஆகையால் நிலைதவறிய தலைவர்கள் தாம் கெடுவதோடு நில்லாமல் தங்களைப் பின்பற்றியொழுகும் பிறரையும் கெடுக்கிறவர்களாவார்கள். சில சமயங்களில் தலைமை ஸ்தானத்தை இழக்கவும் நேரிடும். இது பொதுவாக உலகத்தில் யாவர்க்கும் பொருந்தக்கூடிய உண்மையாகும்.

இனி நம் சமூகத்தைப் பொறுத்த இரண்டொரு விஷயங்களைப் பற்றி கவனிப்போம். பல கிராமங்களால் தலைமையாகக் கருதப்படும் சில ஊர்களில் வேண்டப்படாத சில குறைபாடுகள் ஏற்பட்டிருப்பதுதான் நம் சமூகம் தற்போது அடைந்துள்ள பிற்போக்கிற்கு முக்கியமான காரணமெனக் கருதப்படுகிறது. நாட்டுத்தலை நகரங்களாயுள்ள சில ஊர்களில் தற்போது நாட்டாண்மை அல்லது பெரியதனம் என்பதே கிடையாது. இதற்குக் காரணம் ஒற்றுமையின்மையே.

ஆனால் கக்ஷிப்பிரதிகக்ஷிகளும் அவற்றின் மக்களாகிய சண்டைச் சச்சரவுகளும் வழக்கு வியாச்சியங்களுமே பெருகியிருக்கின்றன. தலை நகரங்களே அல்லது நாடுகளே ஒற்றுமையும் கட்டுப்பாடுமின்றிச் சீர்குலையுமாயின் கீழ்க் கிராமங்களும் அவற்றைப் பின்பற்றுகின்றன வென்பது ஆச்சரியமாகாது.

ஆகையால் உக்கல், பெருநகர், மாணும்பதிச் சகோதரர்கள் இம்மடத்து விஷயத்தில், தலையாகக் கருதி, தங்கள் தீர்மானத்தை எதிர்பார்த்திருக்கும் மேற்கண்ட கிராமங்களுக்குத் தங்களிடத்தில் உலக வாழ்க்கைக்கும் குலமுன்னேற்றத்திற்கும் இன்றியமையாதனவாயுள்ள ஒற்றுமை, ஊக்கம், குலாபிமானம் முதலியவை தங்கள் தலைமைக்கேற்ப உண்டென்பதைக் காட்டிக் கூடிய சீக்கிரம் திருத்தணிகை மடத்தைப் புதுப்பித்துப் பொதுஜன நன்றிக்குப் பாத்திரர்களாவார்களென நம்புகிறோம்.

நம்மவர்கள் வசத்திலுள்ள ஆலயங்கள், மடங்கள், தாமங்கள், சுதந்தரங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தலும் நமது சங்கத்தின் நோக்கங்களுள் ஒன்றாகலான், மேற்கண்ட பல கிராமங்களிலிருந்து பொருள் சேர்த்தல், மடத்துத் திருப்பணி செய்தல் ஆகியவற்றிற்கு அவசியமாயின் நமது தலைச்சங்கம் உதவியை செய்யத் தயாராயிருக்குமெனவும் நம்புகிறேன்.

வா. பொன்னம்பலம்.

## மற்ருெரு நிரூபம்.

மதராசு செங்குந்த மித்திரன் ஆபீசருக்கு நாகவேடு, சமுத்துருயன்பேட்டை செங்குந்த முதலிமார் தெரிவிக்கும் சங்கதி. நாங்கள் இரண்டு ஊராரும் எங்களுடைய திருத்தணி ஸ்ரீசிவசுப்பிரமணியர் சந்நிதானத்தில் திருக்குளம் நைருதி மூலையில் வெகு காலமாகக் கிலமாய் இருந்த மடத்தை பிரபவஹு ஆனி மாதத்திலிருந்து ரிப்பேர் செய்து வருகிறேம். இந்தச் சங்கதியை தாங்கள் வெளியிடும செங்குந்தமித்திரனில் பிரசுரம் செய்ய கோருகிறேம்.

19-12-28. அ. ந. முனிசாமி முதலியார்,
சமுத்துராயன்பேட்டை.

## சித்தோட்டில் ஒற்றுமை.

### திருவிழாக் கொண்டாட்டம்.

ஈரோட்டிற்கடுத்த சித்தோட்டில் நம்மவர்கள் 5 வருஷமாகத் தங்களுக்குள் மனவொற்றுமையின்றி இருபகுதியினராகப பிரிந்து ஸ்ரீகாமாக்ஷியம்மன் திருவிழாவை வருடாவருடம் நடத்தாமலிருந்தனர். நமது குலசசிமான்களாகிய உயர் திருவாளர்கள் சென்னிமலை வா. செ. முருகேச முதலியார், ஓ அ. ஆறுமுக முதலியார், ஓ. கொ. சென்னியப்ப முதலியார், ஊத்துக்குழி குழந்தையப்ப முதலியார் முதலியவர்களும் இன்னுஞ் சில பெரியார்களும் பெரு முயறசியெடுத்துக் கொண்டதின்பேரில் இவ்வருடம் இருபகுதியினரும் உவகையுடன் ஒற்றுமையாக ஒற்றுமைக் கறிகுறியாக ஸ்ரீகாமாக்ஷியம்மன் திருவிழாவைச் சிறப்புற நடாத்தி, ஸ்ரீகாமாக்ஷியம்மன் திருவருளைப் பெற்றனர். கைத்தொழிலின் விருத்தியை குறித்துப் பாவடிக்கருகிலுள்ள பாழுங் கிணற்ருென்றை மூடி பாவடியைப் பெரிதாக்கவும கருதி இருக்கின்றனர். நன்னெறியில் நடவாத பிராமணரைக்கொண்டு தெய்வத்திற்கு ஆராதனை செய்வதினும் அஃதுடைய நம்மவரிலேயே ஓர் உத்தமரைக் கொண்டு அஃதியற்றல் மேன்மையென அறிந்த நம்மவர் நம் முள்ளேயே ஒரு பெரியாரைத் தேர்ந்தெடுத்து ஸ்ரீகாமாக்ஷியம்மனுக்கு ஆராதனை செய்பவராக நியமித்திருப்பது போற்றற்பாலதே. ஒற்றுமை எத்தகைய காரியத்தையும முடிப்பிக்கவல்லமையுடையதென்பதை இதனாலறிந்த நம்மூர்வாசிகள் இனியும் மன வேற்றுமை கொள்ளாது ஒத்த அன்பினராகி என்றும் எம்பிரான் குகப் பிரானையேத்தி யன்னவன் அருள் பெறுவாராக,

> முத்தே மணியே முதல்வா வறுமுகவா
> சித்தோட்டவர் தாம் திறமையுடன்—ஒத்தே
> யிருக்கு மாறென் கோவே யேத்தினேன்யானே
> திருக்குமா சேனுபதி.

இங்ஙனம்:
சித்தோடு செ. பெ. சென்னியப்ப முதலியார்,
சன்மார்க்க வாலிபர் சங்க உப காரியதரிசி, பவானி.

# பொது விஷயங்கள்

## சமூக முன்னேற்றம்.

> புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
> னட்பாங் கிழமை தரும்.

இவ்வுலகிலுள்ள சகல பிறவிகளுள்ளுந் தலையாய விளங்குவது மானுடப்பிறவியெனபது எல்லாருக்கும் துப்பமுடிந்ததொன்றும். ஆயினும, மக்கட சட்டகம் பூண்ட எல்லோரையும மககளென்றுகொண்டாட இடமில்லையென்பது "நீட்டோலை வாசியா னின்ருன் குறிப்பறிய மாட்டாதவனனமரம்" "விலங்கொடு மக்களனையரிலங்கு நூல், கற்ருேரொடேனயவர்" என்னும் ஆன்ருேர் அமுதவாக்குகளினின்றும் உய்த்துணரக் கிடக்கின்றது. எனவே அறிவுக்கத்துணைப் பெருமை உண்டாதலால் பிறப்புக்கேற்ற அறிவு, ஆற்றல், செயல், குணம் ஆகியவைகள பொருந்தியிருப்பினன்றி அப்பிறபபினுலாய பயனை நுகர்தல் எளிதன்றென்பது வெள்ளிடை மலைபோல் தெள்ளிதிலுணரக் கிடக்கின்றது.

ஒவ்வொரு பிறவிகளும் தத்தமக்கு வேண்டிய அறிவை இயற்கையாகவே பெற்றிருக்கின்றனவென்று சொல்வது மிகையாகாது. அதுபோலவே மனிதனும தனக்கு வேண்டிய அறிவை இயற்கையாகவே பெற்றிருக்கின்ருன. சிலகாலங்களில் சிலருக்கு இந்த இயற்கை அறிவு மநதமாக மழுங்கியதாகவிருக்கும். அதனை நிலை நிறுத்தி வளர்ப்பதற்குக் கல்விப்



129808

பழக்கம் வேண்டப்படும். பொதுவாய் மனிதர்கள் இயற்கையிலேயே ஒத்த உணர்ச்சியுடைய வர்களாயிருக்கின்ருர்களென்று சொல்வதில் இழுக்கென்ன. மிகவுந் தாழ்ந்த பிறப்பென்று கருதும் மிருகம், பட்சி முதலானவைகள் தாமும் அவ்வித உணர்ச்சி பெற்றிருப்பதனலன்ருே அவைகள் தம்மினத்தை அறிந்து பழக்கமின்றிச் சேர்ந்து கொள்ளுகின்றன? இவ்விடம் எடுத்துக்காட்டாகக் குயிலைப்பற்றிக் கூறுகில் அது "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா, னட்பாங்கிழமை தரும்" என்ற நாயனுர்வாக்கை ஞாபகத்திற்குக் கொணர்கின்றது. ஆயின் இக்குயிலானது, காகம் அடைகாத்துக் குஞ்சுபொரித்து வளர்த்த போதிலும் தம்மினத்துடன் இயற்கையிலேயே யமைந்த உணர்ச்சியினுல் பழக்க மின்றியே பறந்து சென்ற அன்றே சேர்ந்து கொள்ளுகின்றது. அதுபோல அறிவினுல் மிக்குயர்ந்த நமக்குப் புணர்ச்சியும், பழக்கமும் நட்பினுக்கு வேண்டாவென்பது நன்கு புலனும். மிருகம், பட்சி ஆகியவைகளுள் தானும் பல்வேறு பிரிவாம் ஜாதிகள் காணப்படின் நம்நாட்டிற் காணப்படும் பல்வேறு சாதி வேறுபாடுகள் மனிதருள் அதிகம் இறும்பூதை விளையாவென்றே சொல்ல வேண்டும். இதனுண்மைகளை அறிஞர் உய்த்துணர்க

ஆயினும், பொதுவாய்ப் பல்வேறு சனசமூகத்தார் ஒன்று கூடுதில் விசேஷ உணர்ச்சியாம் கல்வி, பழக்கம், உணர்ச்சி ஆகியவைகள் வேண்டியிருந்தபோதிலும், தனி ஒரே சமூகத்தார் அப்படிக் கூடுகில் விசேஷ உணர்ச்சியாம் கல்வி ஆதிய காரணங்களின்றிச் சாதாரணமாய்இயற்கை அறிவே போதுமென்பது மேற்போந்த நியாயத்தினுற் சொல்லாதே விளங்கும். நம் நாட்டிலுள்ள பல்வேறு சன சமூகத்தார்கள் அபிப்பிராய பேதமின்றி ஒத்த உணர்ச்சியுடையோராய் "புணர்ச்சி பழகுதல் வேண்டா.... .... ...." வென்ற அருமைத் திருக்குறளுக் கிலக்கணமாக விருந்ததினுலன்ருே அவர்கள் சமூக வாழ்க்கையில் மிக்குயர்ந்து வாழ்வதைக் காண்கிறேம்?

ஆனுல் நம் செங்குந்தர்களுள் மிகச் சிலரொழிய வனையோரிடத்து இவ்வித குணம் காணுமலிருப்பது மிகவும் வருத்தத்திற்கிடம். இதனுலல்லவா இவர்களுட் கட்சிபேத மேற்பட்டதும், பண்டைப்புகழை இழக்க நேர்ந்ததும், தம் பண்டைத் தருமங்களை மற்ற இதர சாதியார் கைப்பற்றி பரிபாலித்ததும், சமூக வாழ்க்கையில் முன்னேறாது தத்தளிப்பதும், முன்னேற முயல்வோரை ஏறவொட்டாது கோடரிக் காம்புபோல் மன்றேறி வழக்காடி வறிஞராக்குவதும்? இவைகளை யெல்லாம் பரிகரிப்பதற்காக இச்செங்குந்த மித்திரனென்னும் இளஞ் சூரியனுதயமானதும் எல்லோரும் நன்கறிவார்கள்.

உழுவலன்புள்ள செங்குந்த உத்தமர்களே! நாம் பெற்றிருந்த இயற்கை ஒத்த உணர்ச்சியின்மையாகிய இருளையோட்டுஞ் சூரியன் உதயமாகியும், அவ்விருள் நீங்கியும் நீங்காததுமாய் பல இடங்களிலிருப்பது அச்சூரிய ஒளி எங்களுள் நன்கு புகவில்லையென்பது சொல்லாதே விளங்கும். அந்தோ! நமது கன்மம் இவ்வளவு வன்மையுடைத்தா? நமது அறிவை வளரவொட்டாது மந்தமாக மழுங்க வைத்திருப்பது நாங்களல்லாது நான்முகன் எழுத்தல்ல. 'தெய்வத்தானுகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" என்ருர் பெருநாவலரும். இம் மித்திரனைப் பிறப்பித்த பெரியார் எடுத்த பெரு முயற்சியையும், வருத்தத்தையும், அவர்கள் குலாபிமானத் தொண்டினையும் உணரவல்ல செங்குந்தரனைவரும இம்மித்திரன் பூரணஆயுள் பெற்று விரும்பிய போகத்தை நுகர ஆதரவளிப்பதிற் சற்றேனும் பின் வாங்கார்களாதலால் இவ்விடம் விரித்தெழுதுவது மிகையாகுமென்றஞ்சிவிடுதும்.

பண்டைக்காலத்திற் சோழ ராசாக்கள் சன்மானம் பெற்றும், குறுநிலமன்னர்களாயும் இன்னும் பல்வேறு சனசமூகத்தாரினும் மேம்பட்டும் இருந்த இச்செங்குந்தர்கள் தற்போது இவ்வளவு தாழ்ந்த நிலையிலிருப்பதன் நியாயம் பல வுளவேனும் எனது அறிவுக் கெட்டியது தமது பிறப்புரிமையை அறியாது ஒழுக்கத்திற் தவறியமையே முதன்மையானதாம். "மறப்பினும் ஒத்துக்கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" "ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற பெருநாவலர் பேருரைகளாலு மறியக்கிடக்கிறது. செங்குந்தர்களுட் பெரும்பாலோர் மதுமாமிசம் புசிக்கப் பழகியமையை நினைக்குந்தோறும் எழும் வருத்தம் ஒடுங்குந்தரத்ததன்று பிறப்பினுலன்றி ஒழுக்கத்தாலுமுயர்தல் மிகவும் சால்புடைத்து.

நமது சமூகம் முன்னேற்றமடையில் ஒவ்வொருவரும், தடாகத்தோடு முரணிச்சௌசஞ்

செய்ய நிராகரித்த முட்டாளைப்போல வாளா வீண் விவாதம் புரிந்து கெடாது "அடப்பன் கொடியுந் திரண்டால் மிடுக்கு" என்னும் ஆன்ேறார் வாக்கைப் பொன்னைப்போற் போற்றிக் கொள்ளவேணும். மேற்சொன்ன "அடம்பன் கொடியுந்திரண்டால் மிடுக்கு" என்னுமெண்ணம் ஒவ்வொரு செங்குந்தர் மனதிலும் பிறக்க வேணுமேயானல் அவர்கள் கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் முறையே சோழ தேசத்திலும் பாண்டிய நாட்டிலுமிருந்து ஒருவரை ஒருவர் நேரிற் காணுமலிருந்தும் அவர்கள் ஒத்த உணர்ச்சியுடையோர்களாய் எவ்விதம் நட்பு பூண்டு மேற்சொன்ன "புணர்ச்சி பழகுதல் வேண்டாம்..." யென்ற அருமைத் திருக்குறளுக் கணிகலமாகவிருந்து ஒரு சேர இவ்வுலகை விட்டகன்றார்களோ அது போலச் செங்குந்தர்களும் பல்வேறு தேசங்களிலிருப்பினும் ஒரே சமூகத்தார், ஒரே குடும்பத்தார், ஒரே இடத்திலிருந்து பழகிய ஒத்த உணர்ச்சியுடையோர்கள் போல் ஒருவரை ஒருவர் கேள்வியளவில் நண்பு பூண்டு நட்பின், நாமகள் முதலிய சகல செல்வங்களும் நம்மைவிரும்பி வந்து சேரும். நம் பண்டைப் புகழினைத்தும் பெற்றுச் சின்னாளிற் சமூக வாழ்க்கையிலும் உயர்பதவியைப் பெற்று வாழலாம்.

Ceylon Government
Quarantive Camp,
Tataparai,
9th September 1928.

P. K. குழந்தைவேல் முதலியார்.

## தொழிற் பகுதி

### எஜமான்களும் கூலியாட்களும்.

#### ஒரு நிரூபம்.

கனம் பொருந்திய ஸ்ரீமான் ஆசிரியர் அவர்களுக்குக் கடலூர் ராமசாமி பிள்ளை எழுதியது: எங்கள் ஊரில் சென்ற நான்கு வருட காலமாக செங்குந்தர்களின் ஜவுளி வியாபாரம் கெட்டு இப்போது மிகவும் மோசமான நிலைமைக்கு வந்துவிட்டது. காரணம் வியாபாரிகள் ஒற்றுமையில்லாமல் ஒருவர்க்கொருவர் போட்டியாக அயலூர்களுக்கு ஜவுளிகளைக் கட்டிக்கொண்டுபோய் விலையைக் குறைத்துக் கொடுத்துவிட்டு வந்து ஒப்பந்த தறிகாரரிடத்தில் ஷை விலைவாசியைப் பிடித்துக்கொண்டு நூல்கொடுத்து வந்தார்கள் தறிகாரர்களுக்குச் சேலை ஒன்றுக்கு 1—4—0 ரூபாய் இருந்த கூலியைச் சென்ற நான்கு வருடகாலமாக வியாபாரிகள் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைத்து இப்போது சேலை 1-க்குக் கூலி 0—8—0வில் கொண்டுவந்து விட்டார்கள். அதிலும் நெய்த கூலிக்கு ரூபாய் கொடுப்பதில்லை. ஒப்பந்தம் கொடுக்கக்கூடிய வியாபாரிகள், முதலாளிகள் அரிசி பலசரக்கு இருக்கக்கூடிய கடைகளை ஒப்பந்தம் பேசிக்கொண்டு அந்தக் கடையில் சரக்கு வாங்கிக்கொள்ளும்படி தறிகாரர்களுக்குச் சீட்டு எழுதி கொடுத்துவிடுகிறார்கள். கடைக்காரன் 1 ரூபாய் சீட்டுக்கு 0—14—0 அணு சாமான்தான் கொடுக்கிறான். அடுத்த கடைக்கு ஒப்பந்தம் சரக்குக் கொடுவென்று கேட்டால் நாங்கள் இப்படித்தான் கொடுப்போம் என்று கடைக்காரன் சொல்லிவிடுகிறான். இது விஷயமாக ஏழை தறிகாரர்கள் முதலாளிகளிடத்தில் எவ்வளவோ புகார் சொல்லியும் முதலாளிகள் அதைக் கவனிப்பதுமில்லை சீட்டை நிறுத்தி ரூபாய் கொடுப்பதுமில்லை. இவைகளைக் கணக்குப்பார்த்தால் ஒரு கூலி தறிகாரனுக்குச் சராசரி நாள் ஒன்றுக்கு 0—5—0 வருமானம் கிடைக்கிறது. இந்த வருமானத்தைக்கொண்டு அவர்கள் ஜீவனம் செய்யவேணுமென்றால் அவர்களுடைய நிலைமையைச் சொல்லவும் வேண்டுமோ? பாவம், அவர்களின் கஷ்டத்தை நீக்குவதற்கு ஒருவரும் முன் வரவில்லை; தங்களால் நிவாரணைசெய்துகொள்ளவும் சக்தியில்லை. அவர்கள்படும் கஷ்டத்தை எழுதவேணுமானல் இந்த லட்டர் இடம் தாராது. ரொக்க ரூபாய்க்கு நூல் எடுத்து நெய்வதற்கும் சக்திகிடையாது. இவ்வித நிலைமையில் இருக்கும்போது சில வியாபாரிகள் சேலைகளைப் போட்டியாக விலை குறைத்துக் கொடுத்துவிட்டுவந்து 'தறிக்கு நூல்கொடுக்கமாட்டோம்' என்று சொல்லி இப்போது சேலை ஒன்றுக்குக் கூலி மூன்று அணு குறைத்துக்கொடுப்பது என்று சொல்வதை பார்த்தால் கொஞ்சமும் ஈவு இறக்கமில்லாத மிருக புத்தியுள்ள வியாபாரி யென்றுதான் சொல்லவேண்டும். இவைகளை யெல்லாம் பார்த்துச் சகிக்க முடியாதவர்களாய்ப் பிரபல வியாபாரிகளான ஸ்ரீமான்கள் க.சு. மாடசாமி முதலியாரும், தெ. ரூ.மாடசாமி முதலியாரும், மாரியப்ப மூப்பனரும் மற்றும் சில வியாபாரிகளும் சேர்ந்து ஏழைகளின்பேரில் இரக்கம் கொண்டு ஏகோபித்து நெசவுத்தொழிலாளர் சார்பாகவும், முதலாளிகள் சார்பாகவும் 15-11-28-ல் ம-ா-ா-ஸ்ரீ அம்பலம் சிவனேஞ்ச முதலியாரின் தலைமையின்கீழ்க்கூட்டம் கூட்டப்பட்டுச்சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஸ்ரீமான் க. சு. மாடசாமி முதலியார் தொழிலாளியின் நிலைமையையெடுத்துச்சொல்லி வியாபாரிகளின் அதர்மங்களைக் கண்டித்துப்பேசினர். ஸ்ரீமான் முதலியார் வியாபாரியா யிருந்தும் தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் பேசியதற்காக அன்னோர்க்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.



நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விபரம்.

1. முதலாளிகள் தறிகாரர்களின் ஒப்பந்தக் கூலியைக் குறைக்கக்கூடாதென்றும் தறிகாரர்கள் குறைத்து நூல் எடுக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

2. வியாபாரிகள் ஜவுளிகளைக் குறையாமல் ஒரே விலையாய் விற்கவேண்டுமென்றும் நபர் ஒன்றுக்கு நூறு ரூபாய்க்கு உடன்படிக்கை யாதாஸ்து ஊருக்கு எழுதி கொடுக்கவேண்டுமென்றும், மீறினவர்கள் 100 ரூபாய் ஊருக்கு கட்டிவிட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

3. நெசவுத் தொழிலாளர்களுக்குக் கடைக்குச் சீட்டுக் கொடுப்பதை நிறுத்தி ரூபாயாக வாரந்தோறும் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வருஷப் பொதுக்கூட்டம்.

### தைமீ 9-ம் தேதி காலை ஈரோட்டில் மகாநாட்டுக் கொட்டகையில் கூடும்.

#### அமைச்சர் அறிக்கை.

நம் குலமக்களுக்கு விழிப்பையும், புத்துணர்ச்சியையும் நமது மித்திரன் மூலமாகவும், பிரசார மூலமாகவும் உண்டாக்கியதன்றி, இம் மகாநாடுகளைக் கூட்டுவிப்பதற்குக் காரணமாயிருக்கிற ஷை நமது தலைச்சங்கத்தின் இரண்டாவது பொதுக்கூட்டம் சங்கத்தின் சட்டப்படி மகாநாடுகளுக்கு அடுத்த நாள் விபவஸு தைமீ 9-ந்தேதி திங்கட்கிழமை காலை 9-மணி முதல் 11-மணி வரையில் ஈரோட்டில் மகாநாட்டுக் கொட்டகையில் கூடும். பல விடங்களில் செங்குந்தர் சங்கங்கள் அமைக்கப் பெற்றிருப்பினும், அவற்றுள் சட்டப்படித் தலைச்சங்கத்திற்கு மனுவனுப்பிக் கட்டணம் செலுத்தித் தலைச்சங்கத்தால் அங்கீகரிக்கப்பெற்ற கிளைச் சங்கங்களிலிருந்து சங்கம் ஒன்றுக்கு இரண்டு பேராகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் மாத்திரமே இத்தலைச்சங்கப்பொதுக் கூட்டத்திற்கு அங்கத்தினராவர். இக்கனவான்களை இக்கூட்டத்திற்கு அவசியம் வரும்படி இதனுல் கேட்டுக்கொள்ளுகிறோம். இவர்களுக்கு மாத்திரமே இப்பொதுக் கூட்டத்தில் ஓட்டுரிமையுண்டு.

இக்கூட்டத்தில் நமது தலைச்சங்கத்தின் வரவு செலவு கணக்குகளும், இது வரையில் சங்கம் செய்துள்ள வேலைகளும் குறிக்கப்பெற்ற அறிக்கைப் பத்திரமொன்று வாசிக்கப்பெறும். பிறகு சங்க உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெறுவர். இக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பெறும் உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் சட்டதிட்டப் பிரகாரம் அவ்வுத்தியோகங்களில் மூன்று வருஷகாலமிருக்கலாம். பின்னர் மகா நாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை உத்தேசித்துத் தலைச்சங்கம் அடுத்த வருஷத்தில் செய்யவேண்டிய வேலைகளைப் பற்றியும், முறைகளைப்பற்றியும் முடிவு செய்யப் பெறும். நமது தலைச்சங்கத்தின் பொருளாதார நிலைமையைப் பற்றியும், அது செய்து வரும் வேலையைப்பற்றியும் ஒவ்வொரு செங்குந்தரும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகையால் இப்பொதுக்கூட்டத்திற்கு யாவரும் வரலாம்.

இக்கூட்டம் தொடங்குவதற்குமுன் நமது தலைச்சங்கத்துக்குப் பொதுக்கூட்டத்தின் அங்கத்தினர்களது புகைப்படமொன்று மகாநாட்டுக் கொட்டகைக்கு அருகில் எடுக்கப்பெறும். இதற்குரிய உடைகளோடு அங்கத்தினர்கள் ஆஜராகும்படி வேண்டிக் கொள்ளப்பெறுகின்றனர்.

பொதுக்கூட்டம் முடிந்தவுடன் தலைச்சங்கத்தினரால் இவ்வருஷத்திய செங்குந்தப் பட்டதாரிகளுக்கு ஒரு நல்விருந் தளிக்கப்பெறும். கூட்ட முடிவில் பட்டதாரிகளுக்குச் சில ஆசிமொழிகள் கூறப்படும்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
தலைசங்க அமைச்சர், சென்னை, 1-1-1929.

## ஈரோட்டைச் சூழ்ந்துள்ள புண்ணிய ஸ்தலங்கள்.

"ஆருத்திர கபாலபுரி யென்று ஆதியிலும் பிறகு மயிலை யென்றும் பெயர்கொண்ட ஈரோட்டில் தற்சமயம் நமது குலத்தவர் முதலாவது மகாநாடு கூடப்போகிறது. இதைச் சுற்றிலும் பத்துப் பதினைந்து மைல் தூரத்துக்குள்ளாக, நமது ஆங்கில அரசாங்கத்தார் இந்தியாவுக்கு வருவதற்குச் சற்றுமுன் வரையில் பல இந்து அரசர்களாலும் சிற்றரசர்களாலும் ஆளப்பட்டதும், மகான்களால் பாடப்பெற்றதும், தற்காலத்தும் மிகப் பெருமையுள்ளதுமான தீர்த்தங்களும், ஸ்தலங்களும் பொதிந்து கிடக்கின்றன. அவைகளினுடைய பூர்வீக சரித்திரங்களையும் பெருமைகளையும் சற்று ஊன்றிக் கவனித்தால், ஒரு காலத்தில் நமது நாடும் இவ்வளவு பெருமை யடைந்திருந்ததா? இன்னும் இருந்து வருகிறதா? என்று ஆச்சரியப்படாமலிரோம். அப்படிப் பெருமையுற்ற ஸ்தலங்களில் மிகவும் முக்கியமானவை:—(1) ஆருத்திர கபாலபுரி என்னும் ஈரோடு, (2) பவானி, (3) கொடுமுடி, (4) கரூர், (5) திருச்செங்கோடு, (6) அவிநாசி, (7) திருமுருகன் பூண்டி, (8) சென்னிமலை, சிவன்மலை, (9) பேரூர், அல்லது மேலைச்சிதம்பரம், (10) மங்களகிரி என்னும் பெருமாள்மலை, (11) வெஞ்சமாக்கூடலூர், (12) அரச்சலூர் என்னும் சித்தாதியர் மூலிகைகள் கிடைக்குமிடம் ஆகியவைகள்.

### ஆருத்திர கபாலபுரி (ஈரோடு).

இவ்வூர் காவேரி நதிக்கு அருகாமையிலுள்ளது. கபாலீசுரர் சுயம்புலிங்கம். இந்த ஆலயம் சோழராஜனால் கட்டப்பட்டது. இந்த ஆலயத்திற்கு வெளிப்பிரகாரத்தில் பூர்வீகமான ஓர் வன்னிமரம் இருக்கிறது. அந்த மரத்தினாலேயே அவ்வாலயத்திற்கு மகிமை ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. (சரித்திரச் சுருக்கம்) ஒரு கொடிய அரக்கனால் குடிகளும், தபசிகளும் மிகவும் துன்புறுத்தப்பட்டனர். அம்மனும் ஸ்வாமியும் அவ்விடம் தேவர்கள் புடைசூழ எழுந்தருளி அந்தக் கொடிய அரக்கனைச் சம்மாரம் செய்தனர். அதன்பின் அவ்வரக்கன் உயிர்விட்ட இடத்தில் ஓர் வன்னிமரமாக முளைத்து விட்டான். அவன் மேலும் குடிகளுக்கு துன்பம் விளைவிக்காமலிருக்கும்பொருட்டு அவ்விடத்திலேயே தேவர்கள் இருந்து வருகிறார்கள் என்னும் கருத்தைக்கொண்டு அவ்விடத்தில் ஸ்வாமி அம்மன் சஹிதம் தேவர்களும் புடைசூழச் சிலைகளை அடித்துச் சோழராஜனால் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆலயத்திற்குச் சேர்ந்தாற்போல் பெருமாள் கோவில் ஒன்று இருக்கிறது. இதுவும் ஏறக்குறைய சிவன்கோவில் விஸ்தீரணமுடையது. இது ஓர் முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதில் சேஷசயனமாகப் பள்ளிக்கொண்டுள்ள ரங்கநாத ஸ்வாமி சுமார் 10 அடி நீளமுடையது. தென்னிந்தியாவிலேயே இவ்வளவு பெரிய பீடம் கிடையாது.

மேற்கண்ட ஆலயங்களுக்குத் தென்கிழக்குப் பாரிசத்தில் ஓர் ராஜகுமாரனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மகிமாலீசுரர் ஆலயமும் ஒன்று இருக்கிறது. வெளிப்பிரகாரத்தில் அப்பர் சுவாமிகள் மடமும் இருக்கிறது. இந்த ஸ்வாமியின் (ஆவுடையார்) சுற்றளவு 20 அடி.

### பவானி.

பவானி:—இது சங்கம க்ஷேத்திரம் ஈரோட்டிற்கு 9-வது மைலிலுள்ளது. பஸ் சார்ஜ் 6 அணா. இந்த ஆலயம் காவேரி, பவானி என்னும் ஸரஸ்வதி நதிஆகிய இரண்டும் கூடுமிடத்தில் இருக்கிறது. இந்த ஸ்வாமியின் பெயர் சங்கமேஸ்வரர், அம்மன் பெயர் வேதநாயகி. இரண்டுநதியும் கூடுமிடத்தில்அமுர்தநதி இருக்கிறதென்றும் அதில் ஸ்நானம் செய்தால் சகல பிணிகளும் தீருமென்றும் சொல்லப்படுகிறது. இதை பஞ்சகிரி மத்யப் பிரதேசமென்றும் இதில் தகனம் செய்யப்படுவோரின் பிரேதத்தின் கபாலம் வெடிப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது. பஞ்சகிரிகளாவன;—(1) வேதகிரி (ஊராச்சிக்கோட்டை மலை) (2) சங்ககிரி (துர்க்கம்) (3) நாககிரி (திருச்செங்கோடு) (4) மங்களகிரி (பெருமாள் மலை) (5) பத்மகிரி (பவானியில் காயத்திரிக் கட்டத்திலுள்ளது) இதில் நின்று பார்த்தால் மேற்கூறிய நாலுகிரிகளும் தென்படும். (இவ்விடம் ஆதிகேசவப் பெருமாளும், செல்லாண்டியம்மாளும் வீற்றிருக்கிறார்கள்.

### கொடுமுடி.

அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் ஆகிய மூவரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கே காவேரிக் கரையில் மகுடேசுவரர் கோவில் ஒன்று இருக்கிறது. ஈரோட்டிற்கும் இதற்கும் 15 மைல் ரயில்வே கட்டணம் ரூ. 0-7-6. இந்த ஸ்தலத்தைச் சேவித்தால் அநேக பிணிகள் தீருமென்று சொல்லப்படுகிறது. மும்மூர்த்திகள் ஆலயமும் சேஷசயனமும் இவ்விடம் உண்டு.

### கரூர்.

இங்குப் பசுபதி ஈஸ்வரர் கோவில் ஒன்று இருக்கிறது. இது கொங்கு நாட்டின் தலைநகரம் ஈரோட்டிற்கு 40-மைலில் ஈரோடு, திருச்சி லயனிலிருக்கிறது. இதிலுள்ள ஸ்வாமி ஒரு காலத்தில் ஒரு பசுவால் பூஜை செய்யப்பட்டதென்று சொல்லப்படுகிறது. அதாவது அப்பசு தினந்தோறும் ஸ்வாமி



இருக்குமிடஞ் சென்று தன் பாலைச்சுரந்து அபிஷேகம் செய்து வந்ததாம். இதுவும் சோழனால் கட்டப்பட்டது. இந்த ஆலயத்திற்குச் சமீப தூரத்தில் அமராவதி நதி ஓடுகிறது. இதற்குச் சற்று தூரத்தில் தான்தோன்றிப் பெருமாள் மலை இருக்கிறது. புண்ணிய க்ஷேத்திரங்களில் இதுவுமொன்று. இங்கு கருரார் நிலையமும் இருக்கிறது. எறிபத்த நாயனரும், சிவகாமியாண்டாரும் பிறந்த திருப்பதியாகும்.

### திருச்செங்கோடு.

இது ஒரு சிறந்த பாடல் பெற்ற ஸ்தலம். மலை அடிவாரத்திலேயே நகரம் இருக்கிறது. மலையின் பேரில் (அர்த்தபாகம்)உமை அர்த்தநாரி ஈஸ்வரர் எழுந்தருளி இருக்கிறார். திரு + கொடி + மாட + செங்குன்று + ஊர் என்றும் பெயர் மருவி திருச்செங்கோடு என்பதாயிற்று. சிகரத்தில் பெரிய ஆலயமொன்றுண்டு. இது (1) அர்த்தநாரி ஈஸ்வரர், (2) செங்கோடு வேலப்பர் (3) ஆதிகேசவப் பெருமாள் ஆகிய மூன்று தெய்வங்களையும் கொண்டுள்ள ஸ்தலம். இது ஈரோட்டிற்கு 15 மைல் தூரத்திலுள்ளது. சங்ககிரி ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கி பஸ் மூலமாய் இத்தலத்திற்குப் போகலாம்.

### அவிநாசி.

இது காசியில் ஒன்று. இங்கு ஒரு கங்கா தீர்த்தமும் இருக்கிறது. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் முதலைவாயினின்றும் பிள்ளையை வரவழைத்த க்ஷேத்திரம். இங்கு ஒரு ஸ்வயம்பு லிங்க சிவாலயமும் இருக்கிறது. அருணகிரிநாதரால் பாடல் பெற்றது. சுந்தரமூர்த்தி ஆலயமும் இருக்கிறது. இது திருமுருகன்பூண்டிற்கு 2-வது மைலிலுள்ளது.

### திருமுருகன் பூண்டி.

இவ்விடம் ஸ்வயம்பு லிங்க சிவாலயம் ஒன்று இருக்கிறது. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அவிநாசியிலிருந்து பொன் கொண்டு வந்ததைத் தேவகணங்களையே மூவராக்கிப் பறித்த இடம். பிறகு அவர் ஆலயம் சென்று கீழ்க்கண்ட பாடலைப் பாடியிருக்கின்றார்.

"நீடாரும் புகழ் நீள்நிலத்தில் உயர்ந்தோங்கும்
காடாருமுல்லை வளர் கடவுளை நினையாமல்
பாடாதகுறை தமியேன் பட்டது போதாதோ,
வீடாரும் எழுதும் தமிழிசைப் பதிகம் ஓதுகின்றார்."

பிறகு ஸ்வாமி பொருளைக் கொடுத்து அனுப்பியிருக்கிறார். இங்குப் பிர்மஹத்தித் தீர்த்தம் ஒன்றிருக்கிறது. திரு முருகனை நினைத்து அதில் முழுக பிர்மஹத்தியும் பயித்தியமும் நீங்கும். இதைப் பிரத்தியக்ஷமாய்க் காணலாம். இது திருப்பூருக்கு மூன்றாவது மைலிலுள்ளது.

### சென்னிமலை, சிவன்மலை.

அருணகிரியால் பாடப் பெற்ற தெண்டபாணி ஸ்தலங்கள். ஈரோட்டிலிருந்து 13-வது மைலிலுள்ளது. ரெயில்வே ஸ்டேஷன் ஈங்கூர்; ஈரோட்டிற்கு 3-வது ஸ்டேஷன்.

### பேரூர் (மேலைச் சிதம்பரம்)

இது சிதம்பரத்திற்கு ஒப்பானது. இவ்விடம் சாந்த லிங்க ஸ்வாமிகள் அடக்கமாயிருக்கிறார். அருகாமையில் காஞ்சிமாநதி ஓடுகிறது. ஆருத்திரா தரிசனம் இவ்விடம் நிரம்ப விசேஷம். பங்குனி உத்திர உத்சவம் நடைபெறுகிறது.

### மங்களகிரி (பெருமாள் மலை.)

ஈரோட்டிற்கு 5-வது மைலில் உள்ளது. காவேரி நதியும் ஒரு வாய்க்காலும் அருகாமையில் ஓடுகின்றன. இந்த ஸ்தல சேவையால் அநேக கொடிய வியாதிகள் நீங்கியிருக்கின்றன.

### வெஞ்சமாக் கூடலூர்.

கரூருக்கு அருகாமையிலுள்ளது. முக்கிய பாடல் பெற்ற ஸ்தலங்களில் இதுவுமொன்று.

### அரச்சலூர்.

அருணகிரியால் பாடல்பெற்ற தெண்டபாணி ஸ்தலம். சித்தாதியர் மூலிகைகள் இப்பவும் கிடைக்குமிடம். மலைப்பாங்கான இடம்.

### கொங்குநாட்டு ஏழு பாடல்பெற்ற ஸ்தலங்கள்.

(1) கரூர்.
(2) வெஞ்சமாக் கூடலூர்
(3) கொடு முடி (மகுடேசுரர்.)
(4) திருச்செங்கோடு (அர்த்தபாகம்)
(5) பவானி
(6) திருமுருகன் பூண்டி
(7) அவிநாசி (காசித் தீர்த்தம்).

எல்லா ஸ்தலங்களுக்கும் ஈரோடு மத்தியாயிருக்கிறது.

மா. அ. கனகசபை முதலியார், காரியதரிசி,

# செங்குந்தர் கிளர்ச்சி

## மகாநாட்டுப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தல்.

இம்மாதத்திய மித்திரனில், அடுத்த தை மாதத்தில் கூடவிருக்கும் மகாநாட்டைப்பற்றி பல விஷயங்கள் பிரசுரிக்கவேண்டி யிருப்பதால், இடமின்மை நோக்கிக் கிளைச்சங்கங்களின் நடவடிக்கைகளைச் சுருக்கமாக எழுதவேண்டியிருக்கிறது.

### செங்கற்பட்டு ஜில்லா.

### காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கம்.

2—12—28ல் மாலை 6-மணிக்குப் பிள்ளையார் பாளையம் மண்டபத்தெருமண்டபத்தில் ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று திருவாளர் மு. குப்புசுவாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'சங்கம்' என்பது பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின் வரவு செலவு கணக்குப் படிக்கப்பெற்று, சட்டதிட்டங்களில் சில திருத்தப்பெற்றுக் கீழ்க்கண்ட நிர்வாக அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

திருவாளர்கள் வீ. திருஞானசம்பந்த முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், அ. செ. கந்தசாமி முதலியார், சி. அருணாசல முதலியார், தெ. முத்துகுமாரசாமி முதலியார், சு. முருகேச முதலியார், கா. அருணாசல முதலியார், மு. சொர்ணசபை முதலியார், மு. சிங்கார முதலியார், ம. பா. கோபால் முதலியார், ம. இராஜகோபால் முதலியார்.

இச்சங்கத்தின் பிரதிநிதிகளாக தென்னிந்திய மகாஜன சங்கத்துப் பொதுக் கூட்டத்துக்கு திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரும், திரு. சி. அருணாசல முதலியாரும் ஆகிய இரு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

செங்குந்தர் முதலாவது மகாநாட்டிற்குக் கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் பிரதிநிதிகளாக இச்சங்கத்தின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பெற்றன.

திருவாளர்கள் M. சாமிநாத முதலியார் முன்சிபல் கவுன்சிலர் மாஜிமுனிசிபல் சேர்மன், வை. வினைதீர்த்த முதலியார்—முனிசிபல் கவுன்சிலர், ம. க. கந்தசாமி முதலியார்—ஆனரரி மாஜிஸ்ட்ரேட், வீ. திருஞானசம்பந்த முதலியார்—தமிழ்ப் பண்டிதர், பச்சையப்பன் ஹைஸ்கூல், P. வேதாசல முதலியார்—பஞ்சாயத் கோர்ட் மெம்பர்.

திருவாளர்கள் ம. செங்கோதர முதலியார், க. சோமசுந்தர முதலியார், வை. மு. கந்தசாமி முதலியார், வே. முனுசாமி முதலியார், மு. துரைசாமி முதலியார், தி. தேவராய முதலியார், சி. முனியப்ப முதலியார், பி. செ. சம்பந்த முதலியார், ஜவுளி வியாபாரிகள்.

திருவாளர்கள் கச்சி ஏகாம்பர முதலியார், அன்னியப்ப முதலியார், மு. சாமிநாத முதலியார், பச்சையப்ப முதலியார், திருவேங்கட முதலியார், வெ. முருகேச முதலியார்; பட்டு மளிகை வியாபாரிகள்.

திருவாளர் ஐ. பொ. முருகேச முதலியார், தமிழ் பண்டிதர், செல்லபெருமாள் முதலியார், சைஸ்மில். க. கச்சபாலய முதலியார், சைஸ்மில் & டிம்பர் மர்ச்செண்டு. சி. அருணாசல முதலியார், காரியதரிசி செங்குந்தர் வாலிபர் சங்கம் காஞ்சிபுரம். ம. பா. கோபால் முதலியார், துணைக்காரியதரிசி & தர்மகர்த்தர் விளக்கொளிப் பெருமாள், ஆசிரியர்கள், அ. செ. கந்தசாமி முதலியார், சு. முருகேச முதலியார், மு. சொர்ணசபை முதலியார், இண்டர்மிடியட் மாணவர் ஆ. சா. சண்முக முதலியார், சோ. குமாரசாமி முதலியார், கு. முருகேச முதலியார், விஸ்வநாத முதலியார், பச்சியப்ப முதலியார்.

இன்னும் சிலர் வருவார்களென எதிர்பார்க்கிறேன். அவர்கள் வருகைகால நெருக்கத்தில் தெரியும். இரவு 9-மணிக்குக் கூட்டம் முடிவுபெற்றது.

அன்றிரவு 9½-மணிக்குக் கூடிய நிர்வாகசபைக் கூட்டத்தில் கீழ்கண்டவாறு வாலிபர் சங்கத்துக்கு உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தலைவர்.

திரு. திரு. திருஞானசம்பந்த முதலியார், துணைத் தலைவர். திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், காரியதரிசி. திரு. சி. அருணாசல முதலியார், உதவிக் காரியதரிசி. திரு. ம. பா. கோபால் முதலியார் பொருட்காப்பாளர், திரு. சி. அருணாசல முதலியார், செங்குந்தர் இரவுப்பாடசாலையை நடத்திவர திருவாளர்கள் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், சி. அருணாசல முதலியார், அ. செ. கந்தசாமி முதலியார் மூவர் அடங்கிய உதவிக்கூட்டம் ஒன்று நியமிக்கப்பெற்றது. கூட்டம் 10½-மணிக்கு இனிது கலைந்தது.

சி. அருணாசலம், காரியதரிசி



### மாநம்பதி செங்குந்தர் சங்கம்.

24-12-28ல் மாலை 6-மணிக்கு திரு. சு. அருணாசல முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய கூட்டத்தில் நமது மாட்சிமை நிறைந்த ஐந்தாம்ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்கள் நோயிலிருந்து சுகமடையக்கடவுளைப் பிரார்த்திப்பதாகவும், பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டுவந்த பனகால்ராஜா திடீரென மண்ணுலகை நீத்ததைக் குறித்து வருந்துவதோடு அவரது ஆத்மா சாந்தமடைய இறைவனை பிரார்த்திப்பதாகவும், ஜவுளி திரு. சு. பொன்னுசாமி முதலியார் உருபொன்றிற்கு ஒருடை வீதம் சங்கத்திற்குக் கொடுப்பதாகச்சொல்லிக்கொடுத்துவரும் தொகையை அங்கீகரிப்பதாகவும், நம்மினப் பிள்ளைகளுக்கு ஆசாரியாபிஷேகம் முதலிய செய்வித்து அவர்களைக் கொண்டு திருமணம் முதலிய சடங்குகளை நம்மவர்கள் செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை மகாநாட்டிற்குக் கொண்டுவரவேண்டுமென்பதாகவும் தீர்மானங்கள் செய்யப்பெற்றன. அடியிற்கண்ட கனவான்கள் மகாநாட்டுப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். திருவாளர்கள் சு. அருணாசல முதலியார், 1 சு. அப்புசாமி முதலியார், 2 வே. அண்ணாமலைமுதலியார், 3 கு. முருகப்ப முதலியார், 4 சோ. வேணுகோபால முதலியார், 5 க. ஆறுமுகமுதலியார், 6 ரா. துரைசாமி முதலியார் 7, அ. நடேசமுதலியார், 8 ச. சரவண முதலியார், 9 சு. முத்துகுமாரசாமி முதலியார், 10 அ. பசுபதிமுதலியார், 11 இ. சம்பந்தமூர்த்தி முதலியார், 12 கூட்டம் 9 மணிக்கு நிறைவேறியது.

ஷை சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர்கள்.

(ரூபாய் ஒன்று வீதம் சங்கத்திற்குச் செலுத்தியவர்.)

திருவாளர்கள், வ. இரத்தின முதலியார், ச. அருணாசல முதலியார், கு. சுந்தர முதலியார், மு. நடேச முதலியார், மு. அண்ணாமலை முதலியார், ச. துரைசாமி முதலியார், இ. முருகேச முதலியார், ர. பொன்னுசாமி முதலியார், பொ. நடேச முதலியார், அ. நடேச முதலியார், க. முத்தைய முதலியார், த. முருகேச முதலியார், சு. அப்புசாமி முதலியார், ரா. துரைசாமி முதலியார், கு. சிற்றம்பல முதலியார், பூ. லோகநாத முதலியார், த. சுப்பராய முதலியார், மு. நடேச முதலியார், ச. சரவண முதலியார், பொ. அய்யாதுரை முதலியார், மு. தாண்டவமூர்த்தி முதலியார், மு. கந்தசாமி முதலியார், சு. முத்துக்குமாரசாமி முதலியார்.

இ. சம்பந்தமூர்த்தி முதலியார், காரியதரிசி.

### கருங்குழி மேலவலம்பேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

15-12-28 மாலை 6-மணிக்குக் கற்பகவிநாயகர் ஆலயத்தில் சங்கம் பொதுக்கூட்டம் பெரியதனம் திரு. ந. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. அச்சமயம் சங்க வரவுசெலவு கணக்கும் சென்ற வருடத் தைப்பூசவிழாவின் கணக்கும் பரிசோதித்து ஒப்புக்கொள்ளப்பட்டன. பிறகு நிறைவேறிய தீர்மானங்கள் கீழ்வருமாறு:—

1. இவ்வாண்டு தைப்பூச விழாவிற்காக பத்திரிகை பிரசுரஞ்செய்து உள்ளூரிலும் வெளியூரிலும் பணம் வசூலிக்கவேண்டும்,

2. பரிசோதிக்க விரும்பும் அங்கத்தினருக்குத் தடையின்றிச் சங்கக் கணக்கைக் காரியதரிசி காட்ட வேண்டும்.

3. தலைச்சங்கத்தின் பொதுக்கூட்டத்திற்கும் ஈரோட்டில் கூடும் மகாநாட்டிற்கும் சங்கக் காரியதரிசியைப் பிரதிநிதியாக அனுப்பத் தீர்மானிக்கிறது.

4. மகாநாட்டில் நமது கிராமக் குறைப்பாடுகளைக் குறித்து கவனிக்க வேண்டுகிறது.

குறைபாடுகளாவன :—

1. நமது பிள்ளைகளுக்கு இலவச பள்ளிக்கூடம் ஒன்று வேண்டும்.

2. நெசவுக்காரர் கோவாபரேடிவ் சொஸைடி ஒன்று வேண்டும்.

3. நம்மவர்களுக்குச் சட்டசபை ஜில்லாபோர்டு தாலுகாபோர்டு, பஞ்சாயத்துக் கோர்ட்டு முதலிய ஸ்தாபனங்களில் பிரதிநிதித்வம் வேண்டும்.

இரவு 8-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

சோ. ச. சாம்பசிவம், காரியதரிசி, 20-12-28.

### மணிமங்கலம் செங்குந்தர் சங்கம்.

24-12-28 தேதியன்று கூடிய கூட்டத்தில் சங்கப் பிரசிடெண்டு திரு. கா. நா. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் தலைச்சங்கப் பொதுக்கூட்டத்திற்கும் ஈரோட்டில் தை மாதத்தில் நடைபெறும் மகாநாட்டிற்கும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

ந. வைத்தியலிங்க முதலியார், காரியதரிசி.

### கன்றச்சேரி செங்குந்த வாலிபர் சங்கம்.

நானது மார்கழிமீ 6உ இரவு 7-மணிக்குத் திரு. ச. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய ஷை சங்கக் கூட்டத்தில் சங்கக் காரியதரிசி திரு. முத்தாண்டி முதலியார் தலைச்சங்கப் பொதுக்கூட்டத்திற்கும் மகாநாட்டிற்கும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். பின்னர்சில தீர்மானங்கள் நிறைவேறின.

சி. முத்தாண்டி முதலியார், காரியதரிசி.

### ஐயங்கார்குளம் செங்குந்தர் சங்கம்.

**தலைச்சங்க அங்கத்தினர்.**

1. ஐ. திரு. வெங்கடாசல முதலியார்.
2. திரு S. லக்ஷ்மண முதலியார்.

**மகாநாட்டுப் பிரதிநிதிகள்.**

திருவாளர்கள் ஐ. திரு. வெங்கடாசல முதலியார், S லக்ஷ்மண முதலியார், பெ. த. காங்கேய முதலியார்.

### கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம்.

22—12—28௳ இரவு 9-மணிக்கு விசாலாக்ஷி விலாசத்தில் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. அடுத்த தை மாதத்தில் ஈரோட்டில் கூடவிருக்கும் தென்னிந்திய செங்குந்தர் மகாநாட்டிற்கு திருவாளர் மா. அ. கனகசபை முதலியார், ப. ச. தீர்த்தகிரி முதலியார், மா. அ. முருகேச முதலியார், ப. ச. பாலசுந்தர முதலியார், மா. பரமகுருநாத முதலியார், பா. சிவ முதலியார் ஆகிய அறுவரையும் பிரதிநிதிகளாக அனுப்ப இச்சங்கம் தீர்மானிக்கிறது.

2. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துப் பொது கூட்டத்திற்கு அங்கத்தினராக திரு. மா. அ. கனகசபை முதலியார், திரு மா. பரமகுருநாத முதலியார் ஆகிய இருவரையும் தேர்ந்தெடுக்கிறது.

மா. அ. கனகசபை முதலியார், காரியதரிசி.

### சைதாப்பேட்டை செங்குந்தர் சங்கம்.

நிகழும் விபவ ௵ மார்கழி ௴ 9௳ (23—12—28) ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு ஸ்ரீ நடராஜ சபா மண்டபத்தில் இச்சங்க உதவித்தலைவரும் சைதாப்பேட்டை முனிசிபல் வைஸ் சேர்மனுமாகிய திரு. S. இரத்தினவேலு முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொதுகூட்டம் கூடிற்று. அச்சமயம் தலைச்சங்கப் பொது கூட்டத்திற்கும் மகாநாட்டிற்கும் கீழ்க்கண்ட கனவான்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

**தலைச்சங்கப் பிரதிநிதிகள்.**

1. திரு. S. இரத்தினவேல் முதலியார் அவர்கள்.
2. திரு. S. T. நடேச முதலியார் ,,

**மகாநாட்டு டெலிகேட்டுகள்.**

திருவாளர்கள் K. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், T. சாந்தலிங்க முதலியார் அவர்கள், V. நடேச முதலியார் அவர்கள், K. C. முனுசாமி முதலியார் அவர்கள், T. V. அருணாசல முதலியார் அவர்கள்.

S. முருகேச முதலியார், B.A., L.T.,
S. T. நடேச முதலியார்,
காரியதரிசிகள்.

### சென்னைச் செங்குந்தர் வாலிப சங்கம்.

இச்சங்கத்தின் இவ்வாண்டின் முதற் கூட்டம் 14-12-28 மாலை 5-30-மணிக்குச் செங்குந்தமித்திரன் காரியாலயத்தில் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் M.A., L.T. அவர்கள் தலைமையின் கீழ்க்கூடியது. அவைத் தலைவர் முகவுரைக்குப்பின் இவ்வாண்டிற்குப்புது அங்கத்தினர்களாகக் கீழ்க்கண்டோர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

**தலைவர்.**

ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T.

**உபதலைவர்.**

மா. பா. கந்தசுவாமி முதலியார், B.A., B.E.
P. A. கணபதி முதலியார், B.A.

**காரியதரிசிகள்.**

கே. பி. சுப்ரமணிய முதலியார், B.A.
தி. ராஜவேலு முதலியார்.

பின்னர், சமீபத்தில் ஈரோட்டில் நடைபெறவிருக்கும் சமூக மகாநாட்டிற்கும் செங்குந்த வாலிபர் மகாநாட்டிற்கும் பிரதிநிதிகளாகச் செல்லக் கீழ்க்கண்டோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்:—

திருவாளர்கள், ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T., மா. பா. கந்தசுவாமி முதலியார், B.A., B.E., பி. ஏ. கணபதி முதலியார், B.A., எஸ். சொக்கலிங்க முதலியார், கே. பி. சுப்ரமணிய முதலியார், B.A., ஓ. எஸ். செல்லாண்டி முதலியார், தி. ராஜவேலு முதலியார், தி. முத்துகுமாரசுவாமி முதலியார், மா. ப. தியாகராஜ முதலியார், ஜே. தங்கவேலு முதலியார், பொ. முனியப்ப முதலியார்.

பின்பு, தலைச்சங்கத்தின் பொதுக்கூட்டத்திற்கு அங்கத்தினர்களாகத் திருவாளர்கள், ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T. அவர்களும், K. P. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இவர்களுள் பெரும்பான்மையோர் தொண்டர்களாகவும் உதவுவார். வந்தனோபசாரத்தின் பின் கூட்டம் கலைந்தது.

### சென்னை செங்குந்தர் வாலிபர் சங்கம்.

19-12-28 மாலை 5 மணிக்கு, (31 அரண்மனைக்காரன் தெரு) செங்குந்தமித்திரன் காரியாலயத்தில் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T., அவர்கள் தலைமையின் கீழ் இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அவ்வமயம் திரு. மா. பா. கந்தசுவாமி முதலியார், B.A., B.E., அவர்கள் இவ்வாண்டின் முதற் சொற்பொழிவு நிகழ்த்தினர், அது சமயம் லாலா லஜபதிராய், பனகால் மன்னர்.



தி. அருணாசல முதலியார் ஆகிய மூவர் காலஞ் சென்றமைக்கு அனுதாபத் தீர்மானங்கள் கூறப்பட்டன.

மகாநாட்டில் கொண்டு வரவேண்டிய தீர்மானங்களை நிர்ணயிக்க 1929 ௵ ஜனவரி ௴ 9-ம் தேதி இச்சங்கம் மறுபடியும் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் தலைமையின்கீழ் இதே இடத்தில் கூடும்.

K. P. சுப்பிரமணிய முதலியார், B.A.,
தி. ராஜவேலு முதலியார்,
காரியதரிசிகள்

### திருவல்லிக்கேணி வீரவாத சங்கம்.

இச்சங்கத்திலிருந்து தலைச்சங்கப் பொதுக்கூட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள் திரு. M. இராமலிங்க முதலியார், திரு. மா. பா. கந்தசாமி முதலியார், B.A., B.E.

மகாநாட்டுப் பிரதிநிதிகள்: 1. மு. இராமலிங்க முதலியார், 2. மா. பா கந்தசாமி முதலியார், 3. நாகலிங்க முதலியார், 4. கு. மா. பார்த்தசாரதி முதலியார், 5. அ. கனகசபை முதலியார், 6. க. ப. பசுபதி முதலியார், 7. வே பஞ்சாக்ஷர முதலியார்.

க. ப. பசுபதி முதலியார், காரியதரிசி

---

## கோவை ஜில்லா

### பவானி செங்குந்தர் சங்கம்.

17-12-28-ல் காமாக்ஷியம்மன் சந்நிதியில் ம-ா-ா-ஸ்ரீ காரியக்காரர் அ. கு. குருநாத முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அச்சமயம், தை மாதத்தில் ஈரோட்டில் கூடும் தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளாகக் கீழ்வரும் 4 கனவான்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்:—1 செ. வீ இராமசாமி முதலியார், ஜவுளி, 2. வை. நா. பழனியப்ப முதலியார், ஜவுளி, 3. வ. கு. சோ. வெங்கடாஜல முதலியார், ஜவுளி. 4. மூ. க. கந்தசாமி முதலியார், பலசரக்கு மளிகை.

### பவானி வாலிபர் சங்கம்.

திரு. வை. நா. பழனியப்ப முதலியாரும் மற்றொருவரும் தலைச்சங்கப் பொதுக்கூட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்.

### ஊத்துக்குழி உண்மைச் செங்குந்ததல சங்கம்.

13-12-28 இரவு 8-மணிக்குத் திரு. மொ. ப. ரங்கசாமி முதலியார் அவர்கள் பாங்கியின் முன் கட்டடத்தில் திரு. மொ. க. குழந்தையப்ப முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் டை சங்கத்தின் பொதுக்கூட்டம் கூடிற்று. தலைவரவர்கள், அடுத்த தை மாதத்தில் ஈரோட்டில் நம்மவர்கள் மகாநாடு கூடப்போவதைப்பற்றிச் சில குறிப்புகள் சொன்னார்கள். பிறகு தலைச்சங்கத்திற்கு செலுத்துவதால் முதல் கூட்டத்தில் தீர்மானித்த கட்டண ரூபாய் 5 ஐந்தையும் உடனே அனுப்பி விடும்படியாகவும், கரட்டுபாளையம் திரு. அ. குழந்தையப்ப முதலியார் அவர்களை இச்சங்கத்தின் மெம்பராகச் சேர்த்துக் கொள்ளுவதாகவும் தீர்மானித்துக் கீழ்க்கண்டவாறு தலைச்சங்கப் பொதுக்கூடத்திற்குப் பிரதிநிதிகளும், மகாநாட்டுப் பிரதிநிதிகளும், மகாநாட்டுக்கு வாலண்டியர்களும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

தலைச்சங்கப் பொதுக்கூட்டத்திற்கு சங்கப் பிரதிநிதிகள்:—திருவாளர்கள் சா. சொக்கநாத முதலியார் அவர்கள், M. C. இராமசாமி முதலியார் அவர்கள்.

மகாநாட்டுப் பிரதிநிதிகள்:—திருவாளர்கள் 1. மொ. க. குழந்தையப்ப முதலியார், 2. ஆ. வஞ்சி முதலியார், 3. மொ. ப. ரங்கசாமி முதலியார், 4, கு. சின்னைய முதலியார், 5 கு. சென்னியப்ப முதலியார், 6. க. சுப்பராய முதலியார், 7. மொ. கு. கனகசபை முதலியார், 8. மொ. கு. சென்னிமலை முதலியார், 9 கா. கு. சுப்பராயமுதலியார், 10. மொ. கு. வைத்தமலை முதலியார், 11. க. அ. கொளந்தப்ப முதலியார், 12 மை. சி. செங்கோட முதலியார், 13. L. M. காமாக்ஷி முதலியார், 14. கை. அண்ணாமலை முதலியார்.

மகாநாட்டிற்கு வாலண்டியர்கள்:—திருவாளர்கள் 1. சா. சொ சுப்பிரமணிய முதலியார், 2. M. A. மாரியப்ப முதலியார், 3. M. K. ஆறுமுக முதலியார், 4 க. ச. குப்பண முதலியார், 5 க. முத்து மாரியப்ப முதலியார். பிறகு இரவு 10 30-மணிக்குச் சபை இனிது நிறைவேறியது

### வல்லிபுரம் செங்குந்தர் சங்கம்.

இச்சங்கத்திலிருந்து மகாநாட்டிற்கு அனுப்பப்படும் டெலிகேட்டுகள் திருவாளர்கள் 1. வ. பழனியப்ப முதலியார், 2. மொ. ப. பெரியண்ண முதலியார் 3 சின்னப்ப முதலியார். 4. கொ. சி. நஞ்சப்ப முதலியார், 5. வ. அ. முருகேச முதலியார்.

### மருதவாரை நீழல் வடவழி உண்மைச் செங்குந்தர் பொதுக்கூட்டம்.

7—11—28 அன்று வடவழி நாட்டாண்மை நா. அங்கண்ண முதலியார் அவர்கள் வீட்டில் ஓர் செங்குந்தர் பொதுக்கூட்டம் கூடியது. அவ்வமயம் திருவாளர் K. அங்கண்ண முதலியார் என்பவர் "செங்குந்தரும் மகாஜன சங்கமும்" என்பது பற்றி ஒரு பெரும் சொற்பொழிவு நிகழ்த்தினர். பிறகு எல்லோரும் வடவழியில் ஓர் கிளைச்சங்கம் ஏற்படுத்த வேணுமென்றும், அதற்கு "செங்குந்தர்

நன்னெறிக்கழகம்" எனப்பெயரிடல் வேண்டுமென்றும், அதன் திறப்பு விழா கார்த்திகை௴ இருபத்தொன்பதாம் தேதி நிகழ்த்த வேண்டுமென்றும், தீர்மானிக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

## செங்குந்தர் நன்னெறிக் கழகத் திறப்பு விழா.

கார்த்திகை௴ 21௳ வடவழி போர்டு எலிமெண்டரி சாலையில் திரு. நா. அங்கண்ண முதலியார் அவைத் தலைமையின் கீழ் அத்திறப்புவிழா நடந்தேறியது. அவ்வமயம் பல வெளியூர்ப் பெரியார்களும் வடவழி செங்குந்தர்களும் "ஒட்டக்கூத்தர்" என்பதுபற்றி திரு V. P. மருதப்ப முதலியாரும், "செங்குந்தரும் பத்திரிக்கையும்" என்பதுபற்றி கல்லூரி மாணவர் திரு. M. R. பெருமாள் முதலியார் அவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் திரு. V. K. M. அப்பா முதலியார் அவர்கள் இவ்விரண்டு சொற்பொழிவுகளையும் ஆதரித்து விளக்கமாகப்பேசிய பின்னர் தலைவர் எழுந்து குறைந்தது பதினைந்து ஆண்டுகளாக வடவழிப் போலியர்களுக்கும் நமது செங்குந்தர்களுக்கும் விரோதம் ஏற்பட்ட காரணத்தையும், அவர்கள் நமது உண்மையர்களோடு உறவாட முயன்று பல செங்குந்தரல்லாத செல்வான்களை நாடினமையும், அச்செல்வந்தர்கள் அப்போலியர்களோடு சேர்ந்துகொண்டு இன்றும் வடவழியில் நமது உண்மைச் செங்குந்தர்களுக்கு இடையூறு செய்து வருவதையும், அவ்விடையூறுகளுக்குத் தாம் சற்றும் பின் வாங்காது நமது செங்குந்தர்களில் V. V. வெள்ளியங்கிரி முதலியார் அவர்களைப் போன்ற பல பெரியார்களுடைய உதவிகொண்டு அவர்களுடைய கொள்கைகளை முற்றிலும் வெறுத்து தோற்கடித்து வருவதையும், அவ்வாறு தாம் முயன்று வருவதற்கு துணையாக ஓர் கழகம் ஒன்று தமக்கு உதவி செய்யும்பொருட்டு முற்பட்டதைப் பற்றித் தாம் அதிக ஆனந்தமடைவதோடு அக்கழகத்தை எல்லோரும் அதிக அன்போடு ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நமது தலைச்சங்கமானது நமது கிளைச்சங்கத்துக்கு அதிக உதவிசெய்யுமாறும், நமது தலைச் சங்க ஆசிரியர் திருவாளர் ம. ஷண்முகசுந்தர முதலியார் அவர்கள் பிரசாரகர்களோடு கூடிய சீக்கிரம் வடவழிக்கு வரவேண்டுமென்றும் முருகப்பிரானை வேண்டிக்கொண்டு தமது முடிப்புரையை முடித்தார்.

பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின.

நமது கழகத்தை நமது தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் ஓர் கிளைச்சங்கமாகச் சேர்க்க வேண்டுமென்றும், நமது கழகத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 5 ரூபாய் தலைச்சங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்றும், பத்திரிகையை (நமது மித்திரனை) எல்லோரும் ஆதரிக்கவேண்டுமென்றும் பெரியோர்கள் எல்லோரும் தீர்மானித்தார்கள். மா. நஞ்சப்ப முதலியார் அவர்கள் தாம் தனியாகத் தலைச் சங்கத்துக்கு 5 ரூபாய் அனுப்புவதாகவுஞ் சொன்னார். கூடிய சீக்கிரம் நிர்வாக சபையொன்று கூட்ட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை இனிது கலைந்தது.

V. P. மருதப்பா.

---

## சேலம் ஜில்லா.

### சேலம் அம்மாப்பேட்டை செங்குந்தர் மகாஜன சங்கம்.

விபவ௵ கார்த்திகை௴ 11௳ திங்கட்கிழமை காலை 10-மணிக்குச் சேலம் அம்மாப்பேட்டையில் செங்குந்தர் மகாஜனசங்கம் ஒன்று புதிதாய் ஸ்தாபனம் செய்யப்பட்டது. டை சங்கத்திற்கு First Class Bench Vice President-ம் and Banker-ருமான ஸ்ரீமான் M. ராமசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். டை சங்கத்திற்கு விஜயம் செய்திருந்த சேலம் தேவஸ்தான தர்மகர்த்தாவும், Honorary Magistrate-டுமான ஸ்ரீமான் S. சங்கர முதலியார் அவர்கள் நம்முடைய இனத்தில் சகஜபேதம் ஏற்பட்டு இருந்து வருவதால் டை பேதங்களை இச்சங்கத்தில் அனுசரித்துக் கொள்ளாமல் எல்லோரும் ஒற்றுமையுடன் நடந்துவரவேண்டுமென்று பேசி முடித்தார். அநேக உபந்யாசங்கள் நடைபெற்றன.

பின்பு டை சங்கத்திற்கு அக்கிராசனர் முதலிய உத்தியோகஸ்தர்கள் அடுத்தகூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவரென தீர்மானிக்கப்பட்டபின்பு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

26-11-28 இச்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று 2-12-28௳ இரவு 8-மணிக்கு ஸ்ரீமான் K. மாரிமுத்து முதலியார் அக்கிராசனத்தின் கீழ்க்கூடிற்று. அப்போது சங்கத்தின் கூட்டம் வெள்ளிக் கிழமைதோறும் கூடவேண்டுமென்றும், தலைச்சங்கத்திலிருந்து சட்டதிட்டங்களின் புத்தகம் கிடைத்த பிறகு இச்சங்கத்திற்குச் சட்டதிட்டங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானித்துக் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

பிரஸிடெண்டு: ஸ்ரீமான் K. மாரிமுத்து முதலியார், வைஸ்பிரஸிடெண்டு: ஸ்ரீமான் S. P. பொன்னுசாமி முதலியார், செக்ரிடெரி: S. பழனிபாண்டி முதலியார், அஸிஸ்டெண்ட் செக்ரிடெரி: K. M. ராமலிங்க முதலியார், கசான்ஜி (பொக்கிஷதார்): கு. மு. அ. கந்தசாமி முதலியார், அக்கவுண்டெண்ட்: செ. வை. கந்தசாமி முதலியார், ஆடிடர்: S. P. சோமசுந்தர முதலியார்.



14—12—28௳ இரவு 8-மணிக்கு இச்சங்கம் சங்கத்தலைவர் திரு. K. மாரிமுத்து முதலியார் தலைமையின் கீழ்கண்ட கனவான்கள் அடுத்த தை மாதத்தில் ஈரோட்டில் கூடவிருக்கும் செங்குந்தர் முதலாவது மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

### தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள்

1. K. மாரிமுத்து முதலியார், 2. S. P. பொன்னுசாமி முதலியார், 3. முத்துசாமி முதலியார், 4. பொ சு. சண்முக முதலியார், 5. எஸ். பழனியாண்டி முதலியார், 6. எஸ் ஆர். அர்த்தனரி முதலியார். 7. மு. பெருமாள் முதலியார், 8. பு. சி. பொன்னுசாமி முதலியார், 9. கு. மு இராமலிங்க முதலியார், கி. மு. பொன்னுசாமி முதலியார், 11. ரு. முருகேச முதலியார், 12. சி. மு. பழனியப்ப முதலியார், 13. நா. ஆறுமுக முதலியார், 14. செ. பரிச முதலியார். பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்த பின்பு வந்தனோபசாரத்துடன் இரவு 11-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

S. பழனியாண்டி முதலியார், காரியதரிசி.

### திருச்செங்கோடு செங்குந்த மகாஜன சங்கம்.

18-12-28 மாலை 7-மணிக்கு இவ்வூர் ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமி சபாமண்டபத்தில் டை சங்கத்தின் பொதுக்கூட்டம் திரு. T. R. கந்தப்ப முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. அச்சமயம் திருவாளர்கள் ஈரோடு நா மு சண்முகசுந்தர முதலியார், S. இராமசாமி முதலியார், S சென்னியப்ப முதலியார், வ. மு. மொட்டையப்ப முதலியார், சித்தோடு பழநியப்ப முதலியார், காஞ்சிபுரம் பி. செ. மாணிக்கவாசக முதலியார் முதலிய அநேக வெளியூர் பிரமுகர்களும் உள்ளூர் ஜனங்களுமாகச் சுமார் 200 பேர் வந்திருந்தார்கள். திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'ஒற்றுமை' 'நமது முதல் மகாநாடு' என்னும் விஷயங்களைப் பற்றி அரிய உபந்யாசம் செய்தார்.

### தீர்மானங்கள்.

ஈரோட்டில் கூடும் மகா நாட்டிற்குப் பல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த பிறகு.

1. சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சட்டதிட்டங்களின் படியே இச்சங்கம் நடந்து வர வேண்டுமென்றும்.

2. சென்னையிலுள்ள தலைச்சங்கத்திற்கு இச்சங்கத்தைக் கிளைச் சங்கமாக்க வேண்டுமென்றும்.

3. ஈரோட்டில் கூடும் மகாநாட்டை இச்சங்கம் ஆதரிக்க வேண்டுமென்றும்.

4. சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பொதுக் கூட்டத்திற்கு இச்சங்கத்தினின்று பிரதிநிதிகளாக திரு. T. R. கந்தப்ப முதலியார் அவர்களையும், திரு கூ. அ. சு. அருணாசல முதலியார் அவர்களையும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கிறதென்றும் தீர்மானிக்கப்பெற்றன. தலைவர் பின்னுரைக்குப்பின் வந்தனோபசாரம் கூறப்பெற்று சபை இனிது நிறைவேறியது.

மகாநாட்டிற்கு அநேக டெலிகேட்டுகள் வரத் தீர்மானித்திருக்கின்றனர்.

மூ. விஸ்வநாத முதலியார், காரியதரிசி.

### மோகனூர் உண்மைச் செங்குந்தர் சங்கம்.

4-12-28-ல் இவ்வூர் ஸ்ரீ மாசடைச்சியம்மன் ஆலயத்தில் டை சங்கத்தின் 4-வது கூட்டம் மாலை 6-மணிக்கு வைஸ்பிரஸிடெண்டு திரு மூ. கொளந்தைசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிற்று. காரியதரிசியவர்களால் முன் கூட்டத்தின் நடவடிக்கைகளும் வரவு செலவு கணக்குகளும் வாசித்துக் காட்டப்பட்ட பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

1. இச்சங்கத்தின் மூலதனப்பண்டிற்காக அந்தஸ்து வரியும், பொது விஷயங்களுக்காக வரிகளும் ஏற்படுத்த ஐந்து கனவான்களை தேர்ந்தெடுக்கும்படி திரு. மூ. கொளந்தைசாமி முதலியார் அவர்களை இக்கூட்டம் நியமிக்கிறது.

2. திரு. மூ கொளந்தைசாமி முதலியார் நியமிக்கும் ஐவரும் ஆக்ஷேபனையின்றி குறித்தபடி செய்ய ஒத்துக்கொள்வதாக நிகழ்ச்சி குறிப்பில் கையொப்பமிடவேண்டும்.

திரு. மூ. கொளந்தைசாமி முதலியார் நியமித்த கனவான்கள்:—

திருவாளர்கள், P. P. முத்துசாமி முதலியார், வே கு. பெரமாண்டை முதலியார், சி. மாணிக்க முதலியார், நாட்டாண்மை ச. கு. பழநியாண்டி முதலியார், வெ. முருக முதலியார்.

3. சங்கத்திற்கு மூலதனம் பண்டு ஏற்படுத்துவதற்காக ஸ்பெஷல் மீட்டிங்கு ஒன்று கூட்டவேண்டும். சந்தா வசூலிக்கப்பெற்று தலைவர்முடிவுரைக்குப்பின் கூட்டம் இரவு 9-மணிக்கு இனிது கலைந்தது.

14-12-28௳யில் ஸ்ரீ மாசடைச்சிம்மன் ஆலயத்தில் தலைவர் R. சபாபதி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்ச்சங்கத்தின் ஸ்பெஷல் கூட்டம் மாலை 4½-மணிக்குக் கூடிற்று அச்சமயம் நிறைவேறிய தீர்மானங்கள் :—

1. நாளது தை௴ ஈரோட்டில் நடைபெறும் நம்மவர் முதலாவது மகாநாட்டிற்கு இவ்வூரிலிருந்து 20 நபர்களுக்குக் குறையாது டெலிகேட்டுகளாகப் போகவேண்டும்.

2. அதே சமயத்தில் ஈரோட்டில் கூடும் நமது தலைச்சங்கப் பொதுக்கூட்டத்திற்குப் பிரதிநிதிகளாக பொக்கிஷதார் திரு P. P. முத்துசாமி முதலியார் அவர்களையும், காரியதரிசி திரு கு. ல. சடையப்ப முதலியார் அவர்களையும்; இச்சங்கம் தேர்ந்தெடுக்கிறது. 5½-மணிக்குக் கூட்டம் வந்தனோபசாரத்துடன் இனிது கலைந்தது.

## திருச்சி ஜில்லாவில் கிளர்ச்சி

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

1929 ஞு டிசம்பர்௴ 25௳ மாலை 4-மணிக்கு உன்னியூர் செங்குந்தர் சங்கக்கூட்டம் திரு. R. மாணிக்க முதலியார் அவர்களது கோடைக்காலக் கொட்டகையில் தமிழ் வித்வான் திரு. கு. பெ. கந்தசாமி முதலியார் அவர்களது தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் நாட்டாண்மை திரு. மொ. மு. சடையப்ப முதலியாரால் தேவாரம் பாடப்பெற்ற பின் காரியதரிசி திரு. P. மாரியப்ப முதலியாரால் செங்குந்தரும் மகாநாடுகளும் என்னும் பொருள்கொண்டு மகாநாடு கூடுவதின் நன்மையும் டை மகாநாடுகளுக்குச் செங்குந்தர் ஒவ்வொருவரும் போய்வர வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப் பெற்றபின் நமது தலைச்சங்கத்தின் பொதுக்கூட்டத்திற்கு அங்கத்தினர்களையும், ஈரோடு செங்குந்தர் முதலாவது மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தபின் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின :—

1. பாஞ்சாலநாட்டுச் சிங்கமும், உடல்பொருள் ஆவி மூன்றையும் தேசநன்மைக்காகத் தியாகம் செய்தவரும் தியாகமூர்த்தியுமான திரு. லாலாலஜபதிராய் விண்ணுலகெய்தியதற்கு இச்சங்கம் துக்கப்படுவதோடு அவரது ஆத்மசாந்தி யடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்ளுகிறது.

2. நமது மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் நோய்வாய்பட்டு வருந்துவதைக் கேட்ட இச்சங்கம் விசனப்படுவதோடு அவரது நோய் குணமடைந்து ஆரோக்ய திடகாத்திரராய் நீடூழி வாழ்ந்துவரவேண்டுமாய் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

3. இச்சங்கத்தின் தலைவர் திரு. R. மாணிக்க முதலியாரவர்கள் தமது குமாரன் கரூர் ஹைஸ்கூலில் வாசித்து வருபவருக்குப் பீடிக்கப்பட்ட விஷஜ்வரத்தின் காரணமாக டை யார் இக்கூட்டத்திற்கு வராததினால் டை மாணவன் சிரஞ்சீவி M. நல்லண்ணன் குண மடைந்து சுகத்துடன் இருக்கவேண்டுமென நமது முருகக்கடவுளை இக்கூட்டம் பிரார்த்திக்கிறது.

4. சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன பொதுக்கூட்டத்திற்கு இச்சங்கத்திலிருந்து கீழ்கண்ட கனவான்கள் அங்கத்தினராக ஏகமனத்துடன் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

(1) திருவாளர் R. மாணிக்க முதலியார்,
(2) ,, P. மாரியப்ப முதலியார்.

இச்சங்கத்திலிருந்து ஈரோட்டில் கூடவிருக்கும் முதலாவது செங்குந்தர் மகாநாடுகளுக்குக்கீழ்க் குறிப்பிட்டுள்ள கனவான்கள் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுக்கப் பெற்றனர் :—

திருவாளர்கள், R. மாணிக்க முதலியார், R. இரத்தினசாமி முதலியார், கு. ஆ. ஆனந்த முதலியார், R. ராமசாமி முதலியார், P. மாரியப்ப முதலியார், P. K. வீரப்ப முதலியார், கு. பெ. கந்தசாமி முதலியார், P. K. பழனியப்ப முதலியார், கு. பெ. ராமசாமி முதலியார், நாட்டாண்மைக்காரர் மொ. மு. சடையப்ப முதலியார், கொ ரு. மாணிக்கமுதலியார், R. முத்துவீரப்ப முதலியார், A. P. ஆறுமுக முதலியார், A. K. S. சின்னசாமி முதலியார், K. A. A. பாலசுப்பிரமணிய முதலியார், ஜா. கா. மு. முருகமுதலியார், வெ. முருகமுதலியார், க. சென்னியப்ப முதலியார், தி ப. ஆ. சடையப்ப முதலியார், மு அ. கந்தசாமி முதலியார், து. வே. செ. செல்லாண்டி முதலியார், க ஆ. பிச்சையப்ப முதலியார், R. சென்னியப்ப முதலியார், கோ. தே. வை. வேலாயுத முதலியார், ஆ. தங்கப்ப முதலியார், மொ. மு. ந. முத்துசாமி முதலியார்.

P. மாரியப்ப முதலியார்,
காரியதரிசி.

### கட்டிபாளையம் செங்குந்தர் மகாஜன சங்கம்.

(11-12-28) இரவு 8½-மணிக்குக் கட்டிப்பாளையம் செங்குந்தர் மகாஜனசங்கக் கூட்டம் கூடியது. கூட்டத்திற்குத் திருக்காடுதுறை செங்குந்த சிகாமணிகளும் இவ்வூர் செங்குந்தர்களுமாய் டை சங்கத்தலைவர் திரு செ. மு. கருப்பண்ண முதலியார் தலைமையின்கீழ் சுமார் 75 பேர்கள் கூடியிருந்தனர். திரு. க. முத்துச்சாமி முதலியார் அவர்களால் 'சற்புநிலைமை' முதலியவைகளைப்பற்றியும் மாணவர் திரு. ஆ கண்ணப்பனால் கல்வியைப்பற்றியும் உபந்யாசம் செய்யப்பட்டது. பின்பு அடுத்த தை மாதத்தில் ஈரோட்டில் தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு கூட்டத்திற்கு இங்கிளார் சங்கத்திலிருந்து அடியில் கண்டவர்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது:—

நாட்டாண்மை திரு. பழனியப்ப முதலியார், V. ஆறுமுக முதலியார், சங்கத் தலைவர், மு. கருப்பண்ண முதலியார், வை. கு. பழனியப்ப முதலியார், திரு. தி. க. ஆறுமுக முதலியார். பிறகு இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

மு. கருப்பண்ண முதலியார்,
தலைவர்.

### மண்ணச்ச நல்லூர் செங்குந்தர் சங்கம்.

தலைச்சங்க அங்கத்தினர்.

திரு. செ. பெ. வீ. பொன்னுசாமி முதலியார்.
,, கொ. க பிச்சையப்ப முதலியார்.

மகாநாட்டுப் பிரதிநிதிகள்.

திருவாளர்கள் ரா. க அங்கப்ப முதலியார், ச. அ. சந்தியப்ப முதலியார், சி. அங்கப்ப முதலியார், ச. க. மு. முத்துசாமி முதலியார், செ. பெ. வீ. பொன்னுசாமி முதலியார், கொ. க. பிச்சையப்ப முதலியார்.



## இராமநாதபுரம் ஜில்லாவில் கிளர்ச்சி

### மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

10-12-28 இரவு 9-மணிக்குச் சந்தனு முதலியார் பிள்ளையார் கோயிலில் டை சங்கத்தின் 11-வது கூட்டம் தலைவர் ஸ்ரீமான் மு. ஆ. பாதம்பிரியா முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிற்று. அப்போது தலைச்சங்கப் பொதுக்கூட்டத்திற்குப் பிரதிநிதியாக தலைவர் ஸ்ரீமான் மு. ஆ. பாதம்பிரியா முதலியார் அவர்களையும் அனுப்பவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதோடு, தைமாதம் கூடுவதாகயிருக்கும் மகா நாட்டிற்குப் பல பிரதிநிதிகளும் (டெலிகேட்டுகள்) தேர்ந்தெடுக்கப் பெற்றனர். மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேறின. கடைசியாகக் காரியதரிசியவர்கள் தலைச்சங்கத்தார் கேட்டுக்கொண்டபடித் தாம் இராமநாதபுரம் ஜில்லாவில் பிரசாரம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லி வந்தனோபசாரம் கூறியபிறகு கூட்டம் இனிது கலைந்தது.

இ. முனியப்ப முதலியார்,
காரியதரிசி.

## திருநெல்வேலி ஜில்லாவில் கிளர்ச்சி

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், வீரவநல்லூர்.

இச்சங்கத்தின் 12-வது ஆண்டு 16-வது சாதாரணக் கூட்டம் 20-11-28 திங்கட்கிழமை காலை 10-30-மணிக்கு ஸ்ரீமான் க. ஆவுடைநாயக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. அச்சமயம் ஸ்ரீமான் ஆ. மு. ஆறுமுக முதலியாரவர்கள் 'கொண்டது விடாமை' யென்பது பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தி பின்னர் அம்பா சமுத்திரம் செங்குந்தமரபினுதித்த அவுடையப்பனெனும் சிறுவனால் இச்சங்கத்திற்கு அனுப்பப்பெற்ற விஷயத்தையும் தெளிவுற வாசிக்கப்பட்டது. அதன் சாரம் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.

14-12-28 மாலை 4-மணிக்கு இச்சங்கத்தின் 12-வதாண்டு 9-வது காரிய நிர்வாகக் கூட்டம் திரு. ஆ. மு. ஆறுமுக முதலியார் தலைமையின் கீழ்க்கூடிற்று. அப்போது தைமாதம் ஈரோட்டில் கூடவிருக்கும் தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகா நாட்டிற்குக் கீழ்க் குறித்துள்ள 5 பேர்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள் :—

திருவாளர்கள் ஆ. மு. ஆறுமுக முதலியார், மா. சங்கரலிங்க முதலியார், சி. வ. ஆறுமுக முதலியார், ந. ஆ. சிதம்பர முதலியார், பூ. அருணசல முதலியார்.

தலைச்சங்க அங்கத்தினர்கள்.

1. திரு. ந. ஆ. சிதம்பர முதலியார்
2. ,, வி. எஸ். சங்கர சுப்பிரமணிய முதலியார், B.A., B.L.

ஆ. மு. ஆறுமுக முதலியார்,
உபதலைவர்.

### அம்பா சமுத்திரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், 6-வது மாதாந்தரக் கூட்டம்.

1104ஆ௵ கார்த்திகை௴ 29௳ (14-12-28) சுக்கிரவாரம் இரவு 8-மணிக்குச் சங்கத்தலைவர் ரா. வேலாயுத முதலியார் அவர்கள் தலைமையில் 6-வது மாதாந்தரக்கூட்டம் கூடிற்று. கடவுள் வாழ்த்துப் பாடிய பிறகு காரியதரிசியால் சங்க வரவு செலவு கணக்கு வாசித்துக் காட்டப்பட்ட பிறகு 'போஜனவிதி' அம்மைச் செங்குந்தர்களுக்கோர் விண்ணப்பம் 'அறஞ்செய விரும்பு' 'அன்பு' என்னும் விஷயங்களைப் பற்றி பல அன்பர்கள் சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள். பின் இக்கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்த திருநெல்வேலி சங்கக் காரியதரிசி திரு. ம. முத்தையா முதலியார் B.A., அவர்கள் 'கல்வியின் பயனும் கைத்தொழிலும்' என்பதுபற்றிப் பேசினார்கள். அச்சமயம் திரு. ப. ஆ. கணபதி முதலியார் B.A., அவர்கள் பிரேரேபனையால் சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறப் பெற்றன. அவை அடுத்த மாதத்திய மித்திரனில் பிரசுரிக்கப்படும். தலைவர் அவர்கள் தமது பின்னுரையை மிக இனிமையாக நிகழ்த்தியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது நடைபெற்றது.

ரா. ம. இராமலிங்க முதலியார், காரியதரிசி.

---

## வட ஆற்காடு ஜில்லாவில் கிளர்ச்சி

### அசனம்மாபேட்டை செங்குந்தர் சங்கம்.

11-12-28 மாலை 6-மணிக்குப் பஜனைகோவில் மடத்தில் பொதுக்கூட்டம் கூடிற்று அவ்வமயம் சுமார் 300 பேருக்குமேல் நங்குலமக்களும் பிறரும் வந்திருந்தனர். திரு. சி. சிதம்பர முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. ம. நரசிம்ம முதலியார் எப் ஏ., அவர்கள் 'ஈரோட்டில் கூடும் மகாநாடு' என்பது பற்றியும், திரு. சுந்தரமூர்த்தி முதலியார் அவர்கள் கைத்தொழிலும், ஐக்கியநாணய சங்கமும் என்பதுபற்றியும் சொற்பெருக்கிட்டனர். இரவு 8-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

14-12-28 மாலை கூடிய கூட்டத்தில் இவ்வூர் வாலிப சங்கத்தின் செலவை டை சங்கக் காரியதரிசி கேட்டுக்கொண்டபடி ஊர்ப்பொதுவில் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

15-12-28 மாலை 4-மணிக்குக் கூடிய ஸ்பெஷல் பொதுக்கூட்டத்தில் அடுத்த மாதம் ஈரோட்டில் கூடும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பொதுக்கூட்டத்திற்கு அங்கத்தினராக உபதலைவர் திரு. K. S. குப்புசாமி முதலியார் அவர்களும், காரியதரிசி திரு. N. S. அண்ணாமலை முதலியார் அவர்களும், மகாநாட்டிற்குப் பல பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். 5-30-மணிக்குக் கூட்டம் உற்சாகத்துடன் கலைந்தது.

16—12—28, } நல். அண்ணாமலை முதலியார்.
அசனமாபேட்டை. } மே. ச. நடேச முதலியார்.

காரியதரிசிகள்.

### திருவாஜபபேட்டை செங்குந்தர் வாலிபர் சங்கம்.

14-12-28 மாலை திரு. குமர அருணசல முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய பொதுக்கூட்டத்தில், தை மாதத்தில் ஈரோட்டில் நடக்கப்போகும் நமது மகாநாட்டிற்குக் கீழ்க்கண்ட பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர் :—

திருவாளர்கள், குட்டி சிதம்பர முதலியார் அவர்கள் தலைவர். குமர. அருணசலமுதலியார், பெ. முனிசாமி முதலியார், தளவா. மாணிக்க முதலியார், தலைச்சங்கத்து அமைச்சருள் ஒருவரான M. G. தணிகாசல முதலியார் காரியதரிசி.

---

### மதுரை ஜில்லாவில் கிளர்ச்சி

#### செங்குந்தர் சங்கம், மதுரை.

22-12-28 இரவு 8-மணிக்குத் தல்லாகுளம் செங்குந்த விநாயகராலயத்தில் உயர் திரு, வீ. ஆண்டியப்ப முதலியார் அவர்கள் அவைத் தலைமையில் டை சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது. அப்போது நமது தலைச் சங்கப் பொதுக்கூட்டத்திற்கு அங்கத்தினராகச் சங்கத் தலைவர் திரு. வி. சாலை முதலியார், திரு. P. V. முத்துகருப்ப முதலியார் ஆகிய இருவர்களையும் மகாநாட்டுப் பிரதிநிதிகளாக 50 கனவான்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னும் மகாநாட்டிற்கும், தலைச் சங்கத்திற்கும் அனுப்புமாறு சில தீர்மானங்கள் செய்யப்பட்டன.

P. V. முத்துகருப்ப முதலியார், கூட்டுக்காரியதரிசி.

---

### தஞ்சை ஜில்லா.

#### திருவாரூர் செங்குந்த மகாஜன சங்கம்.

திருவாரூர் கிளைச்சங்கத்திலிருந்து நமது தலைச்சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்குப் பிரதிநிதிகளாகத் திரு. தி. நா. சபாபதி முதலியார், மா. கதிரேச முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகாநாட்டிற்கு அநேகம் பேர் வருவர்.

#### திருமலைராஜன்பட்டணம் செங்குந்த வாலிபர் சங்கம்.

நிகழும் மார்கழிமீ 6உ மாலை 7-மணிக்கு ஸ்ரீசெங்குந்த விநாயகராலயத்தில் இச்சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று திரு. க. நாகலிங்க முதலியாரவர்கள் தலைமையின் கீழ்க்கூடிற்று. அச்சமயம் 'இனியவை கூறல்' 'சொல்லாமை' 'திருநீலகண்ட நாயனார் சரித்திரம்' திருஞானசம்பந்த சுவாமிகள் எலும்பைப் பெண்ணுருவாக்கியது முதலியவற்றைக் குறித்து பல உபந்நியாசங்களை பல அறிஞர்கள் செய்தார்கள் தலைவர் முடிவுரைக்குப் பின் இரவு 11-மணிக்குக் கூட்டம் முடிவுபெற்றது.

சா. ம. கு. சிங்காரவேலு முதலியார்.

### 1928-ம் வருஷத்துக்குச் சந்தா செலுத்திய நேயர்கள்.

#### திருவத்திபுரம்.

ம. காளி முதலியார்

#### கருங்குழி மேலவலம் பேட்டை

அ. வேதாஜல ,,

#### மவாலிப் பேட்டை.

மு. போரூரா ,,
வீ. ரத்நாகரத்தின ,,

#### கருங்குழி.

மு. பாலசுந்தர ,,
அ. மாணிக்க ,,
சா. இராஜு ,,
ர. சொர்க்கலிங்க ,,
ந. பாலசுப்பிரமணிய ,,
ச. இராஜரத்தின ,,
சு. வேதாசல ,,

#### திருப்பாதிரிப்புலியூர்.

V. ஆறுமுக ,,
C. P. இரத்தினசபாபதி B.A., B.L., ,,

#### புதுவண்டிப் பாளையம்.

அ. முத்தைய ,,
வே. ஆடியபாத ,,
ப. இராமசாமி ,,

ச. க. பழனியாண்டி முதலியார்
பா. வயித்தியலிங்க ,,
ப. வை. வில்வ ,,
மா. பழனியாண்டி ,,
கண. தங்கவேல் ,,
அரச ,,

#### புருகேஸ் பேட்டை.

ஆ. முருகப்ப ,,
ச. மாணிக்க ,,
ந. வயித்தியலிங்க ,,
வெ. ச. அப்பு ,,
அ. நடராஜ ,,
க. சோமசுந்தர ,,
ச. அப்பு ,,
சி. மாணிக்க ,,
வெ. கா. மா. ஆறுமுக ,,
ஏ. சொ. சிங்கார ,,
கொ. மு. மாணிக்க ,,
நா. வை. சின்னதம்பி ,,

#### ஆனத்தூர்.

பு. ச. உத்தண்டி ,,
பா. அ. வடிவேல் ,,
ம. செ. கந்தசாமி ,,
பா. ரா. இரத்தின ,,

#### நடுவீரப்பட்டு சென்னப்ப நாயக்கன் பாளையம்.

ச. அப்பாவு முதலியார்
ப. வ. அண்ணாமலை ,,
சி. சு. பழனியாண்டி ,,
கொ. கு. சிதம்பர ,,
கோரி. இரத்தின ,,
கொ. ஏகாம்பர ,,
காங். வேலாயுத ,,
பாடியான் சுப்புராய ,,
க. மு. க. கந்தசாமி ,,
நல்ல. மாணிக்க ,,
மன். கந்தசாமி ,,
புனு. வி. பழனியாண்டி ,,
ஆனையான் ச. துரைசாமி ,,
பாடியான் ஆறுமுக ,,
மன்னன் நடேச ,,
பொன். வெங்கடாசல ,,
காட். சபாபதி ,,

#### திரு ஆமத்தூர்.

சி. அருணசல ,,
நடேச ,,
முருகேச ,,

#### கல்லாலம் பூண்டி.

பொ. மு. வெ. முனுசாமி ,,



பொ. ச. பொன்னுசாமிமுதலியார்
தங். கு. சுப்புராய ,,
வீ. குப்புசாமி ,,
மு. வீ. பட்டு ,,
செ. அ. சுப்புராய ,,
மூலை. ச. குப்புசாமி ,,
கொட். மு. குப்புசாமி ,,
பண். மு. சுப்பிரமணிய ,,
நாட். ச. பழனிவேல் ,,
மூலை. பொ. வீராசாமி ,,
மணி. மு. மொட்டைசாமி ,,
கு. பாவாடை ,,
க. வே. கும்பலிங்க ,,
மூலை. குழந்தைசாமி ,,
செ. அ. வெங்கடாஜல ,,
மூலை. ஆ. வெங்கடாஜல ,,
மு. சங். ஆறுமுக ,,
செ. கு. அம்பலவாண ,,
சிதம் ச. மாணிக்க ,,
பொ. மு. வெ. அருணசல ,,
பண். அ. நடேச ,,
புது குமாரசாமி ,,
புது சோமசுந்தர ,,
தா. தா. அரங்கசாமி ,,
புதுவை ஏ. சண்முக ,,
மலை. கு. அருணசல ,,
மூலை. பொ. சுப்புராய ,,
மூலை வேல. பழனி ,,
செ. தெ. செங்கல்வராய ,,
மு. க. சின்னசாமி ,,
நம. சி. குப்புசாமி ,,
ஊ. மை. வை. இரத்தின ,,
செ. அ. வீராசாமி ,,
கு. துரை வயித்தியலிங்க ,,
வா. கு. முத்துகுமர ,,
கெ. மு. வயித்தியலிங்க ,,
அரி. சங்கர ,,
ள. தங்கவேல் ,,
நம. கு. குமாரசாமி ,,
மடு. சு. ஆறுமுக ,,
மடு. வே. முருகேச ,,
நமசி ந. வெங்கடாசல ,,
மணியம் கு. சண்முக ,,
மெய். ச. வெங்கடாஜல ,,
ஊ வெ. அருணசல ,,
மூலை. மு. முத்துக்குமர ,,
செ. பொ. முருகானந்த ,,
கொ. மு. சுப்புராய ,,
சுப்பு சீனுவாச ,,
சண் கோபால் ,,
முதலி. பொன். வீராசாமி ,,
ஊ. குழந்தைவேல் ,,
பெ. க. நடேச ,,
கா. குமாரகுரு ,,
புது. ச. முனுசாமி ,,

கொட் முத்துவேல் முதலியார்
ஊ ச. முனுசாமி ,,
ந கு. வயித்தியலிங்க ,,

#### தென்பேர்.

சீ. ரா. வேலாயுத ,,
ரா. முனுசாமி ,,
வில். ஆறுமுக ,,
கா. மு. நாராயணசாமி ,,
நம. வேதகிரி ,,
வே. நாராயணசாமி ,,
கதிர். க. சதாசிவ ,,
அண். அழகப்ப ,,
மாணி இராமசாமி ,,
கங். கோபால் ,,
க. அ. முனியப்ப ,,
பெ. ஆ. நாராயணசாமி ,,
சா. அ. நாராயணசாமி ,,
சித. அ. நடேச ,,
கோ. ரா. வேலாயுத ,,
வெ. அ. சண்முக ,,

#### T. புதுப்பாளையம்.

மு. பொ. துரைசாமி ,,
து. சுப்பிரமணிய ,,
குழ, சி, பொ. குழந்தை ,,
தி, கு. சின்னசாமி ,,
அ. குப்புசாமி ,,

#### ஐயங்கார்குளம்.

ஐ. திரு. வெங்கடாசல ,,

#### நுங்கம்பாக்கம் சென்னை.

C. S. இராமசாமி ,,

#### எலவனூர்.

சி. பெரியதம்பி ,,
மா. ஆறுமுக ,,
சி. அழகப்ப ,,
க. சி. பழனியப்ப ,,
வெ ரா. மாரியப்ப ,,
மி. ப. சின்னப்ப ,,
பொ. சி. இராமசாமி ,,
மொ, நாச்சியப்ப ,,
பு. க. பழனியப்ப ,,
கொ. வீ. மாரியப்ப ,,

#### பரமகுடி.

ம. ப. நா. இருளாண்டி ,,

#### கோலாம்பூர் F. M. S.

க. குமாரவேல் ,,
S. S. சௌரிராஜ ,,

#### கரிச்சிபாளையம்.

சால. மணிமுத்து ,,
சீ. ஆறுமுக ,,

#### குருசாமிப் பாளையம்.

K. M. செங்கோட முதலியார்

#### தீமிரி.

N. S. R. பொன்னுசாமி ,,

#### கோட்டாறு.

A. S. முத்தையா ,,
P. சுடலையாண்டி ,,
S. M. S. மாடசாமி ,,
S. சிவைலிங்க ,,
A. நீலகண்ட ,,
A. ராமசாமி ,,
S. மகாலிங்க ,,
P. வேலாயுத ,,

#### நாயக்கன்பேட்டை.

N. A. கந்தசாமி ,,

#### காரைக்கால்.

அ. ரா. முருகையா ,,
ஆ. சாமிகண்ணு ,,

#### தருமபுரி.

ஆ. கு உக்கு. அருணசல ,,

#### ஆண்டிமடம்.

S. N. K. சிவசிதம்பர ,,

#### நடுப்பாளையம்.

மு. நாச்சிமுத்து ,,

#### நாகப்பட்டணம்.

M. கோவிந்தசாமி ,,

#### வீரராகவபுரம்.

V. S. முத்தைய ,,

#### சமுத்திராயன்பேட்டை.

A. N. முனுசாமி ,,

#### நரசிங்கபுரம்.

தி. ரா. முத்து ,,

#### தக்கோலம்.

முதி. குப்புசாமி ,,
A. அருணசல ,,
N. சரவண ,,

#### திருமாற்பேறு.

ஐயாவரம். அருணசல ,,
கோடி. கணேச ,,
கோடி. அந்தாரி ,,
பழனி குளப்ப ,,

#### திருக்கழுக்குன்றம்.

வே. அப்பு ,,—

#### படப்பை.

மு. வி. மாணிக்க முதலியார்

#### உக்கல்.

க. கதிர்வேல் ,,

## தலைச்சங்கத்துக்கு வரவு விவரம்—மகமை உண்டியல் வசூல்.

**சைதாப்பேட்டை**

| | | | |
|---|---|---|---|
| பெஸ்ட் பனியக்காட்டுக் கம்பெனி ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கு வரவு ... | 14 | 13 | 6 |

**பெரிய காஞ்சிபுரம்.**

| | | | |
|---|---|---|---|
| தி. அரு. அருணாசல முதலியார் அவர்கள், ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கு வரவு .... | 100 | 0 | 0 |

**கிளைச்சங்கக் கட்டணங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| மேலவலம்பேட்டை .... | 5 | 0 | 0 |
| மாணும்பதி ... | 15 | 0 | 0 |
| பொன்னூர் ... | 12 | 8 | 0 |
| மருதவரைகீழல் ... | 5 | 0 | 0 |
| ஊற்றுக்குழி .... | 5 | 0 | 0 |
| கண்ரச்சேரி .... | 5 | 0 | 0 |
| திருமங்கல் .... | 5 | 0 | 0 |
| திருச்செங்கோடு .... | 5 | 0 | 0 |
| பவானி (வாலிபர்) .... | 5 | 0 | 0 |
| கோடம்பாக்கம் ... | 3 | 0 | 0 |
| சித்தோடு .... | 5 | 0 | 0 |
| கொடுங்காலூர் ... | 7 | 0 | 0 |
| திருப்பத்தூர் ... | 10 | 0 | 0 |
| மண்ணச்சநல்லூர் ... | 5 | 0 | 0 |
| திருவாரூர் ... | 5 | 0 | 0 |
| வல்லிபுரத்தான் பாளையம் .... | 5 | 0 | 0 |
| ஈரோடு ... | 10 | 0 | 0 |
| சைதாப்பேட்டை ... | 15 | 0 | 0 |
| திருவல்லிக்கேணி ... | 5 | 0 | 0 |

### மகா கும்பாபிஷேகம்

விபவவருடம் தைமாதம் 9-தேதி (21-1-29)ல் கும்பகோணத்திற் கடுத்த திருநாகேச்சுரத்தில் எழுந்தருளியிரா நின்ற ஸ்ரீ நாகநாதீஸ்வரருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும். அவ்வமயம் அன்பர் வருக.

### 24-12-28-ல் வெளிப்போந்த சித்திரபந்தனம் நெம்பர்—1-க்கு விடைகள்.

இடமிருந்துவலம் :—1. ஆதித்தன். 2. சந்திரன். 3. சத்தி. 4. தமசு. 5. தவசி. 6. வசி. 7. வேங்கை. 8. ஆடு. 9. குலை. 10. பந்து. 11. கவிதை. 12. விரை. 13. ஆமா. 14. பெண். 15. கைதை. 16. மாரி. 17. அத்தி. 18. அதிதி. 19. வன்மை. 20. பரவை. 21. கர. 22. சுதன். 23. மயன். 24. மதிமகன். 25. காழியூரன். வலமிருந்து இடம் :—26. சிவ. 27. ரசம். 28. ததைகை. 21. கணி. மேலிருந்து கீழ் :—29. திதி. 30. ரதம். 31. சுரர் குரு. 32. கைலை. 33. தாவு. 34. குதை. 35. திரி. 36. விசுவாசு. 37. சுக்கிரன். 38. திதி. 3 சதமகன். 11. கங்கை. 13. ஆத்மா. 14. மாதிரி. 21. கயன். கீழிருந்து மேல் :—39. சமன். 40. தலை. 41. தின்மை. 42. ரமணி. 24. மதன். 28. தந்தை. திருமலைராயன்பட்டினம், கண்டாச்சிபுரம், கரவெட்டி, உன்னியூர் முதலிய இடங்களிலிருந்தும் இன்னும் அனேகஇடங்களிலிருந்தும் வந்த விடைகளைத் தமிழ் ஆராய்ச்சிப்படிப் பரிசோதித்துப் பிரைஸ் போட்டதில் கீழ்கண்ட விவரப்படி பிரைஸ்கள் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

**பிரைஸ் கிடைத்தவர்கள் பெயர்.**

**திருப்பெருந்துறைப் புராணம்.**

1. திரு. த. மாணிக்க முதலியார்—விரூர் போர்டு ஸ்கூல் எட்மாஸ்டர்.

**திருமுருகாற்றுப்படை.**

2. ப. க. தங்கவேலு முதலியார்—உத்திரன் மேரூர்.

**திருவாசகம்.**

3. ப. க. வீரபத்திர முதலியார்—உ. காரியதரிசி, செங்குந்தர் சங்கம், உன்னியூர்.
4. S. சோமசுந்தரம் பிள்ளை—சூபரின்டெண்டிங் இஞ்சினியர் ஆபீஸ், கோயம்முத்தூர்.
5. S. மன்னமுத்து மன்றாடியார், விநாயக சன்மார்க்க சங்கம் மானேஜர் மருதவரைகீழல், வடவழி.
6. இ. முத்துகிருஷ்ண முதலியார், இரணியசித்தி.

இப்படிக்கு,
இ. சம்பந்த மூர்த்தி முதலியார், காரியதரிசி,
செங்குந்தர் சங்கம், மாணும்பதி.

## அநுதாபம்

### இருதலைவர் சிங்கங்கள் மறைந்தனர்.

வட இந்தியத் தலைவர்களென் பாஞ்சால சிங்கமெனப் பெயர்பெற்று, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தேசாபிமானப் பிரசாரஞ்செய்து, இந்திய அரசாங்கத்திலும், இந்தியரது வாழ்க்கையிலும் உண்மையினையும், தூய்மையினையும், ஞாயத்தினையும், நிலைநாட்ட ஏறக்குறைய 30 வருடங்களுக்கு உழைத்து வந்த தேசாபிமான சிலாகிய லாலா லஜபதிராய் சென்ற மாதம் இறந்தமை குறித்துப் பெரிதும் வருந்துகின்றோம்.

தென்னிந்திய தேசாபிமானச்சிங்கமெனவும், பார்ப்பனரல்லாத பெருங் கூட்டத்தவரின் முடிசூடா மன்னரெனவும், ஒப்பற்ற இராஜ தந்திரியெனவும், ஆந்திரப்புலமையில் தலைசிறந்தவரெனவும் பல்லோராலும் போற்றப்படும் பானகல் மன்னர் இம்மாதம் நம்மை விடுத்து விண்ணுலகமடைந்தமைக்கு எமது ஆற்றொணாத்துயரைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### செங்குந்த திலகர்கள் மறைந்தனர்.

செங்குந்த குலாபிமானிகளுள் வயதிற் சிறியவரேனும், அறிவிலும் ஆதரவிலும் பெரியாராகித் திலங்கி, தாம் பிணியுற்று மெலிந்துகிடந்த சமயங்களிலும் நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்வதில் ஒரு சிறிதும் தளராசவருமான மஞ்சட்கொல்லை தி. அருணாசல முதலியார் அவர்கள் மிகவும் இளம் வயதில் தமது தந்தையினையும் தமயனாரையும் மற்றுமுள்ள சுற்றத்தவரினையும் நண்பர்களையும் ஏங்கவிடுத்து இம்மாதம் விண்ணுலகமடைந்தமையைக் வெளியிட எமக்குத் துக்கமேலிடுகின்றது. எமது அனுதாபத்தினை அவரது குடும்பத்தினருக்கு அதிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

24-12-28ல் திருவல்லிக்கேணி ஸ்ரீ நடராஜ பக்தஜன சபைத்தலைவரும், தமிழ்ப்பலவரும், செங்குந்த குலதிலகருமாகிய தெய்வநாயக அண்ணுசாமி முதலியார் காலஞ்சென்றதைக் குறித்து நாம் அனுதாபப்படுகிறோம்.

நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க நிருவாகசபை அங்கத்தவரான திருமயிலாப்பூர் திரு. M. சரவணமுதலியார் அவர்கள் தந்தை முத்துவேல் முதலியார் அவர்கள் 31-12-28-ல் சிவபதமடைந்தமையைக் கேட்டு மிகவும் அனுதாபப்படுகிறோம்.-ப.-ர்.

## மதிப்புரை.

### ஜகன்மோகினி.

இம்மாதப் பத்திரிகையானது அரிய செந்தமிழ் நாவல்களைப் பாகம் பாகமாகத் தமிழுலகில் பரப்புவதற்குச் சென்னை வை. மு. கோதைநாயகியம்மையாரால் திருவல்லிக்கேணியில் வெளியிடப்படுகின்றது. மிகவும் குறைந்த சந்தாவாகிய 1½ ரூபாய்க்கு ஒவ்வொரு வருடமும் 500 பக்கத்துக்குக் குறையாத ஓர் இனிய செந்தமிழ் நாவல் இப்பத்திரிகையில் வெளிவருகின்றது.

எமக்கு மாற்றுப் பத்திரிகையாகவந்து சென்ற மாதத்தோடு முடிந்த 5-வது தொகுதியில் ராதாமணி என்னும் அழகிய கதையைப் படித்து யாம் பெரிதும் மகிழ்ந்தோம்.

இந்நாவல் தற்கால நாகரீகப் போக்கிற்கு இசைந்ததாயும், படிப்போரது கவனத்தை காந்தம் ஊசியைப் பிணிப்பதுபோல் பிணிப்பதாயும், பெண்மக்களும் ஆண்மக்களும் வெகு களிப்போடு படித்து மகிழக்கூடிய நகைச் சுவை ததும்புமாறும் அமைந்திருக்கின்றது. ப. ர்.

## தமிழ்ப் பொழில்

தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினின்று வரும் இனிய செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

**கையொப்பம் : முன்பணம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆயுள் வரி | ரூ. 25 | 0 | | |
| | உள்நாடு. | | வெளிநாடு. | |
| ஆண்டு வரி | ரூ. | அ. | ரூ. | அ. |
| சங்க உறுப்பினருக்கும் பள்ளிக்கூட மாணவர்கட்கும் | 2 | 0 | 2 | 8 |
| ஏனையர்க்கு | 3 | 0 | 3 | 8 |
| தனி மலர் | 0 | 4 | 0 | 4 |

இதழாசிரியர்.
தமிழ்ப் பொழில்,
கருந்திட்டைக்குடி, தஞ்சை.

## சித்தாந்தம்.

### ஓர் சிறந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை.

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பிலே திங்கடோறும் வெளிவரும் ஓர் உயர்ந்த தத்துவப் பத்திரிகை. சைவ சித்தாந்தத்தின் உண்மை நிலையை எடுத்துரைப்பது; செந்தமிழ் நடையிலே தெளிவாக எழுதப்படும் பல பல இனிய அரிய கட்டுரைகளையும் ஆங்காங்குக் கொண்டு மிளிர்வது; தமிழறிவைப் பெருக்குவதற்கும் சைவ உண்மைகளை உணர்வதற்கும் ஒரு பெருந் துணையாயது. 24 பக்கங்கள் அடங்கிய பெரிய பத்திரிகை பளபளப்பான காகிதத்திலே அச்சிடப்பட்டு வருகிறது.

இதன் ஆசிரியர் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களாவார்.

ஆண்டுக் கையொப்பம் தபாற்கூலியுள்பட ரூ. 1-8.
வெளி நாடுகளுக்குத் தபாற்கூலியுள்பட ரூ. 2.

சைவமக்களே முந்துங்கள் நும் சமயத்தை ஆதரிக்க முந்துங்கள்.

சித்தாந்தம் ஆபீஸ்,
88, திருப்பள்ளித் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

**விபவஆு தைமீ** (1929ஆு ஜனவரிமீ-1929ஆு ஜனவரிமீ) உத்திராயனம், ஹேமந்தருது.

| இங்கிலீஷ். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | நேத்திரம். | ஜீவன். | வா. ரோரா நந்த | யோகினி. | விசேட நாட்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | 1 | ஞா | திதி, 5-50 | தி, 3-55 | அ, 3-55 ம | 0 | 0 | திரி | வட | சங்காந்தி பண்டிகை |
| 14 | 2 | திங் | திரி, 8-10 | அ, 7-38 | சி, 60 | 0 | $\frac{1}{2}$ | சது | தெ-கி | மாட்டுப் பொங்கல் |
| 15 | 3 | செவ் | சது, 9-35 | ச, 10-15 | ம, 60 | 0 | $\frac{1}{2}$ | பஞ் | தெ-மே | கரிநாள் |
| 16 | 4 | புத | பஞ், 9-43 | பூ, 11-53 | அ, 11-53 சி | 1 | $\frac{1}{2}$ | சஷ் | தெற் | மாடு வாங்க |
| 17 | 5 | வியா | ஷஷ், 8-43 | உ, 12-20 | சி, 60 | 1 | $\frac{1}{2}$ | சப் | மேற் | சுப காரியம் செய்ய |
| 18 | 6 | வெ | ஸப், 6-35 | ரே, 11-43 | அ, 60 | 1 | $\frac{1}{2}$ | அஷ் | வ-மே | யாத்திரை செய்ய |
| 19 | 7 | சனி | அஷ், 3-13<br>நவ, 58-38 | அ, 9-48 | சி, 60 | 1 | $\frac{1}{2}$ | நவ | வ-கி | தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு ஈரோட்டில் கூடு |
| 20 | 8 | ஞா | தச, 52-58 | ப, 6-48 | சி, 60 | 2 | $\frac{1}{2}$ | தச | பூமி | கிருத்திகை |
| 21 | 9 | திங் | ஏகா, 46-15 | கி, *2-40<br>ரோ 57-38 | ம, 2-40 அ | 2 | 0 | ஏகா<br>துவா | கிழ | தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க பொதுக் கூட்டம் ஈரோட்டில் கூடும். |
| 22 | 10 | செவ் | துவா, 38-50 | மி, 51-48 | சி 51-48 ம | 2 | 1 | திர | வட | அவமாகம் |
| 23 | 11 | புத | திர, 30-53 | தி, 45-33 | சி, 60 | 2 | 1 | சது | தெ-கி | பிரதோஷம் |
| 24 | 12 | வியா | சது, 22-50 | பு, 39-23 | அ, 60 | 2 | 1 | பௌ | தெ-மே | பௌர்ணமி |
| 25 | 13 | வெ | ○, 14-85 | பூ, 33-30 | ம, 60 | 2 | 1 | பிர | தெற் | தைப்பூசம் |
| 26 | 14 | சனி | பிர, 8-0 | ஆ, 28-30 | ம, 28-30 அ | 2 | 1 | துதி | மேற் | புஷ்ய பகுளம் |
| 27 | 15 | ஞா | துதி, 2-3<br>திரி, 57-40 | ம, 24-48 | ம, 24-4 சி | 2 | 1 | திரி | வ-மே | அவமாகம் |
| 28 | 16 | திங் | சது, 55-10 | பூ, 22-53 | சி, 60 | 2 | 1 | சது | ஆகா | சங்கஷ்டகா சதுர்த்தி |
| 29 | 17 | செவ் | பஞ், 54-40 | உ, 22-50 | அ, 22-50 சி | 2 | 1 | பஞ் | பூமி | கரிநாள் |
| 30 | 18 | புத | சஷ், 56-25 | அ, 24-55 | ம, 2-455 சி | 2 | 0 | சஷ் | கிழ | |
| 31 | 19 | வியா | சப், 60-0 | சி, 29-0 | சி, 29-0 அ | 2 | $\frac{1}{2}$ | சப் | வ | திருதினஸ்பிருக் |
| 1 | 20 | வெ | சப், 0-13 | சு, 34-58 | சி 60 | 1 | $\frac{1}{2}$ | அ | வ | திஸ்ரேஷ்டகா |
| 2 | 21 | சனி | அஷ், 5-33 | வி, 42-5 | சி, 60 | 1 | $\frac{1}{2}$ | நவ | தெ-கி | திஸ்ரேஷ்டகா |
| 3 | 22 | ஞா | நவ, 11-55 | அ, 49-55 | ம, 60 | 1 | $\frac{1}{2}$ | ... | தெ-மே | குளம் வெட்ட |
| 4 | 23 | திங் | தச, 18-45 | கே, 58-13 | சி, 60 | 1 | $\frac{1}{2}$ | தச | தெற் | |
| 5 | 24 | செவ் | ஏகா, 25-35 | மூ, 60-0 | அ, 60 | 0 | $\frac{1}{2}$ | ஏகா | மேற் | திருதினஸ்பிருக் |
| 6 | 25 | புத | துவா, 31-23 | மூ, 5-8 | ம, 5-8 அ | 1 | $\frac{1}{2}$ | துவா | வ-மே | கடன் தீர்க்க |
| 7 | 26 | வியா | திர, 36-10 | பூ, 11-35 | சி, 60 | 0 | $\frac{1}{2}$ | திர | வ-கி | மாசசிவராத்திரி |
| 8 | 27 | வெ | சது, 39-40 | உ, 16-45 | சி, 16-45 ம | 0 | $\frac{1}{2}$ | சது | ஆகா | கிருஷியாரம்பம் |
| 9 | 28 | சனி | ● 42-0 | தி, 20-48 | சி, 60 | 0 | 0 | அமா | பூமி | சுத அம்மாவாசை |
| 10 | 29 | ஞா | பிர, 42-55 | அ, 28-35 | ம, 23-35 சி | 0 | 0 | பிரத | கிழ | அவமாகம் |
| 11 | 30 | திங் | துதி, 42-50 | ச, 25-20 | சி, 50-11 ம | 0 | 0 | துதி | வ | கும்பரவி |

(இடது ஓரம்: 1929ஆு ஜனவரிமீ — 13 முதல் 31 வரை; பிப்ரவரிமீ — 1 முதல் 11 வரை; விபவஆு தைமீ — 1 முதல் 19 வரை; மாசிமீ — 20 முதல் 30 வரை.)

தைமீ 1உ சங்கராந்தி பூஜை, 2உ பழனி முதலிய ஸ்தலங்களில் தஜாரோகணம், 5உ கலிக்காம நாயனர், 7-8 தேதிகளில் 'ஈரோட்டில் முதலாவது செங்குந்தர் மகாநாடு', 9உ 'ஈரோட்டில் தலைச்சங்கப் பொதுக் கூட்டம்', 10உ கண்ணப்ப நாயனர், 11உ அரிவாட்டாய நாயனர், 16உ சண்டேசுர நாயனர், 21உ திருநீலகண்ட நாயனர், தாயுமான ஸ்வாமிகள், 29உ அப்பூதியடிகள் நாயனர்.

129808

## சந்தாநேயர்களுக்கு அறிக்கை.

அநேக சந்தா நேயர்கள் தமது சந்தா தொகையைத் தாமே மணியார்டர் மூலமாகவோ நேரிலோ செலுத்திவிடுவதாகவும் வி. பி. அனுப்ப அவசியமில்லை யென்றும் எழுதியிருப்பதால், இம்மாதமும் 'மித்திரனை' வி. பி. யில் அனுப்பாமலிருக்கிறோம்.

ஆங்காங்குள்ள செங்குந்தர் சங்கக் காரியதரிசிகளைப் பாக்கித்தொகைகளைத் தத்தம் கிராமங்களிலிருந்து வாங்கி மொத்தமாக எமக்கு மணியார்டர் செய்தனுப்பும்படியாக வேண்டிக்கொள்ளுகின்றோம். நமது தலைச்சங்கப் பிரசாரகர்கள் திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியாரும், தி. அ. சண்முக முதலியாரும் இம்மாதமும் அடுத்த மாதமும் செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், கோயம்பத்தூர் ஜில்லாக்களில் பிரசாரஞ் செய்வார்கள். அவர்களிடமும் அந்தந்த ஜில்லாக்களிலுள்ள சந்தாநேயர்கள் தம் பாக்கிகளைச் செலுத்திவிடலாம்.

ம. சண்முகசுந்தர முதலியார்,
பத்திரிகாசிரியர்.

சென்னை.
1—1—29.

---


இ[illegible] வருஷ காலமாக [illegible]ன்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக்கணக்கான [illegible] பத்திரங்கள் பெற்று, தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று, அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களைச் சேல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதலிய குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் புகம் நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்



ஷண்முகம்

பட்டணம்பொடி

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

அநேக
மெடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதுரை.

முதல் தரமானது
பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் ரூ. அ. பை. | தபால் சார்ஜு ரூ. அ. பை. | பாக்கிங் ரூ. அ. பை. | மொத்தம் ரூ. அ. பை. |
|---|---|---|---|---|
| 8 | 1 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 0 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 0 |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீசை 1-க்கு ரூ. 3. ஸ்பெஷல் சரக்கு வீசை 1-க்கு ரூ. 4.
பாக்கிங் சார்ஜும், தபால் கூலியும் பிரத்தியேகமானது.

# தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு

செங்குந்த **வாலிபர் மகாநாடு** — செங்குந்த **வர்த்தகர் மகாநாடு**

## முதலிய மகாநாடுகளும்

**கைத்தொழில், வர்த்தகக் கண்காட்சிகளும், அடுத்த தை மாதம் 7, 8 தேதிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஈரோட்டில் நடைபெறும்.**

கொடியுயர்த்தும் பெரியார் : திரு. ம. த. சாமிநாத முதலியார், காஞ்சிபுரம்.

**அக்கிராசனர்கள்.**

சமூக மகாநாட்டுக்கு திரு. ஆ. வே. முத்தையப் முதலியார், பி.ஏ., புதுவை.
வர்த்தக மகாநாட்டுக்கு திரு. தெ. ப. கு. ஆறுமுக முதலியார், தென்காசி.
வாலிபர் மகாநாட்டுக்கு திரு. மா. வெ. பீமராஜ முதலியார், குடியேற்றம்.

**வரவேற்புச் சபைத்தலைவர்கள்.**

சமூக மகாநாட்டுக்கு திரு. V. S. செங்கோட்டைய முதலியார், கோயம்புத்தூர்.
வர்த்தகர் மகாநாட்டுக்கு திரு. V. V. C. R. கந்தப்ப முதலியார், திருச்செங்கோடு.
வாலிபர் மகாநாட்டுக்கு திரு. N. M. சண்முகசுந்தர முதலியார், ஈரோடு.

**பல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.**

**வருக ! வருக !! செங்குந்தர்களனைவரும் திரண்டு வருக !!!**

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the **South Indian Senguntha Mahajana Sangam, Madras**, at 31 Armenian Street, Madras, and is printed by **T. C. Nataraja Mudaliar at the Cambridge Press, 8/15-A, Armenian Street, Madras.**

...கயைத் தருவிப்பதோடு தமக்கு அறி... குலாபிமானிகளுள் மூவரையேனும் ...திரனுக்கு மூன்றுமாண்டிற்குப் புதுச் ...களாகச் சேர்த்துவைப்பாராயின் ...் குலத்தொண்டு என்றும் மறக்க ...கும்.

...னவே இம்மாதச் சஞ்சிகையில் ...ர்டர் கார்டுகள் ஒவ்வொரு சந்தா ...வைத்து அனுப்பி யிருக்கிறோம். ...ல் பழைய சந்தா நேயர்கள் மூன் ...திற்கும் ஆர்டர் அனுப்புமாறு ...ாள்ளப்படுகின்றனர். மற்றொன் ...திரனுக்குப் புதிதாகச் சேர்க்கும் ...ரின்பெயர்களை குறிப்பிட்டு அவ ...ாகையினையும் வசூலித்து அனுப் ...டிக்கொள்ளப்படுகின்றனர். இவ் ...ல்ல. ...யர்களின் தொகை பெருகுமானால் மூன்(ற)ாண்டில் நமது மித்திரனை அழகிய சித்திரப்படங்களோடும், நூதன முறைகளில் வரையப்பட்ட வியாசங்களோடும், நல்ல வெண்மையான காகிதத்தில் பக்கங்களை அதிகரித்து யாவரும் மெச்சும் வண்ணம் வெளியிடச் சாத்தியமாகும். இதற்கு அன்பர்கள் துணைபுரிவார்களாக.

முடியும் இவ்வாண்டினுக்குச் செலுத்த வேண்டிய சந்தாவினை இன்னும் 1500 நேயர்கள் செலுத்தாமலிருப்பதை வெளியிட மிகவும் வருந்துகின்றோம். உலகத்தில் நடைபெறும் ஒவ்வொரு பத்திரிகையும் சந்தா தொகையினை முன் பணமாகப் பெற்றே நடைபெறுகின்றது. அதேவிதமாக நமது மித்திரனும் நடைபெறுமாயின் அடிக்கடி பணமுட்டு ஏற்படாமல் வெகு சிலாக்கியமாகவே விளங்கும். இ... நமது சந்தாநேயர்கள் இப்பன்னிரண்ட... திரிகையைப் பெற்ற திருப்தியுடன் இ... மாண்டின் சந்தா தொகையாகிய ரூபாய் 1... நாம் மீண்டும் அவர்களை வருத்திக் கேட்கா... லிருக்கும்படி எமக்கு நேரே மணியார்டர் மூலம் அனுப்பித் தரும்படி வேண்டுகிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் மதராஸ் பாளையகாட் கம்பெனியின் கூட்டாளிகளாகிய செங்குந்த வள்ளல்கள் எழுவரும் நபருக்கு 100 ரூபாயாக மொத்தத்தில் இவ்வாண்டில் 700 ரூபாய் உதவி நமது மித்திரனை ஆதரிக்காதிருப்பின், நமது சந்தாநேயர்களின் அசிரத்தையினாலும் அபிமானக் குறைவினாலும் நமது பத்திரிகை நடத்துவதற்கு அடிக்கடி பணமுட்டு ஏற்பட்டிருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். மேற்குறித்த செங்குந்த வள்ளல்கள் எழுவருக்கும் நமது குலத்தவரின் நன்றி என்றும் உரியதாகுக.

முடிவில், இவ்வாண்டின் பத்திரிகையை அழகுபெறச் செய்வதற்கு அரிய கட்டுரைகளை அடிக்கடி வரைந்தனுப்பிய அன்பர்களுக்கு வந்தனமளிக்கின்றோம். நமது மித்திரனை வெளியிடுவதில் பத்திராசிரியர் பாரத்தினை எமக்குப் பதிலாகப் பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொண்டு எமக்குப் பேருதவியாற்றிவரும் எமது ஆப்த நண்பரும் நமது தலைச்சங்கத்துக்கு வயிர மிக்க தூண் போன்றவருமான திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களுக்கு எமது மனமுவந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல்.டி.,
பத்திராசிரியர்.

## தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு.

**தைமீ 7-8 தேதிகளில் ஈரோட்டில் கூடப் போகின்றது.**

### நமது முதலாவது மகாநாடு : தலைவர்.

விபவஸு தைமீ 7-8 தேதிகளில் ஈரோட்டில் கூடும் நமது தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு தற்கால நவீன முறையில் முதலாவதாகக் கூடுகிறபடியால் முதலாவது மகாநாடெனப்படுகிறது. புதுச்சேரி பிரஞ்சு அரசாங்கத்துக்கு இந்திய அமைச்சராகவுள்ள உயர்சைவத் திருவாளர் ஆ. வே. முத்தையா முதலியார் அவர்கள் பி. ஏ., மகாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றனர்.

### இதர மகாநாடுகள் : தலைவர்கள்.

மேற்குறித்த தேதிகளில் முதலாவது தென்னிந்திய செங்குந்தர் மகாநாட்டுக் கூட்டத்தின் இடையிடையே தென்னிந்திய செங்குந்த வியாபாரிகள் முதலாவது மகாநாடும், தென்னிந்திய செங்குந்த வாலிபர் முதலாவது மகாநாடும் நடைபெறும். வியாபாரிகள் மகாநாட்டிற்குத்



திருநெல்வேலி ஜில்லா பிரபல வியாபாரியும் பாங்கருமான உயர் சைவத் திருவாளர் தென்காசி ப. கு. ஆறுமுக முதலியார் அவர்களும், வாலிபர் மகாநாட்டிற்குக் குடியேற்றம் தாலுக்கா போர்டு மெம்பரும், மாஜி முனிசிபல் சேர்மனும், பிரபலமான மிராஸ்தாருமாகிய உயர் சைவத் திருவாளர் மா. வே. பீமராஜ முதலியார் அவர்களும் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றனர். இம்மகாநாடுகளின் தலைவர்களைக் குறித்த விவரங்கள் வேறோரிடத்தில் இன்னும்பிரபலமாக எழுதப்பெற்றிருக்கின்றன. இம்மூன்று மகாநாடுகளுக்கும் தனித்தனி வரவேற்புச் சபைத்தலைவா நியமிக்கப் பெற்றிருக்கின்றனர். பொது மகாநாட்டிற்கு உயர் சைவத் திருவாளர் சென்னிமலை V. S. செங்கோட்டைய முதலியார் அவர்களும் வியாபார மகாநாட்டிறகு உயர் சைவத் திருவாளர் திருச்செங்கோடு T. K. கந்தப்ப முதலியார் அவர்களும், வாலிபர் மகாநாட்டிறகு உயர் சைவத் திருவாளர் ஈரோட்டு ந. மு. சண்முக சுந்தர முதலியார் அவர்களும் வரவேற்புச் சபைததலைவாகளாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கின்றார்கள். இச்சீமான்கள் நமது மகாநாட்டினை வெகு விமரிசையாக நடத்தித்தர கங்கணங்கட்டிக்கொண்டு மிகுந்த ஊக்கத்தோடு பிரயாசைப்பட்டு வருகின்றனர். இவர்களின் சரித்திர விவரங்கள் அடுத்த மாதத்துச் சஞ்சிகையில் வெளிவரும்.

### இம்மகாநாடுகளின் அவசியம்.

மகாநாடு கூடவேண்டியதன் அவசியத்தைப் பற்றி நமது தலைச்சங்கம் பிரசார மூலமாயும், மித்திரன் மூலமாயும் பல தடவைகளில் தெரிவித்திருக்கிறது. மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய கல்வியிலும் செல்வத்திலும் நாம் மற்ற சகோதர இனத்தவரைவிட மிகவும் பின்னிட்டிருக்கிறோம். ஒற்றுமை என்பது தற்போது நமமிடத்தில் மிகவும் குறைந்திருக்கிறது. நாமெல்லாம் ஓரினத்தவர் என்ற உணர்ச்சியும், குலாபிமானமும போதிய அளவு இல்லாதவர்களா யிருக்கிறோம். பல காரணங்களால் நம்மவர் தொழிலும் நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டே வருகிறது. தொழிலில் போதிய வருமான மின்மையால் ஆயிரக்கணக்கானவாகள அன்னிய நாடுகளுக்குச் சென்று துன்பப்பட்டு ஜீவித்து வருகின்றனர். பண்டைக்காலத்தில் நாம் மிகப் பெருமையாய் வாழ்ந்தோமென்றும், நம்முள் பல பெரியோர்களிரு[illegible]தாகவென்றும் பேசிக்கொள்வதினால் யா[illegible] பயனுமில்லை. ஆகையால் பல ஜில்லாக்களிலும் வதியும் நம்மவர்கள் ஒருங்குகூடி, நமக்குள்ள குறைபாடுகளின்னவின்னவென்று தெரிந்து, அவற்றை எவ்வாறு போக்கிப் பல துறைகளிலும் எவ்விதம் முயன்று முன்னேற்ற மடைய வேண்டும் என்கிற விஷயங்களைக் குறித்து யோசிப்பதற்காகவே இப்போது இம் மகாநாடுகள் கூட்டப்படுகின்றன.

### தை மாதத்தில் கூடுவதேன்?

காங்கிரஸ், பல ஜாதீய மகாநாடுகள் முதலிய கூட்டங்கள் கூடுகிற கிறிஸ்ட்மஸ் விடுமுறை காலத்தில் நமது மகாநாட்டையும் கூட்டுவது உசிதமாயினும், ஷை விடுமுறையில் அதாவது மார்கழி மாதத்தில் நம்மவர்கள் தொழிலும் வியாபாரமும் சங்கராந்தியை முன்னிட்டுப் பரபரப்பாய் நடைபெறுவது வழக்கமாகையாலும், தைமீ த்தின் ஆரம்பத்தில் தொழிலிலும், நூல், ஜவுளி வியாபாரங்களிலும் ஓழிவிருக்குமாகையாலும், பெரும்பாலரான நம்மவர்கள் சௌகரியத்தை உத்தேசித்தே தைமீ 7, 8 தேதிகளில் மகாநாடு கூடவேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

### முதலில் ஈரோட்டில் கூடுவதேன் ?

தமிழ் ஜில்லாக்களிலும், மலையாளத்திலும் வசிக்கும் நம்மவர்கள் நாலாபக்கங்களிலுமிருந்து பெருந்திரளாக வரவேண்டுமென்பதை உத்தேசித்தே எல்லோருக்கும் சௌகரியமாயிருக்கும்படி மத்திய இடமாயும், பல பக்கங்களிலிருந்து வரும் ரெயில்வே லயன்கள் சந்திக்கும் பெரிய ஜங்ஷனுமாயிருக்கிற ஈரோட்டில் நம்மவர் முதலாவது மகாநாடு கூடவேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது. தெற்கிலும் தென்கிழக்கிலுமிருந்து வருவோர் திரிசிராப்பள்ளி வழியாகவும், புதுச்சேரி தென்னாற்காடு ஜில்லா முதலிய இடங்களிலிருந்து வருவோர், சென்னையிலிருந்து மலையாளஞ் செல்லும் லயனில் கலக்கும் விழுப்புரம் காட்பாடி வழியாகவும், கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வருவோர் சென்னை மலையாளம் லயன் வழியாகவும் ஈரோட்டிற்குவரச் சௌகரியமிருக்கிறது. நம்மவர்கள் பெருந்தொகையினராய் அதாவது சுமார் 80000 ஜனங்கள் வசிக்கும் கொங்குநாடென்று சொல்லப்படும் கோயமுத்தூர் ஜில்லாவில் ஈரோட்டு பிரபல வியாபாரஸ்தானமாகவுமிருக்[illegible]. கொங்குநாட்டவர்கள மற்றநாட்டா[illegible]லும் குலாபிமானமும், கட்டுப்